வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 13.09.2023 புதன்கிழமை | இதழ் : 277 | பக்கங்கள் : 14+VIII




# தமிழ் மக்களின் அபிலாசைகளை இலங்கை நிறைவேற்ற வேண்டும்!

## ஜெனிவாவில் இந்தியா வலியுறுத்து

ஜெனிவா, செப்ரெம்பர் 13

நீதி, சமத்துவம் மற்றும் சமாதானத்துக்கான தமிழ் மக்களின் அபிலாசைகளை இலங்கை அரசாங்கம் பூர்த்திசெய்யும். அரசமைப்புக்கான 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்தல் மற்றும் மாகாண சபைத் தேர்தல்களை நடத்துதல் ஆகிய கடப்பாடுகளை நிறைவேற்ற வேண்டும் என்று ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில் இந்தியா வலியுறுத்தியுள்ளது. 11

## 51/1 தீர்மானத்தில் நேர்மறையான வகிபாகத்தை காணமுடியவில்லை!

### மனித உரிமைகள் பேரவையில் சீனா

ஜெனிவா, செப். 13

இலங்கையில் மனித உரிமைகளை பாதுகாப்பதிலும் அவற்றை மேம்படுத்துவதிலும் 51/1 தீர்மானம் நேர்மறையானதொரு வகிபாகத்தைக் கொண்டிருக்கவில்லை என்று சீனா குற்றஞ் சாட்டியுள்ளது.

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் சீனப் பிரதிநிதி உரையாற்றியபோது அவர் மேற்கண்ட விடயத்தைத் தெரிவித்தார்.

நல்லிணக்கம், மீளக் கட்டியெழுப்பல், பயங்கரவாதத்தைத் தோற்கடித்தல், நலிவடைந்த 11

## சீனாவின் திட்டத்துக்கு போட்டியாக புதிய வாணிப பாதை உருவாகிறது!

### புதுடில்லியில் அறிவித்தார் பைடன்

புதுடில்லி, செப். 13

ரயில் சேவை மற்றும் துறைமுகங்கள் ஊடாக இந்தியாவை மத்திய கிழக்குடனும் ஐரோப்பாவுடனும் இணைக்கும் புதிய வாணிப மார்க்கம் ஒன்றை தொடங்கும் திட்டத்தை அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் இந்திய, சவூதி அரேபிய மற்றும் ஐக்கிய அரபு இராச்சியத்தின் தலைவர்களுடன் சேர்ந்து புதுடில்லியில் கடந்த வாரம் அறிவித்தார்.

இந்தத் திட்டம் "புதியதோர் 11



வரலாற்றுப் பிரசித்திபெற்ற நல்லூர் கந்தன் ஆலய சப்பை ரதத் திருவிழா நேற்று இடம்பெற்றபோது...

## அத்தியாவசிய சேவையாக ரயில் சேவை பிரகடனம்!

கொழும்பு, செப். 13

ரயில் சேவை அத்தியாவசிய சேவையாக மாற்றுவதற்கான வர்த்தமானி அறிவித்தல் நேற்றிரவு வெளியிடப்பட்டது.

ரயில் பணிப்புறக்கணிப்பால் மக்கள் எதிர்நோக்க வேண்டிய அசௌகரியங்களை தவிர்ப்பதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக 11

## நல்லூரானுக்கு இன்று தேர்!

யாழ்ப்பாணம், செப். 13

வரலாற்று பிரசித்தி பெற்ற நல்லூர் கந்த சுவாமி ஆலயத்தின் தேர்த் திருவிழா இன்று புதன் கிழமை காலை 6.15 மணிக்கு வசந்த மண்டப பூசையுடன் ஆரம்பமாகவுள்ளது.

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா கடந்த ஓகஸ்ட் 21ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. தொடர்ச்சியாக திருவிழாக்கள் நடைபெற்று வரும் நிலையில், இன்று தேர்த் திருவிழா நடைபெறவுள்ளது.

நாளை வியாழக் கிழமை தீர்த்தோற்சவம் நடைபெறவுள்ளது. (ஐ)

## 8 மாதங்களில் விபத்துகளால் 1,500 பேர் பலி!

கொழும்பு, செப். 13

இந்த ஆண்டில் ஓகஸ்ட் மாதம் வரையான 8 மாதங்களில் 1,427 வாகன விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன. இவற்றில் 1,500 பேர் உயிரிழந்தனர் என்று போக்குவரத்து மற்றும் வீதிப் பாதுகாப்புப் பிரிவின் பணிப்பாளர் பிரதி 11



## தையிட்டி காணி அளவீடு மீண்டும் இடைநிறுத்தம்!

யாழ்ப்பாணம், செப். 13

தையிட்டியில் காணி அளவீட்டு பணிகள் நேற்று முன்னெடுக்கப்படவிருந்த நிலையில் பொதுமக்களின் எதிர்ப்பை அடுத்து அந்த பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

தையிட்டியில் காணி அளவீட்டு பணிகள் நேற்று காலை முன்னெடுக்கப்பட இருந்தன. 11

## ரயிலின் மேலே அமர்ந்து பயணித்தவர் வீழ்ந்து பலி!

கொழும்பு, செப். 13

சனநெரிசலால் ரயிலின் மேலே ஏறியிருந்து அமர்ந்து பயணித்த ஒருவர் தவறி வீழ்ந்து உயிரிழந்தார்.

நேற்று காலை கண்டியிலிருந்து கொழும்பு சென்ற ரயிலில் பயணித்தவரே இவ்வாறு உயிரிழந்தார். கம்பஹா மொறகொடயை சேர்ந்த 11

## சாதாரண, உயர்தர பரீட்சை நடத்தப்படும்; தரங்கள் மாறும்!

கொழும்பு, செப். 13

கல்வி பொது தராதர சாதாரண தரம், உயர்தர பரீட்சைகள் நடத்தப்படும் தரங்களில் மாற்றம் செய்ய அரசாங்கம் தயாராகி வருகிறது என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். 11

## கொக்குத்தொடுவாய் புதைகுழி இதுவரை 19 எலும்புக்கூடுகள் மீட்பு!



முல்லைத்தீவு, செப். 13

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியில் தொடரும் அகழ்வாய்வில் நேற்று ஒரு எலும்புக்கூடு முழுமையாக மீட்கப்பட்டது. அத்துடன், கழிவுநீரை சுத்திகரித்து அருந்த பயன்படுத்தும் ரஷ்ய தயாரிப்பு நீர் சுத்தி கரிப்பு கருவி, துப்பாக்கி தோட்டா என்பவையும் மீட்கப்பட்டன. 11

# இப்படியும் நடக்கிறது

அண்மையில் ஒரு முக்கிய அரசியல் பிரமுகர் ஒருவர் அலுவலகம் வந்திருந்தார். அவர் அண்மையில் தற்போதைய அரசியல் தலைவர்கள் மீதான நம்பிக்கையீனத்தை வெளிப்படுத்தியிருந்ததை அவருக்கு நினைவுபடுத்தினேன்.

அவர் சொன்னார், தமது கூட்டணியிலேயே ஒரேயொருவர் மட்டும்தான் நேர்மையான தலைவர் என்று. அதாவது இன்று தமிழ் மக்கள் மாத்திரமன்றி தலைவர்கள் என்று சொல்லப்படுபவர்களும் தான் நம்பிக்கையிழந்து போயிருக்கின்றனர்.

அவர் வந்து சென்ற பின்னர் சில மணி நேரங்களில் நமது புளொட் தலைவரின் பேட்டி ஒன்றை பார்க்கமுடிந்து.

'இந்தியா - சீனா முறுகல் அதிகரிக்குமானால் தனிநாடு (தமிழீழம்) அமைவதற்கான சாத்தியம் உண்டு. இதற்கு நாங்களும் தயாராக இருக்க வேண்டும். தமிழ் மக்கள் பலமான அரசியல் அமைப்புகளை வைத்திருக்க வேண்டும்' என்று அந்தப் பேட்டியில் சித்தார்த்தன் வலியுறுத்தியிருந்தார்.

அவர் என்ன சொல்ல வருகிறார் என்பதை அறிந்துகொள்வதற்காக தொடர்ந்து கேட்டுக்கொண்டிருந்தேன். அவர் கூறியவற்றின் முக்கியமான பகுதிகளை வாசகர்கள் நேற்று முன்தினம் ஈழநாடுவின் தலைப்புச் செய்தியாகப் படித்திருப்பீர்கள்.

'தமிழீழத்தை அடைய முடியும் என்று நம்பித்தான் அன்று ஆயுதப் போராட்ட இயக்கங்களை நோக்கி நாம் சென்றோம். அன்று, இந்திய தரப்பினர் பலர் நேரடியாகக் கூறியிருந்தார்கள் தாங்கள் எந்த சந்தர்ப்பத்திலும் ஒரு தனிநாடு வருவதை ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று. இது ஒவ்வொரு இயக்கங்களுக்கும் தனித்தனியாக சொல்லப்பட்டது. மிகத் தெளிவாக இந்திய அரசின் மிக உயர்ந்த மட்டங்களிலிருந்து இது சொல்லப்பட்டது.
இருந்தாலும் நாங்கள் - அன்றிருந்த அரசு கூறலாம் வருங்காலங்களில் அதற்கு சாதகமான நிலை வரும் என்று கருதினோம். பூகோள அரசியல் தென்கிழக்காசியாவில் மாறும்போது எங்களுக்கு சாதகமான நிலைமை வரலாம். அப்போது எங்கள் இலக்கை - அபிலாசைகளை அடையலாம் என்ற நம்பிக்கையுடன் நாம் போராடினோம்.' என்கிறார் சித்தார்த்தன்.

அவர் என்ன சொல்ல வருகிறார் என்பதை அறிய அரசியல் ஞானம் தேவை என்பதல்ல. அதாவது தென்கிழக்காசியாவில் பூகோள அரசியல் மாறும்போது தமிழீழம் அமைவதை இந்தியா ஆதரிக்கும் என்று தாங்கள் நம்பிக்கொண்டிருந்ததாகக் கூறுகிறார் அவர்.

அதாவது, இது ஆயுதப் போராட்டம் நடந்துகொண்டிருந்த நான்கு தசாப்தங்களுக்கு முந்திய நிலை. ஆனால், இன்றும் அவர் அதையே நம்பிக்கொண்டிருப்பதை கவனிக்க வேண்டும்.

இலங்கை தமது கைகளை விட்டு விலகிச் செல்கின்றது என்ற நிலைமை ஒன்று இந்தியாவுக்கு ஏற்படுகின்ற போது இந்தியா தமிழீழம் அமைய உதவும் என்பது சித்தார்த்தனின் நம்பிக்கையாக இருக்க வேண்டும். தமிழீழம் அமைய என்பதல்ல அமைத்துத் தரும் என்கிறார் என்றே நினைக்கின்றேன்.

முதலாவது இத்தனை ஆண்டுகளில் இந்தியாவையும் சீனாவையும் சமதூரத்தில் வைத்து எப்படி காய்நகர்த்துவது என்ற இராஜதந்திரம் இலங்கைக்கு நன்கு தெரியும் என்பதை கவனத்தில் கொள்ளவேண்டும்.

அதுவல்ல இன்று நாம் இங்கே சொல்ல வருவது, அப்படியொரு நிலைமை வரும் போது நாங்கள் பலமாக இருக்க வேண்டும் என்றும் தமிழ் மக்கள் பலமான அரசியல் அமைப்புகளை வைத்திருக்கவேண்டும் எனவும் சித்தார்த்தன் கூறியிருப்பதை கவனிக்க வேண்டியிருக்கின்றது.

சித்தார்த்தன் சொல்வது போன்ற ஒரு நிலைமை வரும் என்று ஒரு பேச்சுக்கு வைத்துக் கொண்டாலும் இந்தியா தனது நலனை எப்போதும் கவனத்தில் எடுத்து வைத்திருக்கும் அது இந்தியாவின் நலனுக்கு விரோதமான எந்த காரியத்தையும் செய்யாது என்று நம்பிக்கை கொள்ளவேண்டும். அப்படியொரு நம்பிக்கையை கட்டியெழுப்பக்கூடிய தலைவர் ஒருவர் இன்று நம் மத்தியில் இருக்கின்றாரா என்பதை சித்தார்த்தன் முதலில் சிந்திக்க வேண்டாமா?

அவர் அந்த இலக்கை நோக்கி செல்ல வேண்டும் என்றுதான் சொல்ல வருகின்றார் என்றால், அவர் நினைக்கின்ற அந்த பூகோள அரசியல் நிலைமை வரும்வரை இந்த மண்ணில் மக்கள் தொடந்து வாழமுடியும் என்ற நம்பிக்கையை அல்லவா முதலில் கட்டிவளர்க்கவேண்டும்.

இன்று தினசரி நூறுக்கும் அதிகமான தமிழர்கள் நாட்டைவிட்டு வெளியேறிக் கொண்டிருக்கின்றனர். தினசரி நூறு எனில் மாதந்தோறும் மூவாயிரம் பேர் அதுவே வருடத்தில் முப்பத்து ஆறாயிரம் பேர். அவர்கள் இரண்டு வருடங்களில் அங்கு நிரந்தரமாக தங்கும் வீசாவை பெற்றதும் தத்தமது உறவுகளை அழைத்துக் கொள் வார்கள். ஆக, சில வருடங்களில் தாயகத்தில் எஞ்சப்போவது அன்றாடங் காய்ச்சிகளான அப் பாவித் தமிழர்கள் மட்டும் தான்.

அப்போது அவர்களுக்கு தேவையானது கோவணம்தான். பட்டுவேட்டி அல்ல. ஐந்து தசாப்தங்களுக்கு முதலிலும் பூகோள அரசியல் மாறும், இந்தியா தமிழீழத்தை தரும் என்று நம்பினோம். இப்போதும் அதையே நம்பிக்கொண்டு இன்னுமொரு ஐந்து தசாப்தங்களை கடத்தப்போகின்றோமோ?

**- ஊர்க்குருவி.**

# பாடசாலையில் ஆசிரியர் வெற்றிடத்தை நிவர்த்திக்குமாறு கோரி ஆர்ப்பாட்டம்!

கிளிநொச்சி, செப். 13

கிளிநொச்சி கோணாவில் மகா வித்தியாலயத்தில் காணப்படும் ஆசிரிய வெற்றிடங்களை நிவர்த்தி செய்யுமாறு கோரி மாணவர்களின் பெற்றோர்களால் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பாடசாலையின் நுழைவாயிலை மூடி குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கோணாவில் மகா வித்தியாலயத்துக்கான போதிய ஆசிரிய வளங்கள் நிவர்த்தி செய்யப்படாமையினால் மாணவர்களின் கல்வி பெரிதும் பாதிக்கப்படுவதாக போராட்டத்தில் ஈடுபட்ட பெற்றோர்கள் குறிப்பிட்டனர்.

குறித்த ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புமாறு கோரி பெற்றோர்களால் தொடர்ச்சியாக மாகாண

கல்வி திணைக்களம், வலய கல்வி அலுவலகம் ஆகியனவற்றிற்கும் முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இந்த நிலையில் குறித்த பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை உரிய அதிகாரிகள் நியமனம் செய்யும்போதும் நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் பாடசாலைக்கு சமுகம் தரவில்லை என்றும் இது தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றும் இதன்போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# கால்நடைகளுக்கான மருந்துகளின் விலையை குறைக்குமாறு கோரிக்கை

கொழும்பு, செப். 13

கால்நடைகளுக்கான சில மருந்துகளின் விலைகளை கட்டுப்படுத்தவதற்கான வேலைத்திட்டத்தை முன்னெடுக்குமாறு விவசாய அமைச்சர் மகிந்த அமரவீரவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தற்போது கால்நடைகளுக்கான மருந்துகளின் விலை வேகமாக அதிகரித்து வருவதால் கால்நடை மருத்துவர்கள் இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

இதற்கான கலந்துரையாடலொன்று விவசாய அமைச்சில் இடம்பெற்றுள்ளது. இந்தக் கலந்துரையாடலில் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் பணிப்பாளர்

நாயகம் மருத்துவர் ஹேமலி கொத்தலாவல, கால்நடை அபிவிருத்தி பிரிவின் அதிகாரிகள் மற்றும்

கால்நடை மருத்துவர் குழுவினர் கலந்துகொண்டிருந்தனர்.

ஆடு, கோழி, பன்றி, செம்மறி ஆடு, போன்ற விலங்குகளுக்கான தொற்று நோய்களை தடுக்கும்

மருந்துகளை பயன்படுத்துவது கட்டாயம் எனவும், ஆனால் தற்போது சந்தையில் அந்த மருந்துகளின்

விலை வேகமாக அதிகரித்துள்ளதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

(அ)

# ஆஸாத் மௌலானா மீது பெண் ஒருவர் வழக்கு!

மட்டக்களப்பு, செப். 13

கிழக்கு மாகாண முன்னாள் முதல்வரும் இராஜாங்க அமைச்சருமான சிவநேசதுரை சந்திரகாந்தனின் (பிள்ளையான்) சகாவாக இருந்த ஆஸாத் மௌலானா போலியான ஆவணங்களை சமர்ப்பித்து மோசடியான முறையில் தன்னைத் திருமணம் செய்து ஏமாற்றினார் என பெண் ஒருவர், கல்முனை நீதிவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

இந்த முறைப்பாட்டுக்கு அமைய நேற்று கல்முனை நீதிவான் நீதிமன்றில் குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையில் கல்முனை நீதிமன்ற நீதிவான் எம். எஸ். எம் சம்சுதீன் குறித்த பெண் தெரிவித்துள்ள குற்றச்சாட்டின் உண்மைத்தன்மை குறித்து விசாரணை மேற்கொண்டு மன்றிற்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டதுடன் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 26 ஆம் திகதி வரை குறித்த வழக்கை ஒத்திவைத்தார்.

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பகுதியைச் சேர்ந்த 35 வயது மதிக்கத்தக்க இளம்பெண் ஒருவரே தனது சகோதரர் சகிதம் சாய்ந்தமருது பொலிஸ் நிலையத்திற்கு வருகை தந்து ஆஸாத் மௌலானா மீது முறைப்பாடு மேற்கொண்டார்.

அதில், போலியான ஆவணங்களை சமர்ப்பித்து முதல் திருமணத்தை மறைத்து தன்னை மறுமணம் செய்துள்ளதாகவும் பின்னர் மட்டக்களப்பு தனியார் விருந்தினர் விடுதி ஒன்றிற்கு அழைத்து சென்று பல்வேறு ஆசை வார்த்தைகள் கூறி அங்கு சில நாட்கள் தங்க வைத்து குடும்பம் நடத்தினார் எனவும் பின்னர் தன்னை ஏமாற்றி தலைமைறைவாகி இருப்பதாகவும் முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் சனல் -4 ஆவணப்படத்தின் முக்கிய சாட்சியாக இந்த ஆசாத் மௌலானா தென்பட்டு சில தினங்களுக்கு பின்னர் இந்த முறைப்பாட்டை அவர் செய்துள்ளார். (அ)

## 36 ரயில் சேவைகள் ரத்து!

கொழும்பு, செப். 13

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து ரயில் இயக்குநர்கள் சங்கம், முன்னெடுத்த

பணிப்புறக்கணிப்பு காரணமாக நேற்று 36 ரயில் சேவைகள் இரத்து செய்யப்பட்டுள்ளன.

ரயில் திணைக்களத்தின் பேச்சாளர் இதனைத் தெரிவித்தார். அலுவலக ரயில்கள் உள்ளிட்ட 36 சேவைகள் இவ்வாறு இரத்தாகியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் தொடருந்து இயக்குநர்கள் சங்கம் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டு வருகின்றது. (அ)



உலக தற்கொலை தடுப்பு தினத்தை முன்னிட்டு கடந்த ஞாயிற்றுக்கிழமை ”கைகொடுக்கும் நன்பர்கள் - சிறீ லங்கா சுமித்திரயோ அமைப்பின் யாழ். கிளையின் ஏற்பாட்டில் பண்ணை சுற்றுவட்டப் பிரதேசத்தில் விழிப்புணர்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

ஈழநாடு
Eelanadu
13.09.2023 புதன்கிழமை
சோபகிருது வருடம், ஆவணி 27

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# கோட்டாபய ஆதரவில் கட்சி

பதவியிலிருந்து வெளியேறிய பின்னர் அமைதியாக இருந்த கோட்டாபய ராஜபக்ஷ மீளவும் அரசியல் செயல்பாடுகளில் இறங்கியிருக்கின்றார். தனக்கு நெருக்கமான ஒருவரை கொண்டு மௌபிம ஜனதா கட்சி என்னும் புதிய கட்சியொன்றை ஆதரிக்கவுள்ளார். இதன் மூலம், தனது ஆதரவில் இயங்கக் கூடியவர்களை ஒருங்கிணைக்கும் முயற்சியில் இறங்கியிருக்கின்றார். அதிகாரத்தை கைப்பற்றுவதற்காக சதிச் செயலில் ஈடுபட்டதான குற்றச்சாட்டுகளுக்கு மத்தியிலேயே கோட்டாபய ராஜபக்ஷ மீளவும் அரசியல் நடவடிக்கைகளில் துணிவாகக் களமிறங்கியிருக்கின்றார்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் களத்தை முன்வைத்தே இந்த நகர்வுகள் முன்னெடுக்கப்படுகின்றன. ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி தேர்தலை முன்வைத்து பல்வேறு நகர்வுகளை முன்னெடுத்துவரும் நிலையில் கோட்டாபய ராஜபக்ஷ மீளவும் ஓர் அரசியல் கட்சியை ஆதரிப்பதானது ராஜபக்ஷ குடும்பத்தினரின் செல்வாக்கின் கீழுள்ள கட்சியின் எதிர்காலம் உறுதியானதாக இல்லை என்பதையே காண்பிக்கின்றது.

கோட்டாபய அடித்தள சிங்கள மக்கள் மத்தியில் செல்வாக்குள்ள ஒருவராக இருப்பதற்கான வாய்ப்பு குறைவு. ஆனால், மத்திய தரவர்க்க சிங்களவர்கள் குறிப்பாக பௌத்த தேசியவாத சிந்தனை போக்குள்ள தரப்பினர் மத்தியில் கோட்டாபயவுக்கு செல்வாக்கு இருப்பதற்கான வாய்ப்பு உண்டு. அவர்களை மீளவும் ஒருங்கிணைப்பதற்கான ஓர் ஏற்பாடாக புதிய அரசியல் கட்சியை கோட்டாபய பயன்படுத்திக்கொள்ள வாய்ப்பு உண்டு. மக்கள் கிளர்ச்சிக்கு பின்னர் தன்னை நிறுத்து பார்க்கும் ஒரு முயற்சியாகவும்கூட இதனை கோட்டாபய பயன்படுத்த முயற்சிக்கலாம்.

கோட்டாபய ராஜபக்ஷவின் வீழ்ச்சி தென்பகுதி அரசியலின் ஸ்திர தன்மையை பல்வேறு வழிகளிலும் கேள்விக்கு உள்ளாக்கிவிட்டது. இவ்வாறானதொரு சூழலில் எந்தவொரு கட்சியும் தனித்து ஆட்சியமைக்கக் கூடிய சூழல் அண்மைக்காலத்தில் ஏற்படப் போவதில்லை. மறுபுறம் இந்த நிலைமையையே ரணில் விக்கிரமசிங்க பயன்படுத்திக் கொள்ள முயற்சிக்கின்றார். ராஜபக்ஷக்கள் பலமாக இருந்தால் ரணில் விக்கிரமசிங்க அதிகாரத்துக்கு ஒருபோதுமே வரமுடியாது. ஏனெனில், ரணில் அடித்தள சிங்கள மக்களின் நம்பிக்கை பெற்றிருக்கும் ஓர் அரசியல்வாதியல்ல. இந்த பின்புலத்தில் தென்பகுதி அரசியலில் ஏற்பட்டிருக்கும் குழப்ப நிலைதான் மறுபுறம் ரணிலின் பலமாக இருக்கின்றது.

இந்த நிலைமையை ராஜபக்ஷக்கள் சரியாகவே கணித்திருப்பர். ராஜபக்ஷக்களை பொறுத்தவரையில் தங்களால் கட்டுப்படுத்தக் கூடிய அரசியல் அணியொன்று இருக்கும் வரையில்தான் தாங்கள் பாதுகாப் பாக இருக்க முடியும். தாங்கள் மேலும் பலவீனப்பட்டால் தங்களை அனைவரும் இணைந்து இல்லாமல் செய்துவிடுவார்கள் என்தை அவர்கள் சரியாகவே புரிந்து வைத்திருக்கின்றனர். இந்த பின்னணி யிலேயே தங்களுக்கு ஆதரவான தரப்புகளை ஒருங்கிணைக்கின்றனர். எதிர்வரும் மாதங்களில் தென்பகுதியின் அரசியல் நகர்வுகள் வேக மெடுக்கும். ஆனால், மறுபுறம், தமிழ் கட்சிகளோ அடுத்தது என்ன - என்னும் கேள்விக்கான பதிலை தேட முடியாதவர்களாக சனல் - 4 தொடர்பில் உரையாடி நேரத்தை வீணாக்கிக் கொண்டிருக்கின்றனர்.

# வரியில்லாமல் மின்சார வாகனங்கள் இறக்குமதிக்கு அமைச்சரவை அனுமதி!

*கொழும்பு, செப். 13*

*வெளிநாட்டு முதலீட்டை ஈர்ப்பதற்காக மின்சார வாகனங்களை வரி யில்லா அடிப்படையில் இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.*

*நிதி பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி இந்த யோசனையை முன்வைத்துள்ளார்.*

*தற்போதுள்ள முதலீட்டு வாரிய நிறுவனங்களின் முதலீட்டாளர்களை தக்க வைத்தல் மற்றும் விரிவாக்குதல் ஆகியவற்றின் கீழ் முதலீட்டை ஈர்ப்பதற்காக இந்த திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது.*

*30 ஆயிரம் அமெரிக்க டொலருக்கு மேற்படாத காப்புறுதி மற்றும் கப்பல் கட்டணங்களுடன் கூடிய புதிய மின்சார வாகனத்தை இறக்குமதி செய்வதற்கு சுங்க வரியற்ற அடிப்படையில் அனுமதி வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ)*

# லிபரல் ஜனநாயகக் கட்சியை பொறுப்பேற்ற நிமல் லான்சா

*கொழும்பு, செப். 13*

*பாராளுமன்றத்தில் சுயாதீன அணியில் செயல்பட்டு வரும் பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா தமது அணியின் எதிர்கால அரசியல் நடவடிக்கைகளுக்காக லிபரல் ஜனநாயகக் கட்சியை பெற்றுக்கொண்டுள்ளார் என்று தெரிய வருகின்றது.*

*லிபரல் கட்சி, ஐக்கிய தேசியக்கட்சியில் நீண்டகால உறுப்பினராக இருந்த கலாநிதி சானக அமரதுங்கவினால் கடந்த 1981 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட கட்சி.*



*பொதுத் தேர்தலை நான்கு ஆண்டுகளுக்கு ஒத்திவைத்து கடந்த 1982 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட்டதை எதிர்த்து ஐக்கிய தேசியக்கட்சியில் இருந்து விலகி லிபரல் கட்சியை ஆரம்பித்தார்.*

*இலங்கையில் தாராளமய பொருளாதார கொள்கையை பரப்பதற்கான நான்கு ஆண்டு முயற்சிக்கு பின்னர், குறிப்பாக அதிகாரங்களை பகிர்ந்து, மத்திய அரசாங்கத்தின அதிகாரங்களை குறைக்கும் அரசமைப்பு மறுசீரமைப்பு சம்பந்தமாக பரப்புரைகளை மேற்கொண்டு வந்த கலாநிதி அமரதுங்க மற்றும் அவருடன் இருந்தவர்கள் இணைந்து லிபரல் கட்சியை 1987ஆம் ஆண்டு அரசியல் கட்சியாக பதிவு செய்தனர்.*

*(அ)*

# உயிரிழந்த இளைஞரின் உயிருக்கு நாமே பொறுப்புக் கூறவேண்டும்!

## ரயில்வே துணைப் பொது முகாமையாளர்

*கொழும்பு, செப். 13*

*ரயிலின் கூரையில் ஏறி பயணித்தபோது விபத்துக்குள்ளாகி உயிரிழந்த இளைஞரின் உயிருக்கு தான் உள்ளிட்ட முழு துறையும் பொறுப்புக்கூறவேண்டும் என ரயில்வே துணைப் பொது மேலாளர் என்.ஜே. இதிபொலகே தெரிவித்துள்ளார்.*

*இதுபோன்ற சந்தர்ப்பங்களில் பொதுமக்கள் தங்கள் பாதுகாப்பு குறித்து சிந்தித்துச் செயல்பட வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.*

*தற்போது இடம்பெற்று வரும் முரண்பாடுகள் தொடர்பில் நேற்று அமைச்சரவை உபகுழுவுடன் கலந்துரையாடல் ஒன்றை வழங்குவதாக தெரிவித்திருந்த போதிலும் இந்த பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.*


*இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர்,*

*"வழக்கமாக காலை நேரத்தில் சுமார் 60 அலுவலக ரயில் பயணங்களை இயக்குகிறோம். இன்று இந்த வேலை நிறுத்தத்தால் 60 அலுவலக ரயில்களில் காலை 37 ரயில் பயணங்கள் மட்டுமே இயக்கப்பட்டது. இதன்படி , சுமார் 23 ரயில் பயணங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளன.*

*அனைத்து குறுகிய பயண ரயில்கள் மற்றும் அலுவலக ரயில் பயணங்கள் உட்பட சுமார் 39 ரயில் பயணங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளன. நீண்ட தூர பயணங் கள் மற்றும் பிற ரயில் பயணங்கள் தற்போது இயக்கப்படுகின்றன. குறுகிய பயண ரயில்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளன.*

*திணைக்கள மட்டத்தில் தீர்க்கக் கூடிய கோரிக்கைகள் அவர்களிடம் இல்லை. அது மேலும் சென்று பொது முகாமையாளர் இது தொடர்பில் தலையிட்டு அப்பிரச்னைக்கான மேலதிக நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார்- என்றார். (அ)*

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



செப்ரெம்பர் - 13 புதன்கிழமை
சோபகிருது வருடம் - ஆவணி 27
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 01.30
திதி : சதுர்த்தி




**மேடம்**
முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். புதுவேலை கிடைக்கும். நீண்ட நாட்களாக தள்ளிப்போன காரியங்கள் முடியும். உத்தியோகத்தில் சகஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும்.

**இடபம்**
குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார். நினைத்ததை முடிக்கும் நாள்.

**மிதுனம்**
குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். கைமாற்றாக வாங்கி இருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். தடைகள் உடைபடும் நாள்.

**கடகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒருவித படபடப்பு வந்து செல்லும். உத்தியோகத்தில் சக ஊழியர்களுடன் பனிப்போர் வந்து நீங்கும். இடம் பொருள் ஏவல் அறிந்து செயல்பட வேண்டிய நாள்.

**சிம்மம்**
கணவன்-மனைவிக்குள் வீண் விவாதம் வந்து செல்லும். வியாபாரத்தில் கடினமாக உழைத்து லாபம் பெறுவீர்கள். மறைமுக பிரச்னைகள் வந்து விலகும். எதிலும் கவனம் தேவைப்படும் நாள்.

**கன்னி**
குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். வியாபாரத்தில் புதுத் தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும். உத்தியோகத்தில் பாராட்டப்படுவீர்கள். சிறப்பான நாள்.

**துலாம்**
தவறு செய்பவர்களை தட்டிக்கேட்பீர்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். சக ஊழியர்களின் ஆதரவால் நினைத்ததை முடிப்பீர்கள். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**விருட்சிகம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். புதியவரின் நட்பால் ஆதாயமடைவீர்கள். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். இழந்த உரிமையை பெறுவீர்கள். மகிழ்ச்சியான நாள்.

**தனுசு**
சந்திராஷ்டமம் இருப்பதால் திடீர் திடீரென்று எதையோ இழந்ததைப் போல் இருப்பீர்கள். சின்ன சின்ன இடர்பாடுகளை சமாளிக்க வேண்டிய வரும். நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும்.

**மகரம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். வியாபாரத்தில் புகழ்பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி மதிப்பார். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**கும்பம்**
சாமர்த்தியமாகவும் சாதுர்யமாகவும் பேசி சாதிப்பீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்கள் எண்ணிக்கை அதிகரிக்கும். அதிகாரிகள் உங்களுக்கு முன்னுரிமை தருவார்கள். அமோகமான நாள்.

**மீனம்**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். சிக்கனமாக செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் அதிகரிக்கும். புதிய சலுகைகள் கிடைக்கும். கனவு நனவாகும்.

# தவறான பேட்டிகளைக் கொடுத்து அரசை கொச்சைப்படுத்த வேண்டாம்!

## தமிழிசையை கேட்கிறது தி. மு. க.

சென்னை, செப். 13

“தமிழகத்துக்கு வரும்போதெல்லாம் ஆளுநர் தமிழிசை ஏதாவது ஒரு பேட்டி கொடுக்க வேண்டும் என்பதற்காக, தன் அரசியல் நிலைப்பாட்டை தமிழகத்தில் தக்கவைத்து எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் ஆசையை டில்லி மேலிடத்துக்கு வெளிப்படுத்தும் விதமாக, தவறான பேட்டிகளை கொடுத்து, தி. மு. க. அரசை கொச்சைப்படுத்த வேண்டாம்”, என்று தி. மு. க. அமைப்பு செயலாளர் ஆர். எஸ். பாரதி கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில், “பிரதமர் நரேந்திர மோடி மீது தெலங்கானா மாநில ஆளுநர் தமிழிசை சௌந்திரராஜனுக்கு என்ன கோபம் என்று தெரியவில்லை!? தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலினை வம்புக்கு இழுத்து, “பாரதியாருக்கு மரியாதை செலுத்தத் தமிழக முதல்வருக்கு நேரமில்லையா” என்று கேட்டிருக்கிறார்.

அத்துடன், நிற்கவில்லை அவர். “அமெரிக்க அதிபர் ஜோ பைடனுடன் கைகுலுக்கத் தெரிந்த தமிழக முதல்வருக்கு” என்று கூறியிருக்கிறார். தமிழக முதல்வர் கைகுலுக்கிய இடம், ஒன்றியத்தில் ஆட்சியில் இருக்கும் பா. ஜ. கவும், அந்த ஆட்சியின் பிரதமராக இருக்கும் நரேந்திர மோடியும், ஏன், ஒன்றிய அமைச்சர்களும், “சாதனை” என்று பக்கத்துக்கு பக்கம் - தொலைக்காட்சிக்கு தொலைக்காட்சி விளம்பரம், பேட்டிகள் வாயிலாகப் பெருமைப்படுத்திக் கொண்ட ஜி-20 மாநாட்டு நிகழ்ச்சியில்தான்.

தெலுங்கானாவிலிருந்து தமிழகம் வந்தவுடன், குறைந்த பட்சம் கடந்தகால பத்திரிகைச் செய்திகளைப் படித்து விட்டு தி. மு. க அரசைக் குறைகூறுங்கள். அப்படியும் படிக்க இயலவில்லை என்றால், ஒரு மாநிலத்துக்கு இரு மாநிலம் என்ற நிலையில், ஆளுநர் பொறுப்பை வகிக்கும் சகோதரி தன் அதிகாரிகளிடமாவது, ”அவ்வப்போது தமிழக அரசியல் நிலவரங்களைச் சொல்லுங்கள்” என்று கேட்டுத் தெரிந்து கொண்டு, தி. மு. க. மீது ஆக்கப்பூர்வமான விமர்சனங்களை முன்வையுங்கள் - என்றார்.

(ஐ)

# மேகதாது அணை கட்டுவதற்கு தமிழகம் ஒப்புதல் அளிக்கக்கூடாது

சென்னை, செப். 13

மேகதாது அணை கட்டுவதற்கு தமிழக அரசு ஒருபோதும் ஒப்புதல் அளிக்கக்கூடாது. மாறாக, கூட்டாட்சி தத்துவத்துக்கு எதிராகப் பேசி வரும் கர்நாடக முதல்வர் சித்தராமையா மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மத்திய அரசிடம் தமிழக அரசு வலியுறுத்த வேண்டும் என பா. ம. க. நிறுவுநர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாது அணை கட்டப்படும் பகுதி கர்நாடக எல்லைக்குள் தான் உள்ளது என்பதால் அதை தமிழ்நாடு எதிர்க்கக் கூடாது. மத்திய அரசு மறு கேள்வி கேட்காமல் அனுமதி அளிக்க வேண்டும் என்று கர்நாடக முதல்வர் சித்தராமையா கூறியிருக்கிறார். அரசு நிர்வாகத் தின் அடிப்படை தெரியாமல் சித்தராமையா தெரிவித்துள்ள இந்தக் கருத்து கூட்டாட்சி முறையை சிதைத்து விடும்.

பல முறை அமைச்சராகவும் துணை முதல்வராகவும், பதவி வகித்தவரும் இரண்டாவது முறை முதல்வராக பதவி வகிப்பவருமான சித்தராமையா, இந்திய அரசமைப்பு சட்டம், கூட்டாட்சி தத்துவம், இரு மாநில நீர்ப் பகிர்வு உடன்பாடு ஆகியவற்றின் அடிப்படைகூட தெரியாமல் தமிழகத்துக்கு எதிராக கருத்துத் தெரிவித்திருப்பது தவறு; இது கண்டிக்கத்தக்கது.

மேகேதாட்டு அணை கட்டப்படும் பகுதி கர்நாடகத்தில் இருப்பதால், அது பற்றி தமிழ்நாடு கேள்வி எழுப்பக் கூடாது என்பது அறியாமையின் உச்சம் ஆகும். தமிழ்நாடும், கர்நாடகமும் இந்தியா என்ற நாட்டின் இரு மாநிலங்கள்தானே தவிர, இரு தனித்தனி நாடுகள் அல்ல. எனவே, கர்நாடகம் அதன் விருப்பம் போல செயல்பட முடியாது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்கு உட்பட்டு தான் செயல்பட முடியும் - என்றும் கூறியுள்ளார்.

(ஐ)

# சனாதனம் என்பது கொடுமையான கருத்தியல் என சகலரும் உணர்கின்றனர்


## விடுதலை சிறுத்தைகள் கட்சி

சென்னை, செப். 13

சனாதனம் என்பது கொடுமையான கருத்தியல் என்பதை அனைவரும் உணர்ந்து கொள்ள தொடங்கிவிட்டனர் - என்று விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் தெரிவித்துள்ளார.

நேற்று சென்னையில் செய்தியாளர்களிடம் அவர் கூறியவை வருமாறு,

கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக சனாதனத்துக்கு எதிராக பல்வேறு பரப்புரை மற்றும் போராட்டங்களை விடுதலை சிறுத்தைகள் கட்சி முன்னெடுத்து வருகிறது. விடுதலை சிறுத்தைகள் கட்சி பற்றவைத்த நெருப்பு இன்றைக்கு இந்தியா முழுவதும் பரவி எரிந்து கொண்டிருக்கிறது. சனாதனம் என்பது கொடுமையான கருத்தியல் என்பதை அனைவரும் உணர்ந்து கொள்ள தொடங்கிவிட்டனர்.



அமைச்சர் பி. கே. சேகர்பாபு, இந்து மதத்தின்மீது அதீதபற்று கொண்டவர். கடவுள் நம்பிக்கைமிக்கவர். அவர் இந்துகளுக்கு எதிரி என்பதைபோல தோற்றத்தை ஏற்படுத்த பா. ஜ. கவினர் முயல்கின்றனர். சாதாரண மக்களின் மத நம்பிக்கையை பற்றி யாரும் பேசவில்லை. சனாதனத்தை தங்களின் மூலதனமாக பயன்படுத்தி கொண்டு, அரசியல் ஆதாயம் தேடும் சங்பரிவார்களின் இந்துத்துவா செயல்திட்டத்தைதான் அனைவரும் விமர்சிக்கிறோம்.

2024 மக்களவை பொது தேர்தலில், சங்பரிவார் அமைப்புகளின் ஆட்சியை அப்புறப்படுத்துவதே ‘இந்தியா’ கூட்டணியின் சவாலாகும். இந்தியாவில் சமீபத்தில் நடைபெற்ற 7 சட்டப்பேரவை தேர்தல்களில் 4 இடங்களில் இந்தியா கூட்டணி வெற்றி பெற்றிருக்கிறது. அந்த வகையில் ‘இந்தியா’ கூட்டணிக்கு வரவேற்பும் ஆதரவும் பெருகி வருகிறது. இதனால் பா. ஜ. க. அச்சம் அடைந்துள்ளது. இந்தியா கூட்டணி மக்களவை தேர்தலில் மாபெரும் வெற்றி பெறும்.

முதல்வர்கள் மு. க. ஸ்டாலின், மம்தா பனர்ஜி ஆகியோர் ஜி- 20 மாநாட்டில் பங்கேற்றது கூட்டணியின் கொள்கையில் பாதிப்பை ஏற்படுத்தாது. குடியரசு தலைவரின் அழைப்பின்படி முதல்வர்களாக பங்கேற்றனர். இதில் அரசியல் உள்நோக்கம் கிடையாது. (ஐ)

# சனல் 4 காணொலி விவகாரம் சர்வதேச விசாரணைக்கு தயார்

## பொதுஜன பெரமுன அறிவிப்பு




கொழும்பு, செப். 13

**“சனல் 4 வெளியிட்டுள்ள காணொலி தொடர்பாக சர்வதேச விசாரணை இடம்பெற்றால், அதனை முழுமையாக ஏற்றுக் கொள்வோம்” என பொதுஜன பெரமுனவின் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.**

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேர்தலில் வெற்றிபெறத்தான், பொதுஜன பெரமுன இவ்வாறான சூழ்ச்சியில் ஈடுபட்டதாக ஒருவர் கூறுவாறாயின், எம்மைப் பொறுத்தவரை அவர் புத்தி சுவாதீனம் இல்லாதவர் என்றே கருதப்படும்.

ஏனெனில், 2018 இல் இடம்பெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலின்போது நாம் பாரிய வெற்றியடைந்தோம் என்பதை அனைவரும் அறிவார்கள். உள்நாட்டில் இதுதொடர்பாக விசாரணை செய்ய தகுதியான நபர்கள் உள்ளார்கள். இந்த நிலையில், அரசாங்கமானது சர்வதேச ரீதியாக தான் விசாரணை மேற்கொள்ள வேண்டும் என நினைத்தால், நாம் அதற்கு இணக்கம் தான் வெளியிடுவோம்.

இது பொதுஜன பெரமுன மீது சுமத்தப்பட்ட பொய்யான குற்றச்சாட்டு என்பதை நாம் நிரூபிப்போம். எமது கட்சியின் வளர்ச்சியைக் கண்டு சர்வதேச ரீதியாக சிலர் அஞ்சுவதால்தான் இவ்வாறான பொய்யான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன-என்றார். (அ)

# வினோ எம்.பிக்கு அழைப்பாணை

வவுனியா, செப். 13

எதிர்வரும் 14 ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோ நோகராதலிங்கத்துக்கு அழைப்பாணை வழங்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டம் குருந்தூர் மலையில் நீதிமன்ற கட்டளையை மீறி பௌத்த விகாரை நிர்மாணிக்கப்பட்டிருந்த நிலையில் பூசை வழிபாடுகளுக்காக சென்ற பௌத்த குருமாரின் வழிபாட்டுக்கு இடையூறு விளைவித்தமை மற்றும் அவமானப்படுத்திய குற்றச்சாட்டுக்களை முன்வைத்து சில பிக்குகள் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.

குறித்த முறைப்பாட்டுக்கமைவாக முல்லைத்தீவு பொலிஸாரினால் முல்லைத்தீவு நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த வழக்கில் பாராளுமன்ற உறுப்பினர்களான வினோ நோகராதலிங்கம், செல்வராசா கஜேந்திரன் உட்பட பலரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டு வழக்கு தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றது.

இந்தநிலையில் குறித்த வழக்கு தொடர்பாக எதிர்வரும் 14 ஆம் திகதி வியாழக்கிழமை முல்லைத்தீவு நீதிமன்றில் முன்னிலையாகுமாறு பாராளுமன்ற உறுப்பினர் எஸ். வினோ நோகராதலிங்கத்திற்கு முதன் முதலாக அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

# சர்வதேச விசாரணைக் குழுவின் விரிவான கண்காணிப்பு அவசியம்

## அருட்தந்தை சிறில் காமினி

கொழும்பு, செப். 13

சனல் 4 வெளியிட்டுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு ஜனாதிபதியால் குழு நியமிக்கப்படுதல் மற்றும் தெரிவுக்குழு நியமிக்கப்படுவதை முற்றாக நிராகரிப்பதாக அருட்தந்தை சிறில் காமினி தெரிவித்துள்ளார்.

கொழும்பு பேராயர் இல்லத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்-

சனல் 4 வினால் கடந்த நாட்களில் வெளியிடப்பட்ட உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான அறிக்கைகளில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு ஓய்வுபெற்ற நீதியரசர் தலைமையிலான குழு ஒன்றை அமைப்பதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுத்திருப்பதாக அறிய கிடைத்தது.

அதேபோன்று அதற்காக நாடாளுமன்ற தெரிவுக்குழு ஒன்றை அமைக்கவும் அரசாங்கம் எதிர்பார்ப்பதாக அறிய கிடைத்தது.

இன்னுமொரு தெரிவுக்குழு அல்லது ஜனாதிபதியால் நியமிக்கப்படும் குழுவால் இந்த விசாரணைகள் பாரபட்சம் இன்றி நேர்மையாக முன்னெடுக்கப்படும் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை.

இந்த கேலியான முயற்சிகளை நாங்கள் முற்றாக நிராகரிக்கின்றோம்.

செனல் 4 வெளியிட்டுள்ள தகவல்கள் மற்றும் குற்றச்சாட்டுக்கள் குறித்து மட்டுமல்ல அதற்மேல் விசாரணைகளை மேற்கொண்டு தெளிவாக ஆரோக்கியமாக பாரபட்சம் இன்றி ஒழுங்குமுறையான விரிவான விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும் என்று நாங்கள் வலியுறுத்துகின்றோம்.

ஆரோக்கியமான சர்வதேச விசாரணை குழுவின் விரிவான கண்காணிப்பு மற்றும் மேற்பார்வையின் கீழ் இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் - என்றார். (அ)

# 11 கோடி ரூபா பெறுமதியான 45 இலட்சம் சிகரெட் சிக்கியது!



கொழும்பு, செப். 13

சுமார் 11 கோடி ரூபா பெறுமதியான வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட 45 இலட்சம் சிகரெட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

சட்ட விரோதமான முறையில் இந்தியாவிலிருந்து கொழும்பு துறைமுகத்துக்கு கொள்கலனில் கொண்டுவரப்பட்டு சுங்கத்துக்கு அறிவிக்கப்படாமல் இவை கொழும்பு கிராண்ட்பாஸ், கிரேலைன் கொள்கலன் பிரிவில் வைக்கப்பட்டிருந்த நிலையிலேயே கைப்பற்றப்பட்டதாக சுங்க ஊடகப் பேச்சாளர் சீவலி அருக்கொட தெரிவித்தார்.

இந்திய சுங்கப் புலனாய்வுப் பிரிவினர் இலங்கையின் சுங்கப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளுக்கு வழங்கிய தகவலின் அடிப்படையிலேயே இவை கைப்பற்றப்பட்டன.

இந்தக் கொள்கலன் கடந்த மாதம் 9ஆம் திகதி இந்தியாவின் கட்டுப்பள்ள துறைமுகத்தில் இருந்து கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

சட்ட விரோத இறக்குமதி தொடர்பில், இந்த கொள்கலனை விடுவிக்க வந்த இருவர் சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சுங்கப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# ‘800’ படத்திலிருந்து ‘தோட்டக்காட்டான்’ வசனம் நீக்கம்! அமைச்சர் ஜீவனுக்கு இயக்குநர் எழுத்துமூலம் அறிவிப்பு!!

கொழும்பு, செப். 13

உலக சாதனை பந்துவீச்சாளரான முத்தையா முரளிதரனின் வாழ்க்கை படமான ‘800’ இல் இருந்து ‘தோட்டக்காட்டான்’ என்ற வசனத்தை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று அத்திரைப்படத்தின் இயக்குநரான எம்.எஸ்.ரீபதி தெரிவித்துள்ளார் என நம்பகரமான வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமானால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமையவே இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் அமைச்சர் ஜீவன் தொண்டமானுக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தகவலை அமைச்சரின் ஊடகப்பிரிவு உறுதிப்படுத்தியுள்ளது.

‘800’ படத்தின் முன்னோட்டம் அண்மையில் வெளியானது, இதில் நடிகர் நாசரால் ‘தோட்டக்காட்டான்’ என்ற வசனம் உச்சரிக்கப்படுகின்றது. இந்த சொல்லாடலுக்கு, வசனத்துக்கு மலையக தமிழர்கள் மத்தியில் கடும் எதிர்ப்பு வலுத்தது. சமூகத்தை கொச்சைப்படுத்தும் வகையில் அமைந்துள்ள இந்த வசனம் நீக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் வலுத்தது.

இந்நிலையில் ‘800’ முன்னோட்டத்தில் உள்ள இந்த வசனத்தை மாற்றியமைக்குமாறு மக்கள் சார்பில் படத்தின் இயக்குநரிடம் ஜீவன் தொண்டமான் கோரிக்கை விடுத்தார்.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து, ‘800’ திரைப்படத்தில் அந்த வசனம் நீக்கப்படும் என்ற உத்தரவாதம், எழுத்துமூலம் வழங்கப்பட்டுள்ளது என தெரியவருகின்றது.

அதேவேளை, தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் , பிரதித் தலைவர் திகாம்பரம் உள்ளிட்டவர்களும் இந்த நாகரீகமற்ற சொற்பதத்துக்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# செயற்கைக்கோள் தொழில்நுட்பம் மூலம் கடலில் எண்ணெய்க் கசிவுகளை கண்காணிப்பு ஒப்பந்தம்

கொழும்பு, செப். 13

செயற்கைக்கோள் தொழில்நுட்பம் மூலம் நாட்டின் கடல் எல்லைக்குள் நுழையும் கப்பல்களில் இருந்து எண்ணெய் கசிவு ஏற்படுகிறதா என்பதை கண்காணிக்க புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

பிரான்ஸ் அரசாங்கத்திற்கும் இலங்கை கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபைக்கும் இடையில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இலங்கைக்கு வரும் கப்பல்களில் இருந்து எண்ணெய்க் கசிவுகள் கடந்த பருவத்தில் பதிவாகியிருந்தன, இது கடல் வாழ் உயிரினங்களையும் கடல் சுற்றுச்சூழல் அமைப்பையும் கடுமையாகப் பாதித்தது.

இதனையடுத்து, இந்த நிலைமைகளை கண்காணிப்பது குறித்து கவனம் செலுத்தப்பட்டு, அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் நேற்று கைச்சாத்திடப்பட்டது. (அ)

# நீதிமன்றில் சான்றுப்பொருளாக இருந்த 50 கிலோ கஞ்சா மாயம்!

யாழ்ப்பாணம், செப். 13

மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு சான்றுப் பொருளான 50 கிலோ கஞ்சா மாயமாகி உள்ளது என தெல்லிப்பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தின் வழக்கு சான்றுப் பொருட்களுக்கு பொறுப்பான அதிகாரியினால் இந்த முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பகுதியில் கைப்பற்றப்பட்ட கஞ்சா தொடர்பான வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வரும் நிலையில் 50 கிலோ கஞ்சா களவாடப்பட்டுள்ளது அல்லது மாயமாகியுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் சான்றுப் பொருளே இவ்வாறு காணாமல் போய் உள்ளது.

இது தொடர்பான விரிவான விசாரணைகளை தெல்லிப்பளை பொலிசார் மாற்றும் யாழ் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# போரை முடிவுக்கு கொண்டுவர சர்வதேச நாடுகள் உதவியுள்ளன

## உண்மையை பகிரங்கப்படுத்திய ஓய்வு பெற்ற மூத்த தளபதி

**கொழும்பு, செப். 13**

**"தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரை முடிவுக்கு கொண்டுவருவதற்கு சர்வதேச நாடுகள் உதவின. ஏன், ஒசாமா பின் லேடன்கூட ஏதோவொரு விதத்தில் உதவினார் என்றே கூறவேண்டும். போர் முடிவு என்பது கூட்டு முயற்சியால் கிடைத்த வெற்றி, மாறாக தனிநபரால் அது சாத்தியப்படவில்லை."**

**-இவ்வாறு உள்நாட்டு போர் ஆரம்பம் முதல் அது மௌனிக்கப்படும்வரை போர் களத்தில் இருந்தார் எனக் கூறப்படும் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் பொனிபஸ் பெரேரா தெரிவித்தார்.**

இலங்கையில் இறுதிக்கட்ட போரை வழிநடத்திய இராணுவத் தளபதியான பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகாவால் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டு தொடர்பில் விசேட அறிவிப்பொன்றை விடுக்கும்போதே அவர், இந்த தகவலையும் வெளியிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

"2010 ஆம் ஆண்டில் சாலே என்பவருடன் இணைந்து பொனிபஸ் பெரேரா என்பவர் நாடு முழுவதும் குண்டுகளை வெடிக்கச்செய்தார் என பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா குற்றஞ்சாட்டியிருந்தார். இதனை வன்மையாகக் கண்டிக்கின்றேன். தகவலை நிராகரிக்கின்றேன். எவ்வித அடிப்படையும் இன்றி, பொறுப்பற்ற விதத்தில் முன்வைக்கப்பட்ட கருத்தே இது.

2009 இல் போர் முடிவடைந்த பின்னர், 2010 இல் நாட்டில் எங்கு குண்டு வெடிப்புச்சம்பவம் இடம்பெற்றது? 2010 இல் நான் கிழக்கு மாகாண கட்டளைத்தளபதியாக செயற்பட்டிருந்தேன். தேசிய பாதுகாப்பு தொடர்பான பட்டப்படிப்பை மேற்கொள்ள 2011 இல் சீனாவுக்கு சென்றுவிட்டேன். இக்காலப்பகுதியில் நாட்டில் எந்தவொரு இடத்திலும் குண்டுவெடிப்பு சம்பவம் இடம்பெறவில்லை. இதன்மூலம் பொன்சேகாவின் கூற்று போலியானது என்பது நிரூபனமாகின்றது. இராணுவத்தில் இருக்கும்போது என்னுடன் இருந்த முரண்பாடுகளால் அவர் இப்படியான



தொரு குற்றச்சாட்டை முன்வைத்திருக்கலாம்.

1981 இல் நான் இராணுவத்தில் இணைந்தேன், 83 இல் இருந்துதான் போர் ஆரம்பமானது. அன்று முதல் 2009வரை போர் களத்தில் இருந்தவன் நான். சிங்க படையணியில் முன்களச் சிப்பாயாக இருந்தேன். யாழ். கோட்டை மீட்பு, யாழ். மீட்பு, வன்னி மீட்பு, கிழக்கு மீட்பு என முக்கிய இராணுவ நடவடிக்கைகளில் பங்கேற்றிருந்தேன்.

போரை தனித்து முடிவுக்கு கொண்டுவந்ததாக பொன்சேகா கருதுகின்றார் போலும், போர் என்பது கூட்டு முயற்சியாகும்.

சிறப்புரிமைக்குள் ஒளிந்து கொண்டு பாராளுமன்றத்துக்குள் இருந்துகொண்டு இவ்வாறு கருத்து வெளியிடாமல் வெளியில் வந்து வெளியிட்டால் அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கக்கூடியதாக இருக்கும்.

போர் தொடர்பில் நான் பல கட்டுரைகளை எழுதியுள்ளேன். குறிப்பாக போரை ஜெனரல் ஒருவரால் செய்ய முடியாது, கூட்டு முயற்சியின் அவசியத்துவத்தை அதில் சுட்டிக்காட்டி இருந்தேன். இராணுவத்தால் மட்டும் போர் செய்ய முடியாது, கடற்படை இருக்க வேண்டும், விமானப்படை இருக்கவேண்டும், எமக்கு சிவில் பாதுகாப்பு படை இருந்தது, பொலிஸாரின் ஒத்துழைப்பு கிடைத்தது, சிறந்த அரசியல் தலைமைத்துவமும் இருக்க வேண்டும். பிக்குகள் எம்மை தைரியப்படுத்தினர். வைத்தியர்கள், தாதிமார் சிகிச்சையளித்தனர், மக்கள் வரி செலுத்தினர், தமது பிள்ளைகளை நாட்டுக்காக வழங்கினர்.

அமெரிக்கா எமக்கு தொழில்நுட்ப உதவிகளை வழங்கியது, சீனா மற்றும் பாகிஸ்தான் ஆயுதங்களை வழங்கின. இந்தியா புலனாய்வு தகவல்கள் உள்ளிட்ட சிற்சில உதவிகளை வழங்கியது. அதேபோல தற்போதைய ஜனாதிபதி, புலிகள் அமைப்பில் இருந்து கருணாவை பிரித்தெடுத்து அவ்வமைப்பை பலவீனப்படுத்தினார். இதுதான் கூட்டு முயற்சியாகும்.

பின்லேடன்கூட உதவினார் என்றே சொல்ல வேண்டும், அவர் அமெரிக்காமீது தாக்குதல் நடத்தியதால், பயங்கரவாதம் குறித்தான அமெரிக்காவின் நிலைப்பாடு மாறியது, நிதி முடக்கம் உட்பட பயங்கரவாத அமைப்புகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

போர் வெற்றி என்பது தனிநபருக்குரியது அல்ல. அது கூட்டு முயற்சிக்கு கிடைத்த வெற்றி. போர் வெற்றி என்பது உயிர்தியாகம் செய்த, அங்கவீனம் அடைந்த படையினருக்குதான் சென்றடைய வேண்டும்- என்றார்.

(அ)

# பெருந்தோட்ட தாக்குதல் சம்பவங்களுக்கு முடிவு கட்ட விசேட மாநாட்டைக் கூட்டுக!

## ஜனாதிபதிக்கு மனோ கடிதம்

கொழும்பு, செப். 13

பெருந்தோட்ட தாக்குதல் சம்பவங்களை முடிவுக்கு கொண்டுவர சகல தரப்பினையும் அழைத்து அவசர மாநாட்டை கூட்டுமாறுகோரி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதம் அனுப்பியுள்ளார் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன்.

மனோவால் அனுப்பட்டுள்ள கடிதத்தில் கூறப்பட்டுள்ளவை வருமாறு,

இரத்தினபுரி மாவட்ட காவத்தை பெருந்தோட்ட நிறுவன வெள்ளந்துரை தோட்டம், இதற்கு முன் மாத்தளை மாவட்டத்தில் நடைபெற்ற தாக்குதல் சம்பவங்கள் முடிவுக்கு வரவில்லை. இவை தொடர்கின்றன. இரத்தினபுரி, மாவட்ட செயலாளர் வசந்த குணரத்ன, "பெருந்தோட்டங்களுக்கு உள்ளே செயற்பட முடியவில்லை. தயவு செய்து அரசியல் உயர் மட்டத்தில் பேசி நடைமுறை அதிகாரத்தை பெற்றுத்தாருங்கள்" என என்னிடம் கோரினார். பெருந்தோட்ட அமைச்சர் ரமேஷ் பத்திரண "இந்த கம்பனிகாரர்களை கட்டுப்படுத்த முடியவில்லை" என்று ஜனாதிபதியிடம் முறையிடும்படி என்னிடம் கூறினார்.

இவை தொடர்பில் உங்களிடம் தொலைபேசியில் நேற்றிரவு உரையாடிய போது, எழுத்து மூலமான ஒரு முன்மொழிவை தரும்படி கேட்டீர்கள். அதன்படி அனைத்து தரப்பினரையும் அழைத்து அவசர மாநாடு நடத்தி, இந்த தாக்குதல் சம்பவங்களுக்கு நிரந்தரமான தீர்வை காணும்படி உங்களை மூலம் கோருகிறேன்.

ஜனாதிபதி, பொது நிர்வாக அமைச்சர் பிரதமர் தினேஷ் குணவர்தன, பெருந்தோட்ட அமைச்சர் ரமேஷ் பத்திரண, பொலிஸ்துறை அமைச்சர் டிரான் அலஸ், அரசு-எதிரணி தரப்புகளை சார்ந்த ஒன்பது மலையக எம்பிக்கள், கொழும்பு-களுத்துறை-கேகாலை-இரத்தினபுரி-நுவரேலியா-கண்டி-மாத்தளை-பதுளை-மொனராகலை-காலி-மாத்தறை-குருநாகலை ஆகிய 12 மாவட்டங்களின் செயலாளர்கள், பொலிஸ் மாஅதிபர், 22 பெருந்தோட்ட நிறுவன மேலாளர்கள், உள் குத்தகை பெற்றுள்ள தோட்ட நிறுவன மேலாளர்கள், 3 அரச பெருந்தோட்ட அதிகாரிகள், மலையக சிவில் சமூக பிரதிநிதிகள் ஆகியோரை ஜனாதிபதி செயலகத்துக்கு அழைத்து அவசர மாநாட்டை நடத்தி நிரந்தர தீர்வை காணுங்கள்.

இரத்தம், வியர்வை சிந்த இந்நாட்டை வளப்படுத்திய பெருந்தோட்ட மக்கள், இன்று 200 வருடங்களை இந்நாட்டில் நிறைவு செய்கிறார்கள். இந்நாட்டுக்கு அவர்களின் அவர்களது குறைத்து மதிப்பிட முடியாதது. மலையக தமிழர்கள் மத்தியில் பெருந்தோட்டங்களில் வாழ்கின்ற இம்மக்கள், எனது தொகுதி கொழும்பு அவிசாவளை முதல் சுமார் பன்னிரெண்டு மாவட்டங்களில் படும்பாடு மிக மோசமானதாகும். நீதிமன்ற ஆணை இல்லாமல் அவர்களது வீடுகள் உடைக்கப்படுகின்றன. ஆங்காங்கே நடைபெற்ற சம்பவங்கள் இப்போது பரவலாக நடைபெறுகின்றன. பல சம்பவங்கள் பகிரங்கமாவதில்லை. ஒருசிலவே வெளியில் தெரிய வருகின்றன.

தோட்டங்களில் வாழும் மக்களுக்கான வசிப்பிட, வாழ்வாதர காணி உரிமை தொடர்பில் நாம் கூடி பேசி கொள்கை முடிவு எடுக்க வேண்டும். அவை மாவட்ட செயலாளர்களுக்கும், பெருந்தோட்ட நிறுவனங்களுக்கும் அறிவிக்கப்பட வேண்டும். தயவு செய்து அவசர மாநாட்டை உங்கள் தலைமையில் கூட்டுங்கள்." - என்றுள்ளது. (அ)



காலஞ்சென்ற பெருமதிப்பிற்கும் பேரன்பிற்குமுரிய சுந்தரம் டிவகலாலா அவர்களின் நினைவாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ள

"மனிதம்"

டொக்டர் அருந்ததி ஸ்ரீரங்கநாதன் அவர்களின்
அருஸ்ரீ கலை அரங்கத்தின்
கருப்பொருள் நாட்டிய நிகழ்வு



காலம்: 16.09.2023
நேரம்: மாலை 5 மணி
இடம்: ஹீவர் மண்டபம், மருத்துவ பீடம், கொக்குவில்

சிறுநீரக நாள் பராமரிப்பு சத்திர சிகிச்சைக் கூடம்,
பல்கலைக்கழக சத்திர சிகிச்சைப் பிரிவு,
யாழ் போதனா வைத்தியசாலை.
நிதி உதவி நிகழ்வு

இலக்கை அடைய அனைவரது ஆதரவையும் அன்பளிப்பையும் வேண்டி நிற்கின்றோம்!

நுழைவுச் சீட்டுகள் கிடைக்கும் இடம்: பூபாலசிங்கம் புத்தகசாலை, மருத்துவபீடம்

-அமைப்பாளர் -
0776610761

# பயனுள்ள நிர்வாக சீர்திருத்தங்களை இலங்கையில் மேற்கொள்ளவேண்டும்

## இலங்கை தொடர்பான முக்கிய குழு அழைப்பு

ஜெனிவா, செப். 13

இலங்கையில் பயனுள்ள நிர்வாக சீர்திருத்தங்களுக்கு ஜெனீவாவின் மனித உரிமைகள் பேரவையின் இலங்கை தொடர்பான முக்கிய குழு அழைப்பு விடுத்துள்ளது.

அத்துடன் கருத்து வேறுபாடுகளை அடக்குவதற்கு இலங்கை அதிகாரிகள் சட்டங்களை தன்னிச்சையாக பயன்படுத்துவதையும் கண்டித்துள்ளது.

கனடா வடக்கு மசிடோனியா மலாவி மொண்டிநீக்ரோ ஐக்கிய இராச்சியம் மற்றும் அமெரிக்காவை உள்ளடக்கிய இலங்கை தொடர்பான முக்கிய குழு காணிப் பிரச்சினைகள் மற்றும் அரசியல் அதிகாரப் பகிர்வு தொடர்பாக இலங்கை முக்கியமான கடப்பாடுகளை செய்துள்ளதாகத் தெரிவித்துள்ளது.

இந்த அர்ப்பணிப்புகளை அர்த்தமுள்ள செயலாக மாற்றவும் நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட முடிவுகளை வழங்கவும் இலங்கையை தாம் ஊக்குவிப்பதாக அந்த குழு தெரிவித்துள்ளது.

எனினும் நீதி பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்திற்கான கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு இலங்கை இன்னும் நீண்ட தூரம் செல்ல வேண்டியுள்ளது என ஜெனீவாவில் உள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 54வது அமர்வின் போது இலங்கை தொடர்பான முக்கிய குழு தெரிவித்துள்ளது.

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவிற்கான தயாரிப்புகள் தொடர்பில் கருத்துரைத்துள்ள முக்கிய குழு சர்வதேச சிறந்த நடைமுறைகளுக்கு இணங்க பாதிக்கப்பட்ட அனைத்து சமூகங்களின் நம்பிக்கையைப் பெறுவதற்கும் நிலைமாறுகால நீதியை முன்னெடுக்கும் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தியுள்ளது.

அதேநேரம் சிவில் சமூகம் மற்றும் ஊடகவியலாளர்கள் மீதான தொடர்ச்சியான அச்சுறுத்தல் மற்றும் துன்புறுத்தல் சம்பவங்கள் மற்றும் எதிர்ப்பை அடக்குவதற்கு சட்டங்களை தன்னிச்சையாகப் பயன்படுத்துதல் ஆகியவற்றால் தாம் கவலையடைவதாகவும் முக்கிய குழு தெரிவித்துள்ளது.

(அ)

# போதைப்பொருள் ஒழிப்பு விவகாரத்தில் உணர்வு ரீதியான செயற்பாடு அவசியம்

## அமைச்சர் டக்ளஸ் வேண்டுகோள்





யாழ்ப்பாணம், செப். 13

**யாழ்ப்பாண மாவட்டத்தில் போதைப் பொருள் பாவனை மற்றும் பரவலை கட்டுப்படுத்துவதற்கு மாவட்ட மட்டத்திலான குழு ஒன்றினை அமைத்து இணைந்த நடவடிக்கையினை மேற்கொள்வதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

அரசாங்க அதிகாரிகள், வைத்திய அதிகாரிகள், பொலிஸார், மற்றும் பாதுகாப்பு தரப்பினர் உள்ளடக்கப்பட்டுள்ள குறித்த குழுவின் ஊடாக தகவல்களை பரிமாறி நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதற்கான ஆலோசனைகளை வழங்கிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாணத்தில் புனர்வாழ்வு நிலையம் அமைப்பது தொடர்பாகவும் அவதானம் செலுத்தினார்.

இதன்போது, கருத்து தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, போதைப் பொருள் பாவனை என்பது இளைய தலைமுறையினரின் எதிர்காலத்தினையே அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கி வருகின்றமையினால், அதனைக் கட்டுப்படுத்தும் முயற்சிகளில் அதிகாரிகள் உணர்வு ரீதியான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

மேலும், இக்கலந்துரையாடலில், யாழ் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் வனவளப் பாதுகாப்பு திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களம் ஆகியவற்றின் கட்டுப்பாட்டில் உள்ள காணிகளை விடுவிப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

மேலும், சட்ட விரோத மணல் அகழ்வினை கட்டுப்படுத்தல், முச்சக்கர வண்டிகளுக்கு மீற்றர் பொருத்துவது உட்பட பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன.

இக்கலந்துரையாடலில், மாவட்ட அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர்கள், சுகாதார தரப்பினர் உட்பட்ட அரச அதிகாரிகள் மற்றுமா பொலிஸ் மற்றும் பாதுகாப்பு தரப்பினரும் கலந்து கொண்டனர். (அ)



# இலங்கையில் போதைப்பொருள் குற்றங்களை தடுக்கவேண்டும்!

## வெளிவிவகார அமைச்சருக்கு ஐ.நா விளக்கம்

கொழும்பு, செப். 13

ஐக்கிய நாடுகள் போதைப் பொருள் மற்றும் குற்றங்களுக்கான தெற்காசிய நாடுகளின் பிராந்திய அலுவலக பிரதிநிதியான மார்கோ டீக்சீரா வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரியை சந்தித்தார்.

குறித்த சந்திப்பு வெளிவிவகார அமைச்சில் இடம்பெற்றது.

இந்த சந்திப்பின் போது, இலங்கையில் அதிகரித்துவரும் போதைப்பொருள் மற்றும் குற்றங்களுக்கான தடுப்பு நடவடிக்கைகளின் எதிர்காலச் செயற்பாடுகள் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், போதைப்பொருள் விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்தும் இந்த சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது.

இதேவேளை, ஐக்கிய நாடுகள் போதைப்பொருள் மற்றும் குற்றங்களுக்கான தெற்காசிய நாடுகளின் பிராந்திய அலுவலகம் தெற்காசியாவில் முன்னெடுத்துவரும் போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கைகள் மற்றும் விழிப்புணர்வுகள் குறித்தும் வெளிவிவகார அமைச்சருக்கு ஐ.நா. பிரதிநிதி சுட்டிக்காட்டினார். (அ)

# சுற்றுலாப் பயணிகளை அதிகரிக்க சிறந்த விமானக்கொள்கை அவசியம்

கொழும்பு, செப். 13

எதிர்வரும் 2029 ஆம் ஆண்டில் 5 மில்லியன் சுற்றுலாப்பயணிகளை நாட்டிற்கு வரவழைப்பதற்கான இலக்கினை அடைவதற்கு சிறந்த விமான கொள்கையொன்று அவசியமாகும் என சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதன் தலைவர் பிரியந்த பெர்னான்டோ இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் குறைந்தளவான விமான சேவைகளே உள்ளன.

புதிய மறுசீரமைப்பின் ஊடாக அதிகளவான விமான போக்குவரத்து இடமளிக்கப்படுமானால், வருடாந்தம் 5 மில்லியன் சுற்றுலாப்பயணிகளை இலங்கை கவரக்கூடிய வாய்ப்புள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் பிரியந்த பெர்னான்டோ தெரிவித்துள்ளார். (அ)

# அஸ்வெசும திட்டத்துக்கு தகுதி பெற்றுள்ள 62,462 பேரிடம் அடையாள அட்டை இல்லை

கொழும்பு, செப். 13

அஸ்வெசும திட்டத்துக்கு தகுதியடைந்த 62,462 பேரிடம் தேசிய அடையாள அட்டை இல்லை என தகவல் வெளியாகியுள்ளது.

இவ்வாறு அடையாள அட்டை இல்லாத அனைத்து பயனாளர்களுக்கும் வங்கிக் கணக்குகளை ஆரம்பிக்க சந்தர்ப்பங்களை வழங்குமாறு இலங்கை மத்திய வங்கியிடம் நலன்புரி நன்மைகள் சபை கோரிக்கை விடுத்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதன்படி, அஸ்வெசும திட்டத்தின் மூலம் நன்மைகளை பெற்றுக்கொள்வதற்கு வங்கிக் கணக்கு கட்டாயமாக்கப்பட்டுள்ளதுடன் குறித்த வங்கிக் கணக்கை ஆரம்பிக்க தேசிய அடையாள அட்டையும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இதேவேளை , ஆறு மாதங்களுக்குள் அனைத்து பயனாளர்களுக்கும் தேசிய அடையாள அட்டைகளை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு பாராளுமன்றத்தின் வழிமுறைகளுக்கான குழுவும் ஆட்பதிவுத் திணைக்களத்துக்குப் பரிந்துரை செய்துள்ளது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த ஆட்பதிவு ஆணையாளர் நாயகம் பிரதீப் சபுதந்திரி, பெறப்படும் விண்ணப்பங்களுக்கு ஏற்ப அடையாள அட்டைகள் வழங்கப்படும்.

அடையாள அட்டை இல்லாத அனைவருக்கும் விண்ணப்பிக்குமாறு பிரதேச செயலாளர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது" என தெரிவித்தார். (அ)

### ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்கள்

# உள்ளக விசாரணைகள் வெறுமனே காகிதங்களில் மாத்திரமே உள்ளன!

கொழும்பு, செப். 13

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான உள்ளக விசாரணைகள் வெறும் காகிதங்களில் மாத்திரமே உள்ளன. பாராளுமன்ற தெரிவுக்குழுக்களால் எதுவும் நடைபெற போவதில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகச்சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

இந்த ஊடகச்சந்திப்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு ரஞ்சித் மத்தும பண்டார அளித்த பதில்கள் வருமாறு:-

கேள்வி :செனல் 4 வின் ஆவணப்படம் குறித்து ஐக்கிய மக்கள் சக்தியின் நிலைப்பாடு என்ன?

பதில் : உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பாக விசாரணை நடத்துவதற்காக நாட்டில் பல ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டன.

பாராளுமன்ற தெரிவுக்குழு நியமிக்கப்பட்டது. மலல் கொடா ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. அவை காகிதங்களுக்கு மட்டுமே வரையறுக்கப்பட்டுள்ளன. விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவின் உண்மைகள் இதுவரை வெளிவரவில்லை.

பல சர்வதேச புலனாய்வு முகவரான்மை அமைப்புகள் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து விசாரணை நடத்த வந்தன.

இலங்கையில் நடைபெறும் விசாரணைகளில் எங்களுக்கு நம்பிக்கை இல்லை. எனவே, சர்வதேச விசாரணையொன்றை நடத்துமாறு கோருகிறோம். உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டவர்களே இந்நாட்டு பாதுகாப்புப் படைகளில் தற்போது உள்ளனர்.

கேள்வி : கோட்டாபய மீண்டும் அரசியலுக்கு வருவதாக பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன?

பதில் :கோட்டாபய ஆட்சியில் இருந்து விரட்டப்பட்ட ஒருவர். நாட்டு மக்களை பிச்சைக்காரர்களாக்கி விவசாயத்தை முற்றாக நாசமாக்கிய கோட்டாபய மக்களால் நிராகரிக்கப்பட்டுள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியும் பொதுஜன பெரமுனவும் கோட்டாபயவை நிராகரித்துள்ளனர்.

கேள்வி : சுகாதார அமைச்சருக்கு எதிராக முன்வைக்கப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு என்ன நடந்தது?

பதில் : சுகாதார அமைச்சில் இடம்பெற்றுவரும் மோசடி மற்றும் ஊழலை வெளிப்படுத்த வேண்டியது அவசியமே அதனூடாக எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், அதற்கு அமைச்சராலோ, அரசாங்கத்தாலோ பதில் சொல்ல முடியாது போனது. நம்பிக்கையில்லாப் பிரேரணை நிறைவேற்றப்படாவிட்டால் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் தமது பதவிகளை இழக்க நேரிடும்.

தமது பதவிகளை தக்கவைத்துக்கொள்ளவே ஆளுங்கட்சி உறுப்பினர்கள் நம்பிக்கையில்லாப் பிரேரணை எதிர்த்தனர்.

கேள்வி ஐக்கிய மக்கள் சக்தியின் குழு ஒன்று ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணையும் என ஐக்கிய தேசியக் கட்சி பெரும் நம்பிக்கை கொண்டுள்ளது?

பதில் : தற்போதைய ஜனாதிபதி, ஜனாதிபதி பதவிக்கு வந்த நாள் முதல் ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து இவ்வளவு பேர் வருகிறார்கள் அவ்வளவு பேர் வருகிறார்கள் என சொல்ல ஆரம்பித்தார்கள். ஆனால், எவரும் செல்லவில்லை. போக நினைத்தவர்களும் இப்போது நின்றுவிட்டார்கள். ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியைக் கைப்பற்றாது என்பது அவர்களுக்குத் தெரியும்.

ஐ.தே.கட்சியையும் மொட்டுக் கட்சியையும் ரணில் விக்கிரமசிங்க குழப்பியுள்ளார் என்பது அவர்களுக்குத் தெரியும். நாங்கள் 26 வருடங்கள் ரணிலுடன் இருந்தோம். அவரால் ஆட்சிக்கு வரமுடியவில்லை. முட்டாள்தனமான முடிவுகளை எடுக்கும் எம்.பி.க்கள் ஐக்கிய மக்கள் சக்தியில் இல்லை. ஒன்றிரண்டு பேர் போனாலும் இப்போது அவர்களுக்கு என்ன செய்வதென்று அறியாதுள்ளனர்" - என்றார். (அ)

# பிள்ளையான் போன்றோர் மீண்டும் முஸ்லிம் சமூகத்தை பலிக்கடாவாக்க அனுமதியோம்!

## எச்.எம்.எம்.ஹரீஸ் எம்.பி. தெரிவிப்பு

அம்பாறை, செப். 13

**போலியான கருத்துக்களை வெளியிட்டு பிள்ளையான் போன்றவர்கள் மீண்டும் முஸ்லிம் சமூகத்தை பலிக்கடாவாக்க அனுமதிக்க முடியாது.உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனின் செயலாளராக இருந்த ஆசாத் மௌலானா ஊடகங்களுக்கு தெரிவித்துள்ள கருத்தினால் மக்கள் பல்வேறு சந்தேகங்களுடன் இப்போது இருக்கிறார்கள் என சிறீ லங்கா முஸ்லீம் காங்கிரஸ் கட்சியின் பிரதி தலைவரும் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான எச்.எம்.எம்.ஹரீஸ் தெரிவித்தார்.**

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தற்போது முஸ்லீம் மக்கள் மீது சிலர் சுயநலத்திற்காக பரவலாக குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்படுவது தொடர்பில் அம்பாறை மாவட்டம் கல்முனை பகுதியில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் நடந்த விசேட செய்தியாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சஹ்ரானின் சகோதரருடன் தொடர்புள்ள பிள்ளையான் தன்னை காப்பாற்றுவதற்காக முஸ்லிம் சமூகத்தை மீண்டும் பயங்கரவாத முத்திரை குத்துவதை நிறுத்த வேண்டும்.சஹ்ரானின் சகோதரருடன் தொடர்புள்ளதை பல இடங்களில் முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) தெரிவித்துள்ள நிலையில் அவர் தன்னை காப்பாற்றுவதற்காக முஸ்லிம் சமூகத்தை மீண்டும் மீண்டும் பயங்கரவாத முத்திரை குத்துவதை நிறுத்த வேண்டும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தற்போது முஸ்லீம் மக்கள்



மீது சிலர் சுயநலத்திற்காக பரவலாக குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்படுவது எம்மால் ஏற்க முடியாது.நாட்டை உலுக்கிய ஈஸ்டர் தாக்குதல் ஆட்சி மாற்றத்தை இலக்குவைத்து நடத்தப்பட்டதாகவே நான் கருதுகின்றேன்.

மக்கள் பிரதிநிதி என்ற வகையில் தாக்குதல் தொடர்பிலான மௌலானாவின் ஊடக கருத்தினை அடிப்படையாக கொண்டு ஓய்வுபெற்ற நீதிபதிகளை கொண்டு ஜனாதிபதி நியமிக்கவுள்ள விசாரணைக்குழுவுக்கு மேலதிகமாக புலனாய்வு பிரிவின் குழுவொன்றும் விசாரணைக்காக நியமிக்கப்பட வேண்டும் .கடந்தகாலங்களில் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு, பாராளுமன்ற தெரிவுக்குழு அறிக்கைகள் மழுப்பல் நிலையிலையே வெளிவந்தது.

அதில் யாருக்கும் திருப்தியில்லை. இந்த தாக்குதலானது பாரதூரமான விளைவுகளை உண்டாக்கிய ஒன்றாகும்.இந்த விடயம் தொடர்பில் சர்வதேச பொலிஸாரின் புலனாய்வு அறிக்கைகள் பெறப்பட வேண்டும். சர்வதேச விசாரணை நடத்தப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்.கார்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை இந்த தாக்குகளின் பின்னணியில் பெரிய சக்திகள் இருப்பதாக ஆரம்பம் முதலே கூறிவருகிறார். இந்த தாக்குகளில் முஸ்லிங்களும், கிறிஸ்தவர்களும் நேரடியாக பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை நிலைநாட்டவேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும்-என்றார்.

# கிழக்கு பிரதி பிரதம செயலாளராக நஸீர்



திருமலை, செப். 13

கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளராக (நிர்வாகம்) எம்.எம்.நஸீர் தமது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டானினால் வழங்கப்பட்ட கடிதத்திற்கமைவாக பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ்.ரத்நாயனாவினால் நேற்று முன் தினம் வழங்கப்பட்ட கடிதத்திற்கமைவாகவே தமது கடமைகளை உத்தியோக பூர்வமாக பொறுப்பேற்றுக் கொண்டனர்.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் ஏ.மன்சூர், விவசாய அமைச்சின் செயலாளர் ஐ.கே.ஜீ.முத்துவண்டா, முதலமைச்சின் செயலாளர் என்.மதிவண்ணன், ஆளணி மற்றும் பயிற்சி பிரதிப் பிரதம செயலாளர் (திருமதி) ஆர்.யூ.ஜலீல், சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரன், கல்வி அமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம்.டபிள்யூ.ஜீ.திஸாநாயக்கா உள்ளிட்ட பல உயரதிகாரிகள் கலந்துகொண்டு சிறப்பித்தனர். (அ)

# ஐஸ் ஏற்றி வந்த வாகனம் விபத்து



அம்பாறை, செப். 13

கல்முனை பிரதேசத்தில் இருந்து மட்டக்களப்பு நோக்கி சென்று கொண்டிருந்த ஐஸ் ஏற்றிய கெப் வாகனம் நேற்று செவ்வாய்க்கிழமை விபத்துக்குள்ளாகிள்ளது.

கெப் வாகனத்தின் பின் சக்கரம் வெடித்து இந்த விபத்து இடம் பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த விபத்து காரணமாக அதிகளவான ஐஸ் கட்டிகள் வீதியில் சிதறியதால். போக்குவரத்து ஒரு சில மணி நேரம் பாதிக்கப்பட்டது.

வாகனத்தின் சாரதியும் காப்பாளரும் சிறு காயங்களுக்கு உள்ளாகி அருகில் உள்ள கல்முனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். கல்முனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மதுபானத்தை வாங்கிய பின் பணத்தைக் கொடுக்காது தப்பியோடிய பொலிஸ் பரிசோதகர் பணி இடைநிறுத்தம்!

மட்டக்களப்பு, செப். 13

மட்டக்களப்பிலுள்ள மதுபானச்சாலையில் மதுபானத்தை வாங்கிய பின் பணம் கொடுக்காது முச்சக்கரவண்டியில் தப்பியோடிய பொலிஸ் பரிசோதகர் ஒருவர் சேவையிலிருந்து கடந்த சனிக்கிழமை முதல் இடை நிறுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.



மட்டு நகரிலுள்ள மதுபானச்சாலைகள் இரண்டில் சம்பவதினமான வெள்ளிக்கிழமை பகல் முச்சக்கரவண்டி ஒன்றில் சென்று மதுபானச்சாலையில் அரைப் போத்தல் மதுபானத்தை வாங்கிவிட்டு பணம் முச்சக்கர வண்டியில் இருப்பதாகவும் கொண்டுவந்து தருவதாகவும் தெரிவித்து மதுபானத்தை வாங்கிக் கொண்டு பணத்தை கொடுக்காது தப்பி ஓடிய சம்பவம் அங்கு பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரி.சி. கமராவில் பதிவாகியதுடன் அது ஊடகங்களில் செய்தியாகவும் வெளியாகியது.

இந்த நிலையில் குறித்த பொலிஸ் பரிசோதகர் வாகரை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றியவராவார்.

அவர் சம்பவதினத்தன்று பொலிஸ் நிலையத்தில் இருந்து மட்டக்களப்பிற்கு செல்வதாகக் கூறிவிட்டு சென்று இந்த மோசடியில் ஈடுபட்ட பின்னர் அவர் வாகரை பொலிஸ் நிலையத்திற்கு திரும்பாது தலைமறைவாகியுள்ளார்.

குறித்த பொலிஸ் பரிசோதகர் ஏற்கனவே தங்க நகையை கொள்ளையடித்த குற்றச்சாட்டு மற்றும் இதுபோன்று 7 குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் 7 முறை பணி இடை நிறுத்தப்பட்டு மீண்டும் சேவையில் இணைக்கப்பட்டுள்ளார் என பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சம்மாந்துறை தேசிய பாடசாலையில் உயர்தரத்தில் சிறந்த பெறுபேறு பெற்ற மாணவர்கள் கௌரவிப்பு!

மட்டக்களப்பு, செப். 13

சம்மாந்துறை தேசிய பாடசாலையில் உயர் தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றை பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் திருமதி யு. நஜீபா ஏ. றஹீம் தலைமையில் நேற்று முன் தினம் இடம் பெற்றது.



இன் நிகழ்வில் உயர் தர பிரிவு இணைப்பாளர் எம்.எம்.ஏ காதர்,பிரதி அதிபர், பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள், கல்விசாரா உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் மற்றும் பெற்றோர்களும் கலந்து கொண்டனர்.

உயர்தர பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை பெற்ற 60க்கு மேற்பட்ட மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஈழநாடு





# வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங் ரஷ்ய எல்லைக்கு இரகசிய விஜயம்

மொஸ்கோ, செப். 13

வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங் உன், ரஷ்ய எல்லைப் பகுதியான காஸனை அடைந்துள்ளதாக ஜப்பானிய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ரஷ்ய அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி இந்த தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

வடகொரிய மற்றும் ரஷ்ய ஜனாதிபதிகளுக்கு இடையிலான சந்திப்பொன்று இடம்பெறவுள்ளதாக அண்மையில் தகவல் வெளியிடப்பட்டிருந்தது.

இந்த சந்திப்பிற்காக வடகொரிய ஜனாதிபதி, தொடருந்து ஒன்றில் பயணித்து ரஷ்ய எல்லையை தற்போது அடைந்திருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கமைய, எதிர்வரும் நாட்களில் இந்த சந்திப்பு இடம்பெறவுள்ளதாக ரஷ்யாவின் கிரம்ளின் மாளிகை அறிவித்துள்ளது.

(அ)

# சீனா தலையிடுவதை நான் ஒருபோதும் ஏற்கமாட்டேன்!

## பிரிட்டன் பிரதமர் ரிஷி சுனக் திட்டவட்டம்

லண்டன், செப். 13

பிரித்தானியாவின் ஜனநாயகத்தில் சீனா தலையிடுவதை நான் ஒருபோதும் ஏற்கப் போவதில்லை என பிரதமர் ரிஷி சுனக் தெரிவித்துள்ளார்.

பிரித்தானியாவைச் சேர்ந்த பாராளுமன்ற ஆய்வாளர் ஒருவர் சீனாவுக்காக பிரித்தானியாவை உளவு பார்த்த குற்றச்சாட்டில் அண்மையில் கைது செய்யப்பட்டிருந்தார்.

அத்துடன் குறித்த உளவாளிக்கு ஆதரவளித்த மற்றுமொரு நபரும் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இந்நிலையில் குறித்த உளவாளி, பிரித்தானியாவின் ஆளும் கட்சியான கன்சர்வேட்டிவ் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் பல நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் தொடர்பினைப் பேணி வந்துள்ளமை பொலிஸாரின் விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.



இச்சம்பவம் அந்நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில் இது குறித்து கருத்துத் தெரிவித்த போதே அந்நாட்டின் பிரதமர் ரிஷி சுனக் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் "பிரித்தானியாவை உளவு பார்க்கும் சீனாவின் முயற்சியை நான் ஒருபோதும் பொறுத்துக் கொள்ள மாட்டேன். இது குறித்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன" இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எவ்வாறு இருப்பினும் பிரித்தானியாவின் இக்குற்றச்சாட்டை மறுத்துள்ள சீனா, இது தங்கள் நாட்டின் மீது சுமத்தப்படும் அவதூறு எனவும் கண்டனம் தெரிவித்துள்ளது.

(அ)

# உக்ரைன் நாசகாரர்களுக்கு பிரிட்டன் பயிற்சியளிக்கிறது

## புடின் குற்றச்சாட்டு

மொஸ்கோ, செப். 13

ரஷ்ய உள்கட்டமைப்பு மீது தாக்குதல் நடத்த உக்ரைனுக்கு பிரித்தானியா இரகசிய சேவைகள் அமைப்பு, பயிற்சி அளித்து வருவதாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் குற்றம் சாட்டியுள்ளார்.

அணுமின் நிலையத்தை சேதப்படுத்த முயன்ற உக்ரேனிய இராணுவத்தின் முயற்சிகளை தமது பெடரல் செக்யூரிட்டி சர்வீஸ் வெற்றிகரமாக செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேநேரம் ஒவ்வொரு நாளும் ஆயிரம் முதல் ஆயிரத்து 500 ரஷ்யர்கள் இராணுவத்தில் சேர விருப்பம் தெரிவித்து வருவதாகவும் விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார்.

உக்ரேனில் தனது இராணுவ முயற்சியை அதிகரிக்க ரஷ்யா



புதிய கட்டாய அணிதிரட்டலை மேற்கொண்டு வருகின்றது என்ற குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

குறிப்பாக கடந்த ஆறு அல்லது ஏழு மாதங்களில், 2 இலட்சத்து 70 ஆயிரம் பேர் தன்னார்வ ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளனர் என்றும் விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார்.

(அ)

# புயலினால் கிழக்கு லிபியாவில் 2,000இற்கும் அதிகமானோர் பலி?

திரிபோலி, செப். 13

டானியல் புயல் காரணமாக கிழக்கு லிபியாவில் ஏற்பட்ட அனர்த்தம் காரணமாக 2 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்திருக்கலாம் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

அந்த நாட்டின் இராணுவ உயர் அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



கிழக்கு லிபியாவின் டேர்னா நகர் அதிகளவான பாதிப்பை எதிர்கொண்டுள்ள நிலையில், அந்த பகுதி அபாய வலையமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் போக்குவரத்து, மின்சாரம் என்பன தடைப்பட்டிருப்பதால், மீட்பு பணிகளில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

டெர்மா நகரில் மாத்திரம் இதுவரையில், ஆயிரத்து 200க்கும் அதிகமானோர், காயமடைந்துள்ள நிலையில், அவர்கள் மீட்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

டேனியல் புயல் காரணமாக, பெரும்பாலான சொத்துகள் சேதமடைந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

# கட்டுமான செலவு, காணி விலை அதிகரிப்பு நெருக்கடியை எதிர்கொள்கின்றது பிரான்ஸ்

பாரிஸ், செப். 13

2024 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட பேச்சு வார்த்தைகள் இடம்பெற்று வரும் நிலையில், பிரான்ஸின் தொழிற்துறையினர் மற்றும் அரசியல் தலைமைகள் கடுமையான நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குடியிருப்பு நெருக்கடி எதிர்பார்த்ததை விட மோசமாக உள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

புதிய கட்டடங்களை கட்டுவதற்கான வாக்குறுதியினை பிரான்ஸ் ஜனாதிபதி நிறைவேற்றுவதற்கு தவறியதன் காரணமாக இவ்வாறானதொரு நிலை ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதன்படி, செப்ரெம்பர் பிற்பகுதியில் முன்வைக்கப்படும் வரவு செலவுத் திட்டத்தில் காணி விற்பனை மிகவும் மலிவு விலையில் ஆக்குவதற்கும், வீட்டு வசதி வீதத்தை அதிகரிப்பதற்குமான எதிர்பார்ப்பை கொண்டுள்ளது.

பிரான்ஸில் புதிய கட்டடங்களின் கட்டுமானப் பணிகள் கடந்த ஜனவரி மாதம் 3.3 வீதம் குறைவடைந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, 2023 ஆம் ஆண்டுக்கான கட்டுமானப் பணிகள் 9 வீதம் குறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில், இந்த நிலைமையானது முழுமையாக நீண்டகால நெருக்கடியாக மாறுவதற்கு முன்னதாக சிக்கலை கையாண்டிருக்க வேண்டுமென விற்பனையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், அரசாங்கத்தை பல முறை எச்சரித்தும் பயன் கிடைக்கவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

2022 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் யுக்ரேன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பு காரணமாக உலகளாவிய ரீதியில், கட்டுமான செலவுகள் மற்றும் நிலங்களின் விலைகள் அதிகரித்து வருகின்றன.

அத்துடன், கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலைத் தொடர்ந்து உலகளாவிய ரீதியில் விநியோக சங்கிலியில் ஏற்பட்ட பொதுவான சீர்குலைவு இதுவரை சரிசெய்யப்படவில்லை.

இதன் காரணமாக கட்டுமானப் பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், 2015 ஆம் ஆண்டு முதல் ஐரோப்பிய நாடுகளில் வீடுகளின் விலைகள் 40 வீதம் அதிகரித்துள்ளதுடன், ஊதியம் குறைவடைந்துள்ளதாக ஐரோப்பிய புலனாய்வு ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

### இலங்கையில் மனித உரிமைகள் மீறல்:

# பத்து பேரின் விவரங்களை தருமாறு பல நாடுகளும் கோரிக்கை விடுத்தன

**பிரதி மனித உரிமைகள் ஆணையர்**

ஜெனிவா, செப். 13

**இலங்கையில் மனித உரிமைகள் மீறலில் ஈடுபட்ட பத்து பேரின் விவரங்களை தருமாறு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையிடம் பல நாடுகள் வேண்டுகோள் விடுத்துள்ளன என்று பிரதி மனித உரிமை ஆணையாளர் நடா அல் நசீவ் தெரிவித்துள்ளார்.**

இலங்கை அரசாங்கம் ஐக்கிய நாடுகளின் தீர்மானங்களை நிராகரித்துள்ளதை சுட்டிக்காட்டியுள்ள அவர் உரிய தகவல்கள் ஆதாரங்களை வழங்குவதற்காகவும் உரிய நீதித்துறை மற்றும் ஏனைய செயல்பாடுகளுக்கு ஆதரவை வழங்குவதற்காகவும் தனது பணிமனை ஆதாரங்கள் தகவல்களை சேகரிக்கும் பாதுகாக்கும் ஆராயும் நோக்கில் பொறுப்புக்கூறல் திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

தனது திட்டத்திடமிருந்து தகுதிவாய்ந்த அதிகாரிகள் அதிகளவில் வேண்டுகோள்களை விடுக்கின்றனர். குறிப்பாக பத்துப் பேர் குறித்த விவரங்களை கோருகின்றனர் - என்றார்.

(ஐ)

# நித்திரையில் இருந்த 4 வயது சிறுமி மரணம்!

கொழும்பு, செப். 13

நித்திரையில் இருந்த நான்கு வயது சிறுமி நேற்று முன் தினம் திங்கட்கிழமை திடீரென உயிரிழந்துள்ளதாக ஹொரணை பொலிஸார் தெரிவித்தனர்.

ஹொரணை திக்கேனபுர பகுதியில் வசித்து வரும் சசுகி அனன்யா சொந்தி என்ற சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சிறுமி வழமை போன்று தனது தாயாருடன் அறையில் உறங்கச் சென்றுள்ளதாகவும் தாய் கண்விழித்தபோது சிறுமி உறங்கிக் கொண்டிருந்ததாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அதன் பின்னர் சிறுமி சிறுநீர் கழித்ததைக் கண்ட தாய், சிறுமியின் உடைகளை மாற்றத் தயாரானபோது, சிறுமியின் உடல் உயிரற்ற நிலையில் இருப்பதை உணர்ந்து வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுள்ளார்.

வைத்தியர்கள் சிறுமியை பரிசோதித்தபோது சிறுமி இறந்துவிட்டதாக தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த சிறுமியின் பிரேத பரிசோதனை ஹொரணை ஆதார வைத்தியசாலையில் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

## லண்டன் பல்கலைக்கழகத்தில் கல்வியை தொடரும் 3 பாராளுமன்ற உறுப்பினர்கள்!




கொழும்பு, செப். 13

லண்டன் பல்கலைக் கழகத்தில் சட்டத்திற்குப் பிந்தைய ஆய்வுக்கான நிர்வாகப் படிப்பு என்ற கற்கை நெறியினைத் தொடரும் விதமாக இலங்கையைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சாணக்கியன், அங்கஜன் இராமநாதன் மற்றும் மயந்த திசாநாயக்க ஆகியோர் பிரித்தானியா சென்றுள்ளனர்.

இலங்கையில் அமுலாக்கப்படும் சட்டங்கள் சரியான முறையில் அமுல்படுத்தப்பட்டிருப்பினும் அவை முறையாக நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. எனவே அச்சட்டங்களை எவ்வாறு நடைமுறைப்படுத்தலாம் என்பது தொடர்பிலேயே இக்கற்கை நெறி அமைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சுதந்திரக் கட்சியும் அதன் தலைவரும் நரிகளின் கூட்டத்துக்கு இரையாகினர்!

**தயாசிறி குற்றச்சாட்டு**

கொழும்பு, செப்.13

சுதந்திரக் கட்சியும் அதன் தலைவரும் தந்திர நரிகளின் கூட்டத்திற்கு பலியாகியுள்ள நிலையில், கட்சியையும் கட்சித் தலைவரையும் அதன் பிடியில் இருந்து மீட்கும் வரை கட்சியை விட்டு விலகப் போவதில்லை என பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

ஹெட்டிபொல பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

அத்துடன், சிலரது செயற்பாடுகள் காரணமாக தாம் கட்சிப் பதவியில் இருந்து நீக்கப்பட்டபோதும், நாட்டு மக்களின் மனங்களில் இருந்து விரட்ட முடியாது என்பதை மக்களின் பதில்கள் எடுத்துக்காட்டுவதாக தயாசிறி ஜயசேகர குறிப்பிட்டார்.



கட்சியின் முன்னேற்றத்திற்காக கடுமையாக உழைத்த தாம் மற்றவர்களின் வதந்தி பேச்சு பேருந்தில் மிருகம் போல் இழுத்துச் செல்லப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

புதிய கூட்டணிகள் மற்றும் கட்சிகள் குறித்து ஆலோசனைகள் மற்றும் அழைப்புகள் வருவதாகவும் தயாசிறி சுட்டிக்காட்டினார்.

இந்த நிலையில், கட்சியில் இழந்த ஜனநாயகத்தை மீட்டெடுக்க தொடர்ந்தும் முயற்சிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பதவி நீக்கம் செய்யப்படுவதற்கு முதல் நாள் தாம் கட்சித் தலைவரை சந்தித்ததாகவும், அவரது தீர்மானத்தினை நேருக்கு நேர் கூறமுடியாமல் போனது வருத்தமும் ஆச்சரியமும் அளிப்பதாக தயாசிறி தெரிவித்தார்.

இந்த தீர்மானம் திடீரென எடுக்கப்பட்டது அல்ல என்பதை தாம் அறிவதாகவும், இந்த அரசியலால் தாம் ஒருபோதும் நோய்வாய்ப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த நிலையில் திருடர்களின் சகவாசத்தில் இருப்பதை விட கட்சியை சுத்தப்படுத்துவதற்கு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வோம் எனவும் அதுவரை தாம் இலங்கையை விட்டு வெளியேறப் போவதில்லை எனவும் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

(அ)

## ரயில் சேவையும் அத்தியாவசிய சேவைக்குள்!

கொழும்பு, செப். 13

நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் ரயில் சேவையை அத்தியாவசிய சேவையாக அறிவிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் கோரிக்கை விடுக்கவுள்ளதாக போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

நேற்று செவ்வாய்கிழமை அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்ட அமைச்சர் இதனை குறிப்பிட்டார்.

மேலும் நேற்று காலை சனநெரிசல் மிக்க ரயிலில் இருந்து தவறி விழுந்து உயிரிழந்த இளைஞனின் மரணத்திற்கு 84 ரயில் ஊழியர்களே நேரடிப் பொறுப்பு என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

ஏறக்குறைய 18,000 தொழிலாளர்கள் தமது கடமைகளில் ஈடுபட்டுள்ள நிலையில், அரசியல் அல்லது சுயநல நோக்கங்களுக்காக 84 ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்வதற்கு தன்னிச்சையான முடிவை எடுத்துள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்தன குற்றம் சாட்டினார்.

(அ)

# கொக்குத்தொடுவாய் விவகாரம் சர்வதேச விசாரணை வேண்டும்!

**சிறீதரன் எம்.பி. வலியுறுத்து**

"கொக்குத்தொடுவாய் மனித புதை குழி விவகாரத்துக்கு சரியான தீர்வினைப் பெறவேண்டுமானால் சர்வதேச விசாரணை அவசியம்" என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வுப் பணியைப் பார்வையிட்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முன்பு அகழப்பட்ட முறைக்கும் தற்போது அகழப்படுகின்ற முறைக்கும் வித்தியாசம் இருப்பதனை பார்க்க முடிகின்றது. எடுக்கப்பட்ட தடயப்பொருட்களை வைத்து பார்க்கின்றபோது நூற்றுக்குநூறு வீதம் பெண் போராளிகளுடையவை என்பது உறுதிப்படுத்தப்படுகின்றது.

இறுதி யுத்தத்தின் போது கைது செய்யப்பட்டிருக்கின்ற காணாமல் ஆக்கப்பட்ட போராளிகளுடையதாக இருக்கும் என்பதற்கான ஆதாரமாகத்தான் இதனை பார்க்கின்றோம்.

கடந்த 6 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் வெளியிட்டிருக்கின்ற அறிக்கையில் இவ் விடயம் தொடர்பில் அண்மைக் காலமாக இவ்வாறு தமிழ் பகுதிகளில் தமிழ் இளைஞர், யுவதிகள் எலும்புக்கூடுகளாக எடுக்கப்பட்டிருக்கின்ற விடயம் தொடர்பில் எந்தவித விடயங்களும் முன்வைக்கப்படவில்லை.

ஜெனிவாவில் ஆரம்பமான 54 ஆவது கூட்டத்தொடர் ஒரு மாதங்களில் முடிவடைகின்ற போதாவது முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மண்ணின் விடயத்தையும் சர்வதேச சமூகம் கையில் எடுக்கும்.

இதற்கு சர்வதேசத்தை தவிர வேறு யாராலும் இதற்கு ஒரு தீர்வை எட்ட முடியாது அதனால் தான் நாங்கள் சர்வதேச சமூகத்தை நம்புகின்றோம்.

அதனால் தான் மீண்டும் அவர்களிடத்தே வலியுறுத்துகின்றோம். அந்தவகையில் இந்த இடத்தினை பார்வையிட்டு எமது உறவுகள், பிள்ளைகள், குழந்தைகள் எவ்வாறு மிக மிலேச்சத்தனமாக, நாகரிகமற்ற முறையில் இலங்கை அரச பயங்கரவாதப் படைகளால் படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதற்கு இது மிகப்பெரிய சாட்சியாக இருக்கிறது.

இதற்கான கால மாற்றமும், சூழலும் சரியான விடையை தரும் என்ற நம்பிக்கையோடு தான் இந்த இடத்தை பார்வையிட்டு செல்கின்றோம்-என்றார்.

## தையிட்டி...

இந்நிலையில் காணி அளவீட்டு பணிகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து மக்கள் பிரதி நிதிகள் காணி உரிமையாளர்கள் மற்றும் பொதுமக்கள் என பலர் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதனையடுத்து தெல்லிப்பழை பிரதேச செயலாளரின் அறிவித்தலுக்கு அமைய அளவீட்டுப் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன. (அ)

## ரயிலின்...

20 வயது இளைஞரே இவ்வாறு உயிரிழந்தார். இவர், மொறட்டுவை பல்கலைக்கழக மாணவர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

நேற்று நள்ளிரவு முதல் ரயில் ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால், சில ரயில்களே சேவையில் ஈடுபட்டு வருகின்றன. இதனால், அவற்றில் சன நெரிசல் காணப்படுகின்றது.

இந்நிலையில், நேற்று காலை ரயில் கூரையில் ஏறி ஒருவர் பயணித்துள்ளார். இவ்வாறு பயணித்தவர் ஹொரப்பே பகுதியில் தவறிவீழ்ந்து உயிரிழந்தார் என்று ரயில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## தமிழ்மக்களின்...

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 54ஆவது கூட்டத்தொடர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஜெனிவாவில் ஆரம்பமானது. அன்றைய தினம் இலங்கையின் மனித உரிமைகள் நிலவரம் தொடர்பில் மனித உரிமைகள் பேரவையின் பிரதி ஆணையாளர் நாடா அல்-நஷீஃப், உறுப் புநாடுகளின் பிரதிநிதிகளின் உரைகள் இடம்பெற்றன.

இதன்படி, இந்தியா சார்பில் பேரவையில் உரையாற்றிய மணி பாண்டே ஆற்றிய உரையின் முக்கிய அம்சங்கள் வருமாறு,

இலங்கையின் அயல்நாடு மற்றும் நெருங்கிய நட்புநாடு என்ற ரீதியில் கடந்த 2009 ஆம் ஆண்டு தொடக்கம் நிவாரணம், புனர்வாழ்வளித்தல், மீள்குடியேற்றம், மீளக்கட்டியெழுப்பல் ஆகியவற்றை முன்னிறுத்திய இலங்கையின் முயற்சிகளுக்கு இந்தியா தொடர்ச்சியான ஆதரவை வழங்கி வந்திருக்கின்றது. அதுமாத்திரமன்றி, இலங்கை தற்போது முகங்கொடுத்திருக்கும் பொருளாதார நெருக்கடியை உரியவாறு கையாள்வதற்கு சுமார் 400 கோடி டொலருக்கும் மேற்பட்ட பெறுமதியுடைய உதவிகளை இந்தியா வழங்கியிருக்கின்றது.

இந்தியா எப்போதும் இரண்டு அடிப்படைக் கொள்கைகளின் பிரகாரமே செயல்பட்டு வருகின்றது. நீதி, சமத்துவம், கௌரவம், சமாதானத்துக்கான தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கு ஆதரவளித்தல் மற்றும் இலங்கையின் ஒருமைப்பாடு இறையாண்மை ஆகியவையே அவையாகும்.

இவ்வாறான பின்னணியில் நீதி, சமத்துவம் மற்றும் சமாதானத்துக்கான தமிழ் மக்களின் அபிலாசைகளை இலங்கை அரசாங்கம் பூர்த்திசெய்யும். அரசமைப்புக்கான 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்தல் மற்றும் மாகாண சபைத் தேர்தல்களை நடத்துதல் ஆகிய கடப்பாடுகளை நிறைவேற்றும் என்றும் எதிர்பார்க்கின்றோம்.

தமது கடப்பாடுகளை நிறைவேற்றுவது குறித்து இலங்கை அரசாங்கம் வழங்கியிருக்கும் உத்தரவாதத்தைக் கவனத்தில் கொள்ளும் அதேவேளை, அடையப்பட்டுள்ள முன்னேற்றங்கள் போதுமானவையாக இல்லை. ஆகவே, அனைத்து பிரஜைகளினதும் அடிப்படை உரிமைகளும் மனித உரிமைகளும் பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்தும் வகையிலான தமது கடப்பாடுகளை உடனடியாக நிறைவேற்றுவதற்கு அர்த்தபூர்வமான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு இலங்கை அரசாங்கத்தை கேட்டுக்கொள்கின்றோம் - என்றார். (ஐ)

## சாதாரண...

இதற்கிணங்க, சாதாரண தர பரீட்சையை தரம் 10இலும் உயர் தர பரீட்சையை தரம் - 12இலும் நடத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். (ஐ)

## அத்தியாவசிய..

தெரிவிக்கப்படுகின்றது.

நள்ளிரவு 12 மணி முதல் ரயில் சேவையை பொதுமக்களின் அத்தியாவசிய சேவையாக மாற்றுமாறும், நாளை (இன்று) முதல் மக்கள் பாதிக்கப்படுவதை தடுக்குமாறும் ஜனாதிபதியிடம் எழுத்து மூலம் கோரிக்கை விடுக்கிறேன் என முன்னதாக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சீனாவின்...

இணைப்பு யுகத்தை" தோற்றுவிக்கும் என்று வெள்ளை மாளிகை கூறியது.

அமெரிக்க ஜனாதிபதி அறிவித்திருக்கும் இந்தத் திட்டம் உலகின் ஏனைய பாகங்களுடன் சீனாவை இணைப்பதற்கு ஒரு தசாப்தத்துக்கு முன்னர் பீஜிங்கால் தொடங்கப்பட்ட பல ட்ரில்லியன் டொலர்கள்மதிப்பிலான உட்கட்டமைப்பு திட்டமான "மண்டலமும் பாதையும்" (பெல்ட் அன்ட் றோட் - Belt and Road Initiative) செயல் திட்டத்துக்கு நேரடி சவாலாக அமையும் என்று சில அவதானிகள் கூறுகிறார்கள்.

இந்திய தலைநகர் புதுடில்லியில் கடந்த வாரம் நடைபெற்ற 20 நாடுகள் குழுவின் (ஜி - 20 ) உச்சி மாநாட்டில் வைத்து அறிவிக்கப்பட்ட பைடனின் திட்டம் ஐரோப்பிய ஒன்றிம், பிரான்ஸ், இத்தாலி, ஜேர்மனி ஆகிய நாடுகளையும் உள்ளடக்குகிறது.

இது இரு தனித்தனியான மார்க்கங்களைக் கொண்டிருக்கிறது. கிழக்கு வழித்தடம் வளைகுடா அரபு நாடுகளை இந்தியாவுடன் இணைக்கும் அதேவேளை வடக்கு வழித்தடம் வளைகுடா நாடுகளை ஐரோப்பாவுடன் இணைக்கும்.

இந்த பேரார்வமிகு திட்டம் சீனாவின் எழுச்சியை கட்டுப்படுத்துவதற்கான அதன் முயற்சிகளில் அமெரிக்கா எந்தளவுக்கு மத்திய கிழக்கு நாடுகளில் நம்பிக்கை வைக்கிறது என்பதைக் காட்டுவதுடன், வளைகுடா நாடுகள் இன்றைய பல்துருவமய உலகில் அமெரிக்கா போன்ற அவற்றின் பாரம்பரிய நேச நாடுகளுக்கும் சீனா போன்ற விரைவாக வளர்ந்துவரும் பங்காளி நாடுகளுக்கும் இடையில் சமநிலையை பேணுவதற்கு எவ்வாறு முயற்சிக்கின்றன என்பதையும் உணர்த்துகிறது.

இதேவேளை, இந்த நாடுகள் உலகின் மிகவும் வல்லமை கொண்ட நாடுகளுடன் பொருளாதார மற்றும் அரசியல் பங்காளிகளாக தங்களுக்கு ஒரு அந்தஸ்தை தேடிக்கொள்வதற்கு முயற்சிக்கின்றன.

இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கும் ஐக்கிய அரபு இராச்சியத்தின் ஜனாதிபதி முஹமத் பின் சயீத்துக்கும் நடுவில் அமர்ந்திருந்து புதிய திட்டத்தை அறிவித்த பைடன், உலகம் இன்று ஒரு நிலைமாறு கட்டத்தில் இருக்கிறது. இந்தத் திட்டத்தில் முதலீடுகள் முன்னரை விடவும் இப்போது கூடுதல் முக்கியமானவையாகி விட்டன - என்றார்.

சவூதி அரேபியாவுடன் உறவுகளை சுமுகமாக்குவதற்கு முன்னுரிமை கொடுக்கும் இஸ்ரேல் அமெரிக்க ஜனாதிபதி பைடன் அறிவித்த திட்டத்தை வரவேற்றதுடன் அது உலகளாவிய மற்றும் வரலாற்று நிலைவரத்தை மாற்றுகின்றது - என்றும் குறிப்பிட்டது.

# மல்லாகம் நீதிமன்றில் இருந்த 50 கிலோ கஞ்சா திருடப்பட்டது

யாழ்ப்பாணம், செப். 13

மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு சான்று பொருளான 50 கிலோ கஞ்சா களவு போயுள்ளது என்று தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தின் வழக்கு சான்று பொருட்களுக்கு பொறுப்பான அதிகாரியால் இந்த முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கைப்பற்றப்பட்ட கஞ்சா தொடர்பான வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வரும் நிலையில் 50 கிலோ கஞ்சா களவாடப்பட்டுள்ளது.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் சான்று பொருளே இவ்வாறு காணாமல் போயுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# ஜனாதிபதி ரணில் - பஸில் சந்தித்து கலந்துரையாடல்!



கொழும்பு, செப். 13

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர் பஸில் ராஜபக்ஷவுக்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

சுமார் ஒரு மணி நேரம் இரு தரப்பினருக்கும் இடையில் நேற்று முன்தினம் இந்த கலந்துரையாடல் இடம்பெற்றதாக அரசியல் வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொதுஜன பெரமுனவினருக்கு அமைச்சு பதவி வழங்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் பஸில் ராஜபக்ஷ முன்னதாக கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்த கோரிக்கைக்கு சாதகமாக பதிலளிக்காத காரணத்தால் ஜனாதிபதிக்கும் பஸில் ராஜபக்ஷவுக்கும் இடையில் அண்மையில் கலந்துரையாடல் இடம்பெறவில்லை.

எவ்வாறாயினும், ஜனாதிபதியுடனான கலந்துரையாடலில், அடுத்த வரவு - செலவுத் திட்டம் மற்றும் அதில் மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய சலுகைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## 8மாதங்களில்...

பொலிஸ்மா அதிபர் இந்திக்க ஹப்புகொட தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

நாட்டில் வருடமொன்றுக்கு விபத்துகளால் 12 ஆயிரம் பேர் உயிரிழக்கின்றனர். இவற்றுள் நான்கில் ஒரு பங்கு - சுமார் 3 ஆயிரம் பேர் வீதி விபத்துக்களால் மரணிக்கின்றனர்.

நாளொன்றுக்கு சுமார் 7 முதல் 8 பேர் வரை வீதி விபத்துக்களால் உயிரிழக்கின்றனர் என்று பொலிஸ் போக்குவரத்து பிரிவின் அண்மைய புள்ளி விவரங்கள் தெரிவித்தன.

முடிவடைந்த ஓகஸ்ட் மாதத்துடன் ஆயிரத்து 427 வீதி விபத்துகளில் ஆயிரத்து 500 பேர் இறந்தனர். இந்த விபத்துகளில் மூன்றில் ஒரு பங்கு மோட்டார் சைக்கிள்களால் ஏற்படுகின்றன. 612 மோட்டார் சைக்கிள் விபத்துக் களில் 630 பேர் உயிரிழந்தனர்.

## 51/1...

நிலையிலுள்ள மக்களின் உரிமைகளைப் பாதுகாத்தல், பொருளாதார மீட்சி மற்றும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல் என்பன உள்ளடங்கலாக மனித உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்தலை முன்னிறுத்தி இலங்கை மேற்கொண்டு வரும் முயற்சிகளைப் பாராட்டுகிறோம்.

இதேவேளை, நாட்டின் இறையாண்மை, சுயாதீனத்தன்மை, சமூக உறுதிப்பாடு மற்றும் பொருளாதார அபிவிருத்தி ஆகிய விடயங்களில் தாம் இலங்கைக்கு வலுவான ஆதரவை வழங்குகிறது.

மேலும், ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் 51/1 தீர்மானமானது நியாயத்துவம் மற்றும் பக்கச்சார்பின்மை ஆகிய கோட்பாடுகளுக்கு ஏற்றவாறு அமையவில்லை என்பதுடன், சம்பந்தப்பட்ட நாட்டின் அனுமதியையும் பெறவில்லை.

அதுமாத்திரமன்றி இலங்கையில் மனித உரிமைகளை பாதுகாப்பதிலும் அவற்றை மேம்படுத்துவதிலும் இந்தத் தீர்மானம் நேர்மறையானதொரு வகிபாகத்தைக் கொண்டிருக்கவில்லை.

ஐ. நா. மனித உரிமைகள் பேரவை நாடுகளின் இறையாண்மை மற்றும் அரசியல் சுயாதீனத்தன்மை ஆகியவற்றுக்கு மதிப்பளிக்க வேண்டும். மனித உரிமைகளின் மேம்பாட்டுக்காக அந்த நாடுகளின் முன்னெடுக்கப்படும் முயற்சிகளை அங்கீகரிக்கவேண்டும் என்றும் கருதுகின்றோம்" - என்றார். (ஐ)

## கொக்குத்...

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அடையாளம் காணப்பட்ட பகுதியில் கடந்த ஆறாம் திகதி தொடங்கிய இரண்டாம் கட்ட அகழ்வில் இதுவரை 6 எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன. முன்னதாக 13 எலும்புக்கூடுகள் மீட்கப்பட்ட நிலையில் இதுவரை 19 எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் இடம் பெற்ற இந்த அகழ்வு குறித்து முல்லைத்தீவு சட்ட மருத்துவ அதிகாரி கனகசபாபதி வாசுதேவா கருத்து வெளியிடுகையில்

கொக்குத்தொடுவாய் ஆறாவதுநாள் அகழ்வாய்வில் ஒரு மனித எலும்புக் கூட்டுத் தொகுதி முழுமையாக அகழப்பட்டது. பகுதியளவில் அகழந்தெடுக்கப் பட்ட மனித எலும்புக்கூட்டுத் தொகுதியின் மிகுதி பாகங்களும் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டன.

அத்துடன், குறித்த ஆறாம் நாள் அகழ்வாய்வில் துப்பாக்கி ரவை ஒன்றும் கழிவு நீரைச் சுத்திகரித்து அருந்துவதற்கு பயன்படுத்தப்படும், ரஷ்ய தயாரிப்பு நீர் சுத்திகரிப்பு கருவி ஒன்றும் தடயப் பொருட்களாக பெறப்பட்டுள்ளன.

இதேவேளை, இவ்வாறு அகழ்ந்தெடுக்கப்படும் மனித எலும்புக்கூடுகள் கண்கள், கைகள் கட்டப்பட்ட நிலையில் மீட்கப்படவில்லை.

இந்த அகழ்வாய்வுப் பணிகள் இடம்பெறும்போது காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் சார்பில், இரண்டு சட்டத்தரணிகள் அகழ்வாய்வுகள் ஆரம்பமாகி முடிவடையும்வரை நேரடியாக நின்று பார்வையிடுகின்றனர். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# புதிய அரசியல் கட்சி ஊடாக மீண்டும் வருகிறார் கோட்டா?

கொழும்பு, செப். 13

கடந்த ஆண்டு ஜூலை மாதம் பதவியில் இருந்து விலகியதில் இருந்து மௌனம் காத்து வந்த முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விரைவில் அரசியலுக்கு பிரவேசிக்கவுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய அரசியல் கட்சியொன்றின் மூலம் தோல்வியடைந்த தனது பிம்பத்தை மீண்டும் கைப்பற்ற கோட்டாபய முனைந்துள்ளார் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அண்மையில் தனது நெருங்கிய உதவியாளரான திலித் ஜயவீரவினால் பதிவு செய்யப்பட்ட மௌபிம ஜனதா கட்சிக்கு கோட்டபாய ஆதரவளிப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

ஜயவீர கட்சியை பொறுப்பேற்றதன் பின்னர் மௌபிம ஜனதா கட்சி தனது அரசியலமைப்பை மாற்றியமைத்து புதிய நிர்வாகிகளைத் தெரிவு செய்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அடுத்த ஆண்டுஜனாதிபதித் தேர்தலுக்கு நாடு தயாராகி வரும் நிலையில், கோட்டாபய தனது ஆசிர்வாதங்களை வழங்கி மௌபிம ஜனதா கட்சிக்கு ஆதரவளிப்பார் என அறியப்படுகிறது. (அ)

# புதிய ஆட்சி நாட்டுக்கு தேவை!

## ரஞ்சித் மத்தும பண்டார வலியுறுத்து



கொழும்பு, செப். கட்சிக்கு புதிய அங்கத்தவர்களை இணைத்துக்கொள்ளும் புதிய வேலைத் திட்டத்தை ஐக்கிய மக்கள் சக்தி எதிர்வரும் 16 ஆம் மற்றும் 17 ஆம் திகதிகளில் மாத்தறையிலிருந்து ஆரம்பிக்கவுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண் டார தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

இன்று நாட்டின் சகல துறைகளும் சரிந்துபோயுள்ளன. நாட்டு மக்கள் இன்று புதிய ஆட்சியையே எதிர்பார்க்கின்றனர். நாட்டின் தேசிய பாதுகாப்பு மற்றும் சூழ்ச்சியால் ஆட்சிக்கு வந்தமை இன்று சர்வதேசத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

எனவே நாட்டுக்கு புதிய ஆட்சியும் பொறுப்பான நிர்வாகம் தேவை. இந்த ஆட்சியை பொறுப்பேற்க சஜித் பிரேமதாஸ தலைமையில் ஐக்கிய மக்கள் சக்தி தயாராகவுள்ளது. ஏனைய கட்சிகள் தேர்தல் தொகுதிக் கூட்டங்களை நடத்த ஆரம்பித்துள்ளது மாத்திரமே. நாம் நாட்டின் சகல தேர்தல் தொகுதிகளிலும் தொகுதிக் கூட்டங்களை நடத்தி முடித்துவிட்டோம்.

கட்சிக்கு புதிய அங்கத்தவர்களை இணைத்துக்கொள்ளும் புதிய வேலைத்திட்டதையும் கிராமத்திற்கு கிராமம் செல்லும் புதிய வேலைத்திட்டத்தையும் ஐக்கிய மக்கள் சக்தி எதிர்வரும் 16 ஆம் மற்றும் 17 ஆம் திகதிகளில் மாத்தறையிலிருந்து ஆரம்பிக்கவுள்ளோம்.

அன்றைய தினங்களில் சகல பாராளுமன்ற உறுப்பினர்களும் அமைப்பாளர்களும் மாவட்டத்திற்குச் சென்று புதிய அங்கத்தவர்களை இணைத்துக்கொள்ளல், வாக்காளர் பிரிவு கிளைகள், மகளிர் பிரிவுகள், இளைஞர் பிரவுகள், பிக்குகள் முன்னணியின் பிரிவுகளை ஸ்தாபிக்கும் நடவடிக்கைகளை அன்றைய தினம் ஆரம்பிக்கவுள்ளோம். அடுத்த அடுத்த மாதங்களில் இந்த வேலைத்திட்டத்தை சகல மாவட்டங்களிலும் நடைமுறைப்படுத்துவோம்.

மகளிர் சக்தி, இளைஞர் சக்தி, கிளைச் சங்கம் மட்டுமின்றி, பிக்குகள் ஆலோசனை சபை, சர்வமதத் தலைவர்கள் ஆலோசனை சபை, தொழிற்சங்க இயக்கங்கள், சார்புடைய அமைப்புகளாலும் கட்சியைப் பலப்படுத்துவோம். அடுத்த வருடம் தேர்தலுக்கான வருடமாகும். எந்நேரத்திலும் தேர்தலை சந்திக்க ஐக்கிய மக்கள் சக்தி தயாராக உள்ளது. இந்த போராட்டத்திற்கு அனைவரும் ஆதரவு தருமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம் - என்றார். (அ)

# பொறுப்புக் கூறல், நல்லிணக்கத்தை உறுதிப்படுத்த இலங்கையில் அர்த்தமுள்ள நடவடிக்கைகள் அவசியம்

## ஐ.நா. மனித உரிமை பேரவையில் சர்வதேச நாடுகள் வலியுறுத்தல்!



**ஜெனிவா, செப். 13**

**இலங்கை அரசாங்கம் பொறுப்புக்கூறலையும் நல்லிணக்கத்தையும் உறுதிப்படுத்துவதற்கு அவசி யமான அர்த்தமுள்ள நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டுமென ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகள் வலியுறுத்தியுள்ளனர்.**

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 54ஆவது கூட்டத்தொடர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஜெனிவாவில் ஆரம்பமானது.**

இங்கு ஐ.நா மனித உரிமைகள் பதில் ஆணையாளர் நாடா அல்-நஷீஃப்பின் உரையைத் தொடர்ந்து ஏனைய நாடுகளின் பிரதிநிதிகள் இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பில் உரையாற்றினர்.

அதன்படி ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் சார்பில் பேரவையில் உரையாற்றிய பிரதிநிதி, அமைதியான முறையில் போராட்டங்களில் ஈடுபடுவதற்கும், ஒன்று கூடுவதற்குமான பொதுமக்களின் உரிமைக்கு இலங்கை அரசாங்கம் மதிப்பளிக்கவேண்டும் என வலியுறுத்தினார்.

அதேபோன்று வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் நீண்டகாலமாக உண்மை மற்றும் நீதிக்கா க் காத்திருப்பதாக சுட்டிக்காட்டிய அவர், மனித உரிமை கள் மற்றும் சட்டத்தின் ஆட்சியைப் பாதுகாக்கும் அதே வேளை பொறுப்புக்கூறலையும் நல்லிணக்கத்தையும் உறுதிப்படுத்துவதற்கு அவசியமான அர்த்தமுள்ள நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவேண்டும் - என்றார்.

அதேவேளை அமெரிக்கா, கனடா, ஜேர்மனி, வட மெசிடோனியா, மாலாவி மற்றும் மொன்ரனேக்ரோ ஆகிய இணையனுசரணை நாடுகளின் சார்பில் உரையாற்றிய பிரிட்டன் பிரதிநிதி, இலங்கையில் அதிகாரப்பகிர்வு மற்றும் காணி விடுவிப்பு என்பன இன்னமும் கரிசனைக்குரிய பிரச்னைகளாகக் காணப்படுவதாக சுட்டிக்காட்டினார்.

அத்தோடு கடந்தகால மீறல்கள் தொடர்பான பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் என்பன இன்னமும் உறுதிப்படுத்தப்படவில்லை என்று தெரிவித்த அவர், உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவொன்று நிறுவப்படும் பட்சத்தில், பாதிக்கப்பட்டோர் உள்ளடங்கலாக சகல தரப்பினரதும் நம்பிக்கையை வென்றெடுப்பதன் ஊடாக மாத்திரமே அது வெற்றிகரமானதொரு பொறிமுறையாக இயங்கமுடியும் எனக் குறிப்பிட்டார்.

அர்த்தபூர்வமான நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதை முன்னிறுத்தி, சகல தரப்பினருடனும் கலந்துரையாடி மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் முன்னெடுக்கவேண்டுமென ஜப்பான் பிரதிநிதி வலியுறுத்தினார்.

அதுமாத்திரமன்றி உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு உள்ளடங்கலாக நிலைமாறுகால நீதியை உறுதிப்படுத்துவதற்குத் தாம் முழுமையான ஒத்துழைப்பை வழங்கத்தயாராக இருப்பதாகவும் அவர் உறுதியளித்தார்.

மேலும் நியூஸிலாந்து, ஓமான், எகிப்து, லக்ஸம்பேர்க், ஜேர்மனி, பிரான்ஸ், இஸ்ரேல், துருக்கி, கியூபா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளும் இலங்கை தொடர்பில் பேரவையில் உரையாற்றியமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் கவனவீர்ப்பு போராட்டம் முல்லைத்தீவில்






முல்லைத்தீவு, செப். 13

நாடளாவிய ரீதியில் நேற்று பல்வேறு மாவட்டங்களிலும் அமைந்துள்ள வைத்தியசாலைகளில் வைத்தியர்கள் சாத்வீகப் போராட்டங்களை முன்னெடுத்தனர் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்தது.

வைத்தியர்கள் நாட்டை விட்டுச் செல்கின்றமையினால் ஏற்பட்டுள்ள பாதிப்பு தொடர்பில் தீர்வொன்றைப் பெற்றுத்தருமாறு கோரி இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் பணியாற்றும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தைச் சேர்ந்த மருத்துவர்கள் வைத்தியசாலையின் சிகிச்சை நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் மருத்துவமனை முன்பாக எதிர்ப்பு நடவடிக்கையை மேற்கொண்டனர்.

நேற்று நண்பகல் 12.30 தொடக்கம் 2.00 மணிவரை இந்த கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதற்கு முன்னர் மருத்துவமனையில் சிகிச்சைக்காக வந்த நோயாளர்களுக்கு துண்டுப் பிரசுரங்களை வழங்கி போராட்டத்தின் கோரிக்கை குறித்து தெளிவுபடுத்தப்பட்டது.

கடந்த ஆண்டு மட்டும் 700 வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளார்கள். பல அரச வைத்தியசாலைகளில் பல்வேறு மருந்துகள் தட்டுப்பாடான நிலை காணப்படுவதுடன் தரம் குறைந்த மருந்துகள் அரசாங்கத்தினால் இறக்குமதி செய்யப்படுவதன் காரணமாக நோயாளிகள் உள்ளிட்ட சிலரின் அநாவசிய உயிரிழப்புக்கள் இடம்பெற்றுள்ளன.

வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறுகின்றார்கள். இவ்வாறு வைத்தியர்களின் வெளியேற்றம் தொடர்ந்த வண்ணமுள்ளன.

வைத்தியர்களின் வசதிகள் செய்து கொடுக்கப்படாமை, அதிகரித்த பணவீக்கம், பல்வேறு காரணங்களால் வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறுகின்றார்கள். இதன் காரணமாக சுற்றயல் வைத்தியசாலைகள் வெகுவிரைவில் இழுத்து மூடும் ஆபத்து உள்ளது. ஏற்கனவே பல வைத்தியசாலைகளில் ஆளணி குறைந்த நிலையில் வைத்தியர்கள் கடமையாற்றி வருகின்றார்கள்.

இவ்வாறான பிரச்னைகளால் இலவச சுகாதார சேவையானது கடுமையான பாதிப்பினை சந்தித்து வருகின்றது.

எனவே இந்த கோரிக்கைகளை முன்வைத்து அரச வைத்தியர்களால் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 13.09.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இந்தியா, மத்திய கிழக்கு, ஐரோப்பாவை இணைக்கும் வழித்தட திட்டம் சீனாவுக்கு சவால் விடுகிறதா?

அனந்த் பிரகாஷ்

அமெரிக்கா, சவூதி அரேபியா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் தலைவர்களுடன் இணைந்து 'இந்தியா - மத்திய கிழக்கு - ஐரோப்பா பொருளாதார வழித்தடத்தை' பிரதமர் நரேந்திர மோடி சனிக்கிழமை புது டெல்லியில் தொடங்கி வைத்தார்.

இந்தியா முதல் அமெரிக்கா, ஐரோப்பா முதல் மத்திய கிழக்கு வரையிலான நாடுகளின் தலைவர்கள் இதை ஒரு வரலாற்று ஒப்பந்தம் என்று அழைக்கின்றனர்.

இது மத்திய கிழக்கில் செழிப்பை ஏற்படுத்தும் ஒப்பந்தம் என்று அமெரிக்க அதிபர் ஜோ பைடன் கூறியுள்ளார்.

இரண்டு கண்டங்களின் துறைமுகங்களை இணைப்பதன் மூலம் மத்திய கிழக்கில் அதிக செழிப்பு, ஸ்திரத் தன்மை மற்றும் ஒருங்கிணைப்பை ஏற்படுத்தும் மிகப் பெரிய ஒப்பந்தம் இது என்று அவர் தெரிவித்தார்.

'வர்த்தகத்தை துரிதப்படுத்தும் நேரடிப் பாதையாக இது இருக்கும்' என்று ஐரோப்பிய ஆணையத்தின் தலைவர் உர்ஸூலா வோன் டேர் லேயன் கூறியுள்ளார்.







இந்தியா-மத்திய கிழக்கு-ஐரோப்பா பொருளாதார வழித்தடம் என்றால் என்ன? அது ஏன் முக்கியமானது?

### பிரதமர் மோடி தொடங்கி வைத்தது என்ன?

அமெரிக்கா, வளைகுடா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் தலைவர்களுடன் இணைந்து மிகப்பெரிய, லட்சிய பூர்வமான உள்கட்டமைப்பு திட்டத்தை பிரதமர் மோடி தொடங்கி வைத்தார்.

இந்தியா, மத்திய கிழக்கு, ஐரோப்பாவை ரயில் மற்றும் துறைமுக நெட்வொர்க் மூலம் இணைப்பது, இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

இந்தத் திட்டத்தின் கீழ் மத்திய கிழக்கில் அமைந்துள்ள நாடுகள் ரயில் வலையமைப்பின் மூலம் இணைக்கப்பட்டு, பின்னர் அவை கப்பல் பாதை மூலம் இந்தியாவுடன் இணைக்கப்படும். இதன் பிறகு இந்த நெட்வொர்க் ஐரோப்பாவுடன் இணைக்கப்படும்.

செய்தியாளர்களிடம் பேசிய அமெரிக்க தேசிய பாது காப்பு துணை ஆலோசகர் ஜான் ஃபைனர், இந்தத் திட் டத்தின் முக்கியத்துவத்தை விளக்கினார்.

"இது வெறும் ஒரு ரயில் திட்டம் மட்டுமல்ல. இது கப்பல் மற்றும் ரயில் திட்டம். இந்தத் திட்டம் எவ்வளவு மதிப்புமிக்கது, லட்சியபூர்வமானது, முன்னோடியானது என்பதை மக்கள் புரிந்துகொள்வது மிகவும் முக்கியம்," என்றார் அவர்.

"இந்த ஒப்பந்தம் குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் உள்ள நாடுகளுக்குப் பயனளிக்கும். உலக வர்த்தகத்தில் மத்திய கிழக்கு நாடுகள் முக்கியப் பங்கு வகிப்பதற்கு இது உதவும்," என்று அவர் கூறினார்.

### இந்த ஒப்பந்தத்தால் என்ன மாற்றம் ஏற்படும்?

இந்தியா, மத்திய கிழக்கு மற்றும் ஐரோப்பிய நாடு களுக்கு இடையிலான இந்த ஒப்பந்தம் அடிப்படையில் ஓர் உள்கட்டமைப்பு திட்டமாகும்.

இதன் கீழ் துறைமுகங்கள் முதல் ரயில் பாதை இணைப்புகள் வரை எல்லாமே கட்டப்பட உள்ளது. இந்தியாவில் இருந்து ஐரோப்பாவிற்கு செல்லும் ரயில் பாதைத் தொடர்பு மிகவும் விரிவானது.

ஆனால் மத்திய கிழக்கைப் பார்த்தால் அங்குள்ள ரயில் பாதைகள் ஒப்பீட்டளவில் விரிவாக இல்லை. இதன் காரணமாக சரக்குப் போக்குவரத்து பெருமளவில் சாலை அல்லது கடல் வழியாகவே செய்யப்படுகிறது.

ரயில்வே பாதைகள் இணைக்கப்பட்டால், மத்திய கிழக்கின் ஒரு மூலையில் இருந்து மற்றொரு மூலைக்கு சரக்குகளைக் கொண்டு செல்வது எளிதாகும்.

இதனுடன் கூடவே இந்தத் திட்டத்தால் உலகளாவிய வர்த்தகத்திற்கான புதிய கப்பல் போக்குவரத்து வழியையும் வழங்க முடியும். ஏனெனில் தற்போது இந்தியா அல்லது அதைச் சுற்றியுள்ள நாடுகளில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் சூயஸ் கால்வாய் வழியாக மத்திய தரைக் கடலை அடைகின்றன. இதன் பிறகு அவை ஐரோப்பிய நாடுகளை சென்றடைகிறது.

இதனுடன், அமெரிக்க கண்டத்தில் அமைந்துள்ள நாடுகளுக்குச் செல்லும் பொருட்கள் மத்தியதரைக் கடல் வழியாக அட்லான்டிக் பெருங்கடலில் நுழைந்து, பின்னர் அது அமெரிக்கா, கனடா அல்லது லத்தீன் அமெரிக்க நாடுகளை அடைகிறது.

"தற்போது மும்பையில் இருந்து ஐரோப்பாவுக்கு புறப்படும் கண்டெய்னர்கள் சூயஸ் கால்வாய் வழியாக ஐரோப்பாவை அடைகின்றன. எதிர்காலத்தில் இவை துபாயில் இருந்து இஸ்ரேலில் உள்ள ஹைஃபா துறைமுகத்திற்கு ரயிலில் செல்ல முடியும்.

இதற்குப் பிறகு அவை ஐரோப்பாவை சென்றடையும். இதனால் நிறைய நேரத்தையும் பணத்தையும் மிச்சப்படுத்த முடியும்," என்று யூரேசியா குழுமத்தின் தெற்காசிய நிபுணர் பிரமீத் பால் சௌத்ரி கூறினார்.

தற்போது சர்வதேச வர்த்தகத்தின் 10 சதவீதம் சூயஸ் கால்வாயை நம்பியுள்ளது. இங்கு ஒரு சிறிய பிரச்னை






ஏற்பட்டாலும்கூட சர்வதேச வர்த்தகத்திற்கு அது பெரும் சவாலாக உள்ளது.

'எவர் கிவன்' என்ற பெரிய சரக்குக் கப்பல், 2021ஆம் ஆண்டில் சூயஸ் கால்வாயில் பக்கவாட்டில் சிக்கிக் கொண்டது.

இந்தச் சம்பவம் சர்வதேச வர்த்தகத்திற்கு நெருக்கடியை உருவாக்கியது. இந்தப் பிராந்தியத்தின் வழியாகச் செல்லும் சரக்குகளை ஒரு வார காலத்திற்கு இது தாமதப்படுத்தியது.

இந்த ஒப்பந்தத்தின் கீழ் கடலுக்கு அடியில் ஒரு கேபிள் போடப்படும். அது இந்தப் பகுதிகளை இணைத்து, தொலைத்தொடர்பு மற்றும் தரவு பரிமாற்றத்தை விரைவுபடுத்தும் என்று ஏஎஃப்பி செய்தி முகமை தெரிவிக்கிறது.

இந்த ஒப்பந்தத்தின் கீழ் பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி மற்றும் போக்குவரத்துக்கான ஏற்பாடுகள் செய்யப்படும்.

உலகிற்கு ஒரு புதிய வர்த்தகப் பாதையை இது கொடுக்கும் என்பதால் இந்த ஒப்பந்தம் ஆக்கபூர்வமா னதாக இருக்கும் என்று சர்வதேச வர்த்தக நிபு ணர் டாக்டர் பிரபீர் டே கருதுகிறார்.

"இந்த ஒப்பந்தம் உலகிற்கு ஒரு புதிய வர்த்தகப் பாதையை வழங்கும். சூயஸ் கால்வாய் வழியை நாம் சார்ந்திருப்பதை இது குறைக்கும்.

அத்தகைய சூழ்நிலையில் அந்த வழித்தடத்தில் எப் போதாவது ஏதேனும் சிக்கல் எழுந்தால், அது சர்வதேச வர்த்தகத்திற்கு அச்சுறுத்தலாக இருக்காது. ஏனெனில் மாற்று வழி இருக்கும்.

இதனுடன், சவூதி அரேபியா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் ரயில் பாதைகள் சரியாக இல்லை. இந்தப் பாதை அமைக்கப்பட்டால் மத்திய கிழக்கில் இருந்து எண்ணெய் கொண்டு வருவது எளிதாகிவிடும்," என்று டாக்டர் டே கூறினார்.

மத்திய கிழக்கு நாடுகளுக்கும் இது சாதகமானதாக இருக்கும் என்று சர்வதேச உறவுகள் நிபுணரும், ஜேஎன்யு பேராசிரியருமான டாக்டர் ஸ்வரன் சிங் கருதுகிறார்.

'மத்திய கிழக்கு நாடுகளில் ரயில்வே நெட்வொர்க் நிறுவப்படுவதன் மூலம், இந்த நாடுகளில் நிலைமை மேம்படும். ஒருபுறம், உள்ளூர் மக்களுக்குப்




புதிய வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும்.

மறுபுறம், இது மத்திய கிழக்கு நாடுகளை ஒன்றுக்கொன்று நெருக்கமாகக் கொண்டு வரும். ஏனெனில் ரயில்பாதை இணைப்புகள் வணிகரீதியாக நாடுகளை நெருக்கமாக்குகின்றன," என்று அவர் குறிப்பிட்டார்.

"ஏதோவொரு விபரீத சூழல் ஏற்பட்டால், இரண்டு நாடுகளுக்கு இடையே விமானப் போக்குவரத்தை உடனடியாக நிறுத்த முடியும். ரயில்வே வழித்தடத்தில் இதைச் செய்வது அவ்வளவு எளிதானது அல்ல. ஏனெனில் இது பொருளாதார இழப்பை ஏற்படுத் தும். இது போன்ற சூழ்நிலையில், நாடுகள் ஒன்றுக் கொன்று புரிந்து நடந்துகொள்ளும்," என்று டாக் டர். ஸ்வரன் சிங் தெரிவித்தார்.

இந்த ஒப்பந்தம் அறிவிக்கப்பட்ட பிறகு, இந்தியாவின் வர்த்தகத்தில் பெரிய ஏற்றம் ஏற்பட வாய்ப்புள்ளது.

### சீனாவின் சவால்

இந்த ஒப்பந்தத்தைப் பற்றிப் பேசிய அமெரிக்க தேசிய பாதுகாப்பு துணை ஆலோசகர் ஜான் ஃபைனர், 'இந்த ஒப்பந்தம் தொடர்பாக உலகம் முழுவதிலும் நேர்மறையான கருத்துகள் வெளியாகும்," என்று நம்பிக்கை தெரி வித்தார்.

இந்தத் திட்டத்தில் ஈடுபட்டுள்ள நாடுகள் மட்டுமின்றி உலகம் முழுவதிலும் இதுதொடர்பாக நேர் மறை யான அணுகுமுறை இருக்கும் என்று நாங்கள் நினைக்கி றோம் என்று அவர் கூறினார்.

இந்த ஒப்பந்தம் ஒரு முக்கியமான நேரத்தில் வந்துள்ளது. சீனாவின் பெல்ட் அண்ட் ரோடு முன்முயற்சியை முறியடிக்க அமெரிக்க அதிபர் ஜோ பைடன் விரும்பு கிறார்.

ஜி20 குழுவிற்கு உள்ளே அவர் அமெரிக்காவை, வளரும் நாடுகளுக்கான மாற்று பங்காளியாகவும் முதலீட்டாளராகவும் முன்வைக்கிறார்.

பெல்ட் அண்ட் ரோடு திட்டத்தின் மூலம் சீனா தனது செல்வாக்கு, முதலீடு மற்றும் வர்த்தகத்தை ஐரோப்பாவிலிருந்து ஆப்பிரிக்கா வரையிலும், ஆசியாவிலிருந்து லத்தீன் அமெரிக்கா வரையிலும் விரிவுபடுத்தியுள்ளது.

இந்த ஒப்பந்தம், சீனாவின் லட்சிய திட்டமான பிஆர்ஐ-க்கு வலுவான பதிலடி என்று அமெரிக்க சிந்தனைக் குழுவான தி வில்சன் மையத்தின் தெற்காசிய அமைப்பின் இயக்குனர் மைக்கேல் குகல்மேன் கருதுகிறார்.

'இந்த ஒப்பந்தம் செயல்படுத்தப்பட்டால், அது இந்தியாவை மத்திய கிழக்குடன் இணைக்கும். பெல்ட் அண்ட் ரோடு முன்முயற்சிக்கு சவாலாக விளங்கும் என்பதால் இந்த ஒப்பந்தம் ஒரு கேம் சேஞ்சராக இருக்கும்," என்று குகல்மேன் ட்விட்டரில் பதிவிட்டுள்ளார்.

# சகலரினதும் நல்வாழ்வை உறுதிப்படுத்தக்கூடிய முறைமை மாற்றத்தை நோக்கி....!



கலாநிதி
ஜெகான் பெரேரா

முறைமை மாற்றத்தை வேண்டிநின்ற போராட்ட இயக்கம் ஒன்றரை வருடத்துக்கு முன்னர் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக நோக்கப்படும் ஊழலை முடிவுக்கு கொண்டுவருவதில் கவனத்தைக் குவித்தது. போராட்ட இயக்கத்தில் இணைந்துகொள்வதற்கு நாட்டின் சகல பாகங்களில் இருந்தும் மக்கள் வந்தார்கள். விவசாய உற்பத்திகளை ஏற்றச் செல்வதற்கு பயன்படுத்தப்படும் உழவு இயந்திரப் பெட்டி மற்றும் லொறிகளிலும் வந்து மக்கள் போராட்டத்தில் கலந்துகொண்டார்கள். இவர்கள் எல்லோரும் மக்களின் நலன்களுக்காக பாடுபடுவதே அரசின் பொறுப்பு என்ற ஒரு பாரம்பரியத்தில் இருந்து வந்தவர்கள்.

ஆனால் திடீரென அந்த மக்கள் இப்போது அனுபவிப்பது நேர்மாறானதாக இருக்கிறது. ஊழல்வாதிகளான தலைவர்கள் டொலர்களைக் களவாடி வேறு நாடுகளின் பதுக்கிவைத்திருப்பதே எரிபொருட்கள், உணவு வகைகள் மற்றும் மருந்துப் பொருட்களையும் ஏனைய அத்தியாவசியப் பொருட்களையும் கொள்வனவு செய்வதற்கு டொலர்கள் தட்டுப்பாடு ஏற்பட்டதற்கு காரணம் என்று நம்பப்பட்டது. மக்களுக்காக தலைவர்கள் எதையும் விட்டுவைக்காமல் டொலர்கள் எல்லாவற்றையும் தங்களுக்காக எடுத்துக்கொண்டார்கள் என்ற உணர்வே மக்களை கொந்தளிக்க வைத்தது.

மக்களின் நலன்களில் அக்கறைகொண்ட அரசுக்கான களத்தை அமைத்த சுதந்திர இலங்கையின் தாபகத் தலைவர்களுக்கு முதலாவது பிரதமர் டி.எஸ். சேனநாயக்க தலைமை தாங்கினார். தற்சார்புடைய விவசாய சமூகத்தை உருவாக்கும் நோக்கைக் கொண்டிருந்த அவர் தான் தொடங்கிய பெரியதும் சிறியதுமான நீர்ப்பாசனத் திட்டங்கள் மூலமாக அந்த விவசாய சமூகத்தை நலிவுறாது நீடித்திருக்கச் செய்யவிரும்பினார்.

சகல மட்டங்களிலும் உள்ள மக்களின் குறிப்பாக வறிய மற்றும் ஓரங்கட்டப்பட்ட மக்களின் அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்ட இந்த பயணத்தில் சி.டபிள்யூ.டபிள்யூ. கன்னங்கராவும் இணைந்துகொண்டார். கல்வியமைச்சராக இருந்த அவர் வறியவர்கள், பணக்காரர்கள் என்றோ நகரவாசிகள், கிர்மவாசிகள் என்று எந்த பாகுபாடும் இல்லாமல் சகல மக்களுக்கும் நன்மைபயக்கக்கூடிய இலவச கல்வித்திட்டத்தைக் கொண்டு வரப்பாடுபட்டார்.

அந்த நேரத்தில் இடப்பட்ட அடித்தளங்களை அவர்களுக்கு பிறகு வந்த தலைவர்களும் நிலையானதாகப் பேணிக்காத்தார்கள். அதன் விளைவாக 1970 கள் மட்டில் இலங்கையர்களின் வாழ்க்கத்தரம் பெருமளவுக்கு உயர்ந்த தேசிய வருமானத்தைக் கொண்டிருந்த வேறு நாடுகளின் மக்களினதும் வாழ்க்கைத் தரத்தை விஞ்சியதாகக் காணப்பட்டது.

வறியவர்கள், பணக்காரர்கள், நகரவாசிகள், கிராமவாசிகள் என்று பல்லாயிரக் கணக்கில் அறகலய போராட்டத்தில் பங்கேற்ற மக்களிடம் சமுதாயம் முழுவதற்கும் பயனளிக்கக்கூடிய முறைமை மாற்றம் ஒன்றைக் காணும் இலட்சிய நோக்கைக் கொண்டிருந்தார்கள். அபிவிருத்தியின் பயன்களைள ஊழல்தனமான வெளிநாடுகளில் தங்களது வங்கிக் கணக்குகளில் வைப்புச் செய்ய அனுமதிக்காமல் சகலருக்கும் கிடைக்கக்கூடியதாக அந்த முறைமை மாற்றம் அமையவேண்டும் என்பதே மக்களின் இலட்சியமாக இருந்தது.

ஆனால், தற்போது இடம்பெறுகின்ற முறைமை மாற்றம் ஒரு பூகோள மற்றும் அரசியல் இடப்பரப்பில் வாழ்ந்தாலும் கூட மக்கள் ஏதோ வேறுபட்ட உலகங்களில் வாழ்பவர்கள் போன்று அவர்களுக்கு இடையில் பாரிய ஒரு இடைவெளியைத் தோற்றுவிப்பதாக அமைந்திருக்கிறது.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் முன்னெடுக்கும் முயற்சிகள் பேச்சுவார்த்தை மேசையில் பிரதிநிதித்துவப்படுத்தப்படாத - எதிர்ப்பதற்கு வலிமையற்ற மக்கள் பிரிவினர் மீதே பெருமளவு சுமையை ஏற்றுகிறது. மறுசீரமைப்பு நடவடிக்கைகளின் விளைவாக அடுத்த 12 வருடங்களில் ஓய்வூதிய நிதியங்கள் அவற்றின் மூலதனத்தில் மூன்றில் ஒரு பங்கிற்கும் அதிகமானதை இழந்துவிடும் என்று பேராசிரியர் சுமணசிறி லியனகே மதிப்பிட்டிருக்கிறார்.

### நியாயமற்ற சுமை

கடந்த வாரம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட புதிய வருமானவரி சட்டத்தின் விளைவாக தற்போது 14 சதவீத கோர்ப்பரேட் வரியுடன் சேர்த்துக் கொடுக்கப்படும் ஊழியர் சேமலாப நிதியத்தின் வருடாந்த இலாபம் 10.99 சதவீதத்தில் இருந்து 9.72 சதவீதமாகக் குறையலாம் என்று மத்திய வங்கியின் மதிப்பீட்டு அறிக்கையொன்றை மேற்கோள் காட்டி வெளியுறவு அமைச்சர் அலி சப்ரி கூறியிருக்கிறார். அரச வங்கிகளும் தனியார் வங்கிகளும் வட்டியாக பெருந்தொகையை அறவிடும்போது ஏன் இந்தளவு குறைந்த வீதங்கள்? கோர்ப்பரேட் நிறுவனைங்களைப் போன்று ஓய்வூதிய நிதியங்கள் மீது ஏன் வரி அறவிடப்படவேண்டும்? என்ற கேள்விகள் எழுகின்றன.

ஓய்வூதிய நிதியங்களின் பருமனை மாத்திரம் கருத்தில் கொண்டு பார்க்கும்போது அவற்றுக்கு குறைக்கப்பட்ட வட்டி வீதங்கள் அல்ல மிகையான வட்டி வீதங்கள் கொடுக்கப்படவேண்டும். சமூக நிதியங்கள் என்ற வகையில் அவற்றிடமிருந்து இலாபத்தில் இயங்கும் கம்பனிகளிடம் அறவிடப்படும் வரியின் மட்டத்துக்கு வரி அறவிடப்படவேண்டும்.

ஓய்வூதிய நிதியங்கள் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருப்பவை என்பதால் அரசாங்க முறைமைக்குள் இருக்கும் எவரும் அவற்றின் நியாயத்துக்காக பேசுவதற்கு எவரும் முன்வரமாட்டார்கள் என்றே தோன்றுகிறது. ஓய்வூதிய நிதியங்களுக்கான தொழிலாளர்களின் பங்களிப்பு தன்னியல்பாகவே அவர்களின் சம்பளங்களில் இருந்து கழிக்கப்பட்டு மாறாறப்படுகிறது. அந்த தொழிலாளர்களை பேச்சுவார்த்தை மேசையில் பிரதிநிதித்துவப்படுத்தி நியாயத்தைச் சொல்ல அவர்களின் பிரதிநிதிகள் இருந்தார்கள். அதன் விளைவாக ஏனைய நாடுகள் அவற்றின் கடன்களை மறுசீரமைத்தபோது செய்யாத காரியங்களை எமது அரசாங்கம் செய்வதை தடுக்க வழியேயில்லை.

உலகில் இலங்கை மாத்திரமே உள்நாட்டு நாணய பிணை முறி மறுசீரமைப்பின் முழுச் சுமையையும் பிரத்தியேகமாக தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்பு நிதியங்கள் மீது ஏற்றும் ஒரே நாடு என்று ( வெளியிடப்படட தரவுகளை அடிப்படையாகக் கொண்டு) ஒக்ஸ்போர்ட் மற்றும் ஹார்வாட்டில் பயின்ற பொருளாதார நிபுணரான கலாநிதி நிஷான் டி. மெல் கூறுகிறார்.

கடந்த 25 வருடங்களில் உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பைச் செய்த 14 நாடுகளில் இலங்கையே வங்கிகளையும் தனியார் கடன் வழங்குநர்களையும் தவிர்த்து சமூகப்பாதுகாப்பு நிதியங்களை குறிவைக்கும் ஒரே நாடாக விளங்குகிறது.

அந்த 14 நாடுகளும் அவற்றின் வங்கிகளை மறசீரமைப்புக்கு உட்படுத்தியிருக்கின்றன என்பதை சர்வதேச நாணய நிதியத்தின் தரவுகள் காட்டுகின்றன. அவற்றில் ஒன்பது நாடுகள் தனியார் நாதி நிறுவனங்களையும் மறுசீரமைப்புக்கு உள்ளாக்கின. இரு நாடுகள் மாத்திரமே சமூகப் பாதுகாப்பு நிதியங்களை மறுசீரமைத்தன.ஆனால் அவற்றில் எந்த நாடுமே ஓய்வூதிய ( சமூகப் பாதுகாப்பு ) நிதியங்களை மாத்திரம் மறுசீரமைப்புக்கு உட்படுத்திவிட்டு மற்றைய துறைகளை சுதந்திரமாக விட்டதில்லை.

தொழிலாளர்கள் தங்களது ஓய்வுக்குப் பிறகு பெறக்கூடிய பயன்கள் மீது நேரடியாக தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாக ஊழியர் சேமலாப நிதியம் / ஊழியர் நம்பிக்கை நிதியத்தை அரசாங்கம் இலக்கு வைத்திருக்கிறது. ஆனால் கடன் மறுசீரமைப்பின் இந்த சுமையில் இருந்து வங்கிகளையும் பெரிய கம்பனிகளையும் விட்டுவைக்கிறது. இது அமெரிக்காவில் நடந்தது.ஆனால் இலங்கை அமெரிக்காவை பினனபற்ற முடியாது அந்த்நாடு மிகப் பெரிய பொருளாதார வல்லரசாக இருக்கின்ற அதேவேளை, இலங்கையின் பொருளாதாரம் சின்னச்சிறியதாகும். அதன் ஆள்வீத வருமானமும் மிகவும் சிறியதாகும்.

2008 ஆம் ஆண்டில் ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ. புஷ்ஷின் தீவிர வலதுசாரி அரசாங்கத்தின் கீழ் அமெரிக்காவில் நிதி நெருக்கடியொன்று ஏற்பட்டது. பெரிய வங்கிகளை அரசாங்கம் பிணையெடுத்தது. ஆனால் அதுவும் கூட பாரிய பிரச்னைகளுக்கு வழிவகுத்தது. அமெரிக்கர்கள் தினமும் தங்களை வேலையை இழந்து கொண்டிருந்தவேளையில், தங்களது வீடுகளையும் வாழ்நாள் சேமிப்புக்களையும் இழந்துகொண்டிருந்த வேளையில் 'கொழுத்த பணக்கார வங்கிகளை (அவற்றை பிறகு ஜனாதிபதியாக வந்த பராக் ஒபாமா 'Fat - Cat ' என்று அழைத்தார்) அரசாங்கம் நெருக்கடியில் இருந்து விடுவிக்கவேண்டுமா என்று கேள்வியெழுப்பிய மக்கள் வோல்ஸ்றீட் முற்றுகை போராட்டத்தை தொடங்கினார்கள். அவர்களைக் கலைக்க பல மாதங்கள் எடுத்தன.

### நிலைபேறான தன்மையை உறுதி செய்தல்

கடன் மறுசீரமைப்பு விடயத்தில் ஊழியர் சேமலாப நிதியம் / ஊழியர் நம்பிக்கை நிதியத்துக்கு பங்களிப்புச் செய்யும் தொழிலாளர்களின் பிரதிநிதிகள் தவிர்க்கப்பட்டது மாத்திரமல்ல எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களும் கூட புறக்கணிக்கப்பட்டார்கள். ஊழியர் சேமலாப நிதியம் / ஊழியர் நம்பிக்கை நிதியம் ஓய்வூதிய நிதியங்களை மாத்திரம் குறிவைக்கும் கடன் மறுசீரமைப்பின் அநீதியை இல்லாமல் செய்யப்போவதாக எதிர்க்கட்சி பேச்சாளர்கள் பிரகடனம் செய்திருக்கிறார்கள்.

நிலைபேறான தன்மையை உறுதிசெய்வதே அரசாங்கத்தின் அணுகுமுறையில் உள்ள பிரச்சினையாக இருக்கும். தீர்மானத்தில் சம்பந்தப்படுத்தப்படாதவர்களும் கடன் மறுசீரமைப்பு நியாயமற்றது என்று உணருபவர்களும் ஆதரவை வழங்க விரும்பப்போவதில்லை. பதிலாக அநீதி ஒன்று செய்யப்பட்டுவிட்டது என்று நம்பக்கூடியவர்கள் எடுக்கப்பட்ட தீர்மானத்தை மலினப்படுத்துவதற்கு முயற்சிப்பர்.

மறுபுறத்தில், தீர்மானம் மேற்கொள்ளும் செயன்முறையில் அவர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டால் நீண்டகால நோக்கில் நிலைபேறான தன்மையை உறுதிசெய்யக்கூடிய விட்டுக்கொடுப்புக்களுக்கு வசதியாக இணக்கப்பாட்டைக் காணக்கூடிய பகுதிகளை அவர்களினால் சுட்டிக்காட்டக்கூடியதாக இருக்கும்

பொருளாதார மறுசீரமைப்புத் திட்டத்தின் நிலைபேறான தன்மையை உறுதி செய்யும் முகமாக எதிர்க்கட்சிகளின் குரல்களுக்கு அரசாங்கம் செவிமடுக்க வேண்டியது அவசியமாகும். அவ்வாறு செய்வதன் மூலமாக, அரசாங்கம் மாறும் பட்சத்தில் பொருளாதாரம் தொடர்பில் கொள்கை மாற்றம் ஏற்படக்கூடிய ஆபத்தை தணிக்கக்கூடியதாக இருக்கும். அரசாங்கம் மாறும்போது பொருளாதாரக் கொள்கையும் மாறினால் எதிர்காலத்தில் மிகப்பெரிய பொருளாதார நெருக்கடி ஏற்படக்கூடும்.

பொருளாதார மீட்சி, நிலையுறுதிப்படுத்தல் மற்றும் வளர்ச்சிப் பாதையில் இருந்து கவனத்தை திருப்புவதற்கு தேர்தல்களை அனுமதித்தால் முன்யைதையும் விட படுமோசமான புதிய நெருக்கடி ஏற்படும் என்று முதலீட்டு வங்கிக் குழுமம் ஒன்றினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மெய்நிகர் வழி கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றிய மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி எச்சரிக்கை செய்திருக்கிறார். இலங்கையின் தேர்தல் கலண்டர் நாடு முன்னெடுத்த சர்வதேச நாணய நிதியத்தின் உதவித் திடடங்களின் கீழான முன்னேற்றங்களை மறுதலையாக்கிய வரலாறு ஒன்று இருக்கிறது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

பெருமளவுக்கு கவனத்தைப் பெற்றிருக்கும் அந்த உரையில் கலாநிதி குமாரசுவாமி, "இலங்கையில் தேர்தல் இடம்பெற்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இலங்கையின் பெரும்பாக பொருளாதாரக் கொள்கைகள் சீர்குலைவுக்கு உள்ளாகியிருக்கின்றன. தற்போதைய உதவித்திட்டத்துக்கு முன்னதாக 16 தடவைகள் சர்வதேச நாணய நிதியத்தின் உதவித்திட்டங்களை பெற்றிருக்கிறது. தற்போது செய்திருப்பதைப் போன்று அந்த திட்டங்களின்போது பல தடவைகள் பொருளாதாரத்தை நிலையுறுதிப்படுத்துவதில் நாம் முன்னேற்றத்தைக் கண்டோம். ஆனால் தேர்தல் ஒன்று நெருங்கியதும் அந்த முன்னேற்றம் மறுதலையாகிப் போய்விட்டது" என்று குறிப்பிட்டார்.

ஜனநாயகம் ஒன்றிலே, தற்போதைய பொருளாதாரத் திட்டத்தின் ஆதரவாளர்கள் வாதிடக்கூடியதைப் போன்று தேர்தல்களை இடைநிறுத்துவது அரசாங்கத்தைப் பொறுத்தவரை பதிலாக இருக்க முடியாது. இது மக்களினாலும் சர்வதேச சமூகத்தினாலும் ஏற்றுக்கொள்ளமுடியாத ஒரு ஜனநாயக மறுப்பாக இருக்கும்.சர்வதேச சமூகத்தின் நல்லெண்ணத்தில் அரசாங்கம் தங்கியிருக்கிறது.

சகலரினதும் குறிப்பாக வறியவர்களினதும் ஓரங்கட்டப்பட்ட மக்கள் பிரிவினரினதும் நல்வாழ்வு தொடர்பில் நாட்டின் தாபகத் தலைவர்களுக்கு இருந்த நோக்கை நடைமுறைச் சாத்தியமாக்குவதற்கு ஏதுவாக அரசாங்கம் சகல தரப்புகளை அரவணைக்கும் அணுகுமுறையைக் கடைப்பிடித்து, ஊழல் முறைகேடுகளினால் நாட்டை வங்குரோத்து நிலைக்கு கொண்டு வந்தவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்து பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதுடன் மக்களின் உணர்வுகளுக்கு அரசாங்கம் மதிப்பளிக்கவேண்டும். ●

# அரோகரா

# நல்லூர் கந்தசுவாமி கோயில் தோற்றமும் வரலாறும்!



ஈழநாடு

## நல்லூர் தேர்த்திருவிழா சிறப்பிதழ்

நல்லூர் கந்தசுவாமி கோயில் யாழ்ப்பாணத்து அரசனான கூழங்கை சக்கரவர்த்தியின் அமைச்சரான புவனேகபாகு என்பவனால் கட்டப்பட்டது என்று யாழ்ப்பாண வைபவ மாலை கூறுகிறது. ஆனால், நல்லூர் கந்தசுவாமி கோயில் செண்பகப் பெருமாள் என அழைக்கப்பட்ட பின்னாளில் கோட்டை இராச்சியத்தின் மன்னனான ஆறாம் புவனேக பாகுவால் கட்டப்பட்டது என்றும் கூறப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தை அரசாண்ட கனகசூரிய சிங்கை ஆரிய மன்னனை வென்று 1248 ஆம் ஆண்டு இந்தக் கோயில் அமைக்கப்பட்டது என்று கூறப்பட்டாலும் கோயில் கட்டப்பட்ட ஆண்டை வரலாற்று ஆசிரியர்களால் திட்டவட்டமாகக் கூற முடியவில்லை. எனினும், இந்த ஆலயம் 10ஆம் நூற்றாண்டிலேயே அமையப்பெற்றது என்று பொதுவாகக் கூறுவர்.

எனினும், தற்போது அமைந்துள்ள நல்லூர் கந்தசுவாமி ஆலயம் மூன்றாவது கோயில் கட்டுமானம் என்று கூறப்படுகின்றது.

புராதன ஆலயத்தை யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியபோது செண்பகப் பெருமாள் அழித்தான் என்றும், பின்னர் அவன் எழுப்பிய ஆலயத்தை 1620இல் போர்த்துக்கேயர்கள் அழித்தார்கள் என்றும் கூறப்படுகின்றது.

தற்போது அமையப்பெற்ற நல்லூர் ஆலயம், ஒல்லாந்தர் ஆட்சியில் அரச பணியில் இருந்த தொன்ஜுவான் இரகுநாத மாப்பாண முதலியாரால் கட்டப்பட்டது. முருகன்மீது கொண்ட பக்தியால் தனது சொந்த நிலத்தைக் கொடுத்து ஆலயத்தை கட்டினார் என்று கூறப்படுகின்றது. அக்காலத்தில் ஆலயத்தை கட்டுவதற்கு ஒல்லாந்து அரசாங்கத்தின் அனுமதி கட்டாயமானது. இரகுநாத மாப்பாண முதலியார் அதிகாரம்மிக்க அரச அதிகாரியாக இருந்ததால் இந்தப் பணி சாத்தியமானது என்று கூறப்படுகின்றது.

1734 ஆம் ஆண்டு சிறிய ஆலயமாக இந்த நல்லூர் கோயில் நிறுவப்பட்டது. முருகப் பெருமானின் பெருவிருப்பத்தின் பேரிலேயே இந்த இடம் தெரிவானது.

ஆலயத்தை கட்டுவித்த இரகுநாத மாப்பாண முதலியாரின் சந்ததியினரே இந்த ஆலயத்தை இன்றுவரை நிறுவி வருகின்றனர். இந்த வகையில், ஆலயத்தின் 11ஆவது பரிபாலகராக சயந்தன மாப்பாண முதலியார் திகழ்கிறார்.

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் 1921 ஆம் ஆண்டு அர்ச்சனை பற்றுச்சீட்டாக ஒரு ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டது. சைவ ஆலயங்களில் முதன் முறையாக அர்ச்சனை பற்றுச் சீட்டு வழங்கும் நடைமுறை இங்கேயே தோற்றம் பெற்றது. எனினும், அன்றுமுதல் இன்றுவரை அர்ச்சனை சீட்டு ஒரு ரூபாயாகவே இருப்பது சிறப்புக்குரியது.

நல்லூர் ஆலயத்தின் மற்றோர் சிறப்பு நேரம் தவறாமையாகும். பூசைகள் விழாக்கள் ஏனைய ஆலயப் பணிகள் அனைத்தும் நிர்ணயிக்கப்பட்ட காலத்தில் செயல்படுத்தப்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது. ●





## கருணை புரிவாயப்பா...!

ஆர்ப்பரித்தெழுந்த சூரனையே ஆட்கொண்டு
பெரு வாழ்வீய்ந்த முருகா
காரிருள் சூழ் வாழ்வின் தொல்லை களையவே
நல்லையில் அமர்ந்தருளும் நாயகா
கார்த்திகேயா நீ காத்த தமிழும் மண்ணும்
இன்று சிதைவதைக் காணவில்லையோ
பார் மெச்சிய பண்பாடும் விழுப்பமான ஒழுக்கமும்
கல்வியும் கலையும் அருகுதே குமரா
சீரோங்கி சிறப்பாய் பொற்காலம் மீள
கருணை புரிவாய் நல்லூரானே...!

**இ. கஜிதாகரன்**
கோண்டாவில்

## கருணையின் பொருள் நீ நல்லை குமரா!

கருணையின் அழகன் நீ நல்லை முருகா - உயர்
கருணையின் பொருளும் நீ நல்லை குமரா - என்றும்
அடியவர் துயர் தீர்க்கும் அருட் கடல் நீயன்றோ - உன்
அன்பரின் பிணி தீர்க்கும் மருத்துவர் நீயன்றோ - கந்தா
அருட்கரம் நீட்டியன்று அருணகிரி உயிர் காத்தாய் - இடை
சிறுவனாய் வந்தன்று கனியுடன் தமிழ் தந்தாய் - உயர்
வீரனாய் வந்தன்று அமரரின் இடர் முடித்தாய் - அழகு
முருகனாய் வந்தன்று குறவள்ளிக்கு இடம் தந்தாய் - முருகா
முருகா உன் கருணைக்கோர் எல்லையும் உண்டாமோ - நல்லை
கந்தா உன் அன்புக்கு வரைவேதுமுண்டாமோ - அருள்
முருகா உன் அருளுக்கோர் அளவுகோல் உண்டாமோ - நல்லை
கந்தா உன் பதம் காணப் பேரருள் போதுமன்றோ - அன்பு

**முருகு**
யாழ்ப்பாணம்.




## வண்ண ரதமேறி வரமருளும் வடிவேலன்

எண்ணமெல்லாம் நிறைந்திருக்கும் ஏகம்பனிளையோன்
எழில் பூத்த நல்லூரிலுறைந்து
திண்ணதாய் வருமடியவர்க்கு தினம் நல்லருளீய்ந்து
திகழொளி பரப்பும் கந்தன்
மண்ணில் மகிழ்வோங்க மறத்தமிழர் வாழ்வில்
மறைந்ததே இடரென்று இன்புற்றோங்க
வண்ணரதமேறி வள்ளி தெய்வானையோடு வருகின்ற
வரங்கள் அருள்ந்திடவே வையகம் சிறந்திடவே

**க. லோஜினி**
கோண்டாவில்






# தேரடி வில்வமர நிழல்


அனந்த பாலகிட்ணர்

ஓர் அற்புத விருட்சமாக கந்தனின் அருளை நிழலாகத் தருவதாக இருப்பது நல்லூர் தேரடியிலுள்ள வில்வ மரமா கும். இந்த வில்வ மரம் உயரம் மற்றும் அதன் அளவில் ஏனைய விருட்சங்களைப் போல பரந்து விரிந்ததாக காணப் படாவிட்டாலும் சிறிதானதாகவும் அதன் மகிமை விசாலமாக இருப்ப தையுமே உணர முடியும்.

யாழ்ப்பாணத்தின் சித்தர்களாக வாழ்ந்து தமது வார்த்தைகளாலும் விநோதமான செய்கைகளாலும் கந்தனின் அருளை வெளிப்படுத்திய செல்லப்பா சுவாமிகள் அவரின் சீடரான யோக சுவாமிகள் ஆகியோர் அமர்ந்தி ருந்து இளைப்பாறிய புனித இடமே நல்லூர் தேரடி வில்வ மர நிழலாகும்.

தற்போது மகோற்சவ காலத்தில் தேரடி வில்வமரங்களில் வில்வம் பழங்கள் காய்த்திருப்பது கந்தன் அருளின் வெளிப்பாடாகவே இருக்கின்றது.

தேர் உற்சவத்தின் போது ஆறுமுக சுவாமி தேவ சேனாதிபதி கோலத்தில் கம்பீரமாக தேரேற வரும் போது தேரேறும் படிகளை நெருங்குகையில் அவரது அற்புதமான கோலம் தேரடி படிவாசலில் இருக்கின்ற வில்வமரங்களையும் தடவி



முத்தமிட்டுச்செல்வது மெய்சிலிர்க்க வைக்கும் காட்சியாகவே அமைந்திருக்கும்.

நல்லைக் கந்தனின் தேரடி மகிமையை முழுமையாக அனுபவித்தவர்கள் சித்தர்களான செல்லப்பா சுவாமிகள் மற்றும் அவரது சீடரான யோக சுவாமிகள் என்பதனை நேரில் கண்ட பலர் இன்றுங்கூட வாழ்ந்து வருகின்றார்கள்.

இருவருமே தேரடியிலும் அதனை அண்டிய வில்வமர நிழலிலும் அமர்ந்திருப்பார்களாம். அச்சமயம் அவர்கள் பித்தர்களோ என்று எண்ணுமளவுக்கு வேடிக்கையான செயல்கள் பலவற்றையும் புரிவார்களாம். தேரடி வழியாக போவோர் வருவோர் அவர்கள் செய்பவற்றை பார்த்து வியந்து நிற்பார்களாம். இந்த மகான்கள் சித்தர்கள் என்பதை உணராதவர்கள் அவர்களை சீண்டியும் விடுவார்களாம். அப்போது அந்த சித்தர்களும் அவர்களை தமது வாய்க்கு வந்த வார்த்தைகளால் ஏசுவார்களாம்.

ஆனால், அவ்வாறு அவர்களது தூ ற்றல்களை எதிர்கொண்டவர்கள் தமக்கு அவை ஆசீர்வாதமாக இருந்தன என்றே குறிப்பிடுவதையும் அறிய முடியும்.

செல்லப்பா சுவாமிகள் தேரடியின் படிகளில் படுத்திருப்பாராம். பின்னர் கீழிறங்கி வில்வமர நிழலில் அமர்ந்திருப்பாராம். அவரைப் போலவே அவரது சீடரான யோக சுவாமிகளும் செய்வாராம்.

இன்று நல்லூருக்கு வருவோர் ஆலயத்தினுள் செல்ல முன்னர் கால்களை கழுவிவிட்டு முதலாவதாக தேரடி வில்வ மரத்தை சுற்றி வருவதே வழக்கமாக இருக்கின்றது. ஆனால், குருவுக்கு பின்னரே தெய்வம் என்பதை உணரவைக்கும் சக்தியாக இருப்பதை அதனைச் சுற்றி வரும் பக்தர்களை அவர்கள் அறிந்தோ அறியாமலோ உணர வைப்பதாகவே அந்த அற்புத தேரடி வில்வ மரம் நிலைத்து நிற்கின்றது.

தற்போது செல்லப்பர், யோகர் ஆகியோர் அமர்ந்திருந்த பூர்வீகமான வில்வ மரத்துக்கு அருகில் வேறு வில்வமரங்களும் வளர்ந்திருப்பது தேரடி மகிமையை மேலும் உணரவைப்பதாகவே இருக்கின்றது.

# “தமிழர் இராசதானியில் நல்லைக் கந்தன் தேரேறி வருகிறான்”

மதுரகவி
காரை. எம்.பி.அருளானந்தன்

முத்தமிழால் வைதாரையும் வாழவைப்பவனாக வலிமையும், அழகும், அருளும், அன்பும் பொருந்திய பெருங்கடவுள் என கந்தபுராண காவிய நாயகனாக "சூரனுடலற வாரி சுவறிட வேலை விடவல பெருமான்" எனும் திருப்புகழ் நாயகன் - தாரகன், சிங்கன், சூரன் செருக்கடக்கிய செம்மலாக "சுற்றி நில்லாதே பகையே துள்ளி வருகுது வேல்" என்ற வரிகளுக்கு இன்றும் தனிப் பெரும் தெய்வமாய் உமையாள் பயந்த இலட்சியமாக சரவணத்தில் உதித்த ஆறுமுகனாக, திருத்தணிகை, பழனி, திருச்செந்தூர், திருவாவினன்குடி, திருச்சீரலைவாய், திருப்பரங்குன்றம் எனும் ஆறுபடை வீடுகளிலும் அமர்ந் தருள் புரியும் ஈசனாய் அழகிய சித்திரத் தேரிலே ஆறுமுகத்தோடு அபயகரம் காட்டி தேறுதலைத் தந்து தேசநலன் காக்க நல்லூரான் தேரேறி வருகின்ற திருக்காட்சி அற்புதக் காட்சியாக அமைகின்றது.



**எந்த மயமும் கந்த மயமாகவே நல்லையம்பதி காட்சியளிக்கின்றது**

இன்று நல்லையம்பதி இந்திரவிழா போலக் காட்சியளிக்கின்றது. எந்த மயமும் கந்த மயமாகவே இருக்கிறது. முருகப் பெருமான் தன்னுடைய ஆறு முகக் கோலத்துடன் தேரேறி எழுந்தருளி வருகிறான். சிவபெருமானுடைய ஐந்து முகமும் உமா தேவியாரின் ஒரு முகமும் சேர்ந்து சிவனும் சக்தியும் கலந்த ஒரு திருவுருவமாக ஆறுமுகப் பெருமான் தோன்றினான் என்பது ஒன்று.

**ஆறுமுகப் பெருமானின் அருள்நலம்**

இறைவன் தன்னுடைய ஐந்து முகங்க ளையும் அதோ முகத்தையும் சேர்த்து ஆறுமுக நாதனாக திரு அவதாரம் செய்தார் என்பது மற்றொன்று. நான்கு திசையும் மேல், கீழ் இரண்டும் ஆக ஆறு இடங்களிலும் எம்பெருமான் திருவருட் பார்வை செல்கின்றது என்பதை அவனு டைய ஆறுமுகங்களும் நமக்குச் சொல்கின்றன.

ஆறுமுகத் தத்துவம் மிகப் பழமையா னது, மிகப் புதுமையானது எல்லாக் காலத்திற்கும் உரியது. அதுவே ஆதியானது. அந்தமானது, இன்னொரு வகையாக ஆதியும் அந்தமும் அற்றது. இத்தகு பெருமைகளைக் கொண்ட ஆறுமுக சுவாமியே இன்று அடியார் களை அரவணைத்துக் காத்து இரட்சிப்ப தற்காக தேரேறி வருகின்றார்.

**தேர்த்திருவிழாவின் மகிமை**

உற்சவம் இறைவனது ஐந்தொழிலின் தத்துவத்தை உள்ளடக்கியுள்ளது. படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் ஆகிய ஐந்தொழில்களின் உண்மைகளைப் புலப்படுத்தி நிற்பது மகா உற்சவமாகும்.

இன்று நல்லையம்பதில் தேர்த்திரு விழா நடைபெறுகிறது. உலகமே எம்பெருமான் தேரேறி அருள் பாலிக்கும் தெய்வீகக் காட்சியில் லயித்துவிடுகிறது.

மகோற்சவத்தில் சிறப்பிடம் பெறும் தேர்த்திருவிழா இறைவனுக்குரிய சிறந்த தொரு இராஜோபகாரமாகும். இறை வனது திருமேனியை தாங்கி இத் தேரா னது ஆலய மாமணி வீதியில் அசைந்து ஆடி வருகின்றது.

**உலகமே வியந்து பார்க்கும் நல்லைக்கந்தனின் தேரோட்டம்**

ஊர் கூடித் தேர் இழுத்தல் என்ற முது மொழிக்கேற்ப அனைத்து மக்களும் எத் தகைய வேறுபாடுகளுமின்றி வடந் தொட்டு தேரை இழுத்து வருவது ஓர் உன்னதமான காட்சியாகிறது.

தேர் இருப்பிலிருந்து புறப்பட்டு மீண்டும் இருப்புக்கு வரும் வரை அடியார்கள் அரோகரா கோஷமிட்டு தமது மனமகிழ்ச்சியையும் பக்திவு ணர்வையும் வெளிப்படுத்துவர்.

கந்தன் ஆறுதிருமுகங்களோடு தேரில் ஆரோகணித்து இலட்சோப லட்சம் மக்கள் மத்தியில் வலம் வருகிறான்.

நிச்சயமாக ஈழத்தமிழ் மக்களுக்கு நல்லதொரு தீர்வினை தேரேறி அருள் பாலிக்கும் கந்தப்பெருமான் தந்தருள வேண்டுமென எல்லோரும் இந்நாளில் எங்கள் தேசியப் பெருவிழாவில் முரு கனை வேண்டுவோமாக.

வெற்றிவேல் முருகனுக்கு அரோகரா....!


அனைத்து விதமான மங்கல நிகழ்வுகளையும்
நடத்திட நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்
சிவகாமி மஹால்
• நவீன வசதிகளுடன் கூடிய மண்டபம்
• குளிரூட்டப்பட்ட - குளிரூட்டப்படாத மண்டப வசதிகள்,
• மண்டப, மணவறை அலங்காரங்கள்
• விருப்பத்துக்கேற்ப உணவுத் தெரிவுகள்
• தனியான வாகனத் தரிப்பிடம்
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
021 205 2288, 075 932 6147


இல்லத்தரசிகளின் அரசன்
V.S.P. நல்லெண்ணெய்
போலிகளைக் கண்டு ஏமாறாமல்
V.S.P. நல்லெண்ணெய் வாங்கும் போது
பரிமளா ஸ்டோர்ஸ்
இல. 26A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்
என்ற முகவரியைப் பார்த்து வாங்கவும்
V.S.P
GINGELLY OIL
பூப்பெய்திய மங்கையர்க்கும்
மகப்பேற்று தாய்மார்களுக்கும் என்றென்றும் மகத்துவமானது
V.S.P. நல்லெண்ணெய்
முகவர்கள் :
ஸ்ரீ விநாயகர் சுப்பர் மார்கெட்,
இல.60 திருஞானசம்பந்தர் வீதி, திருகோணமலை.
மகாராஜா Food City
8/3 Dr.E.R. Cooray மாவத்தை, வெள்ளவத்தை,
கொழும்பு.
சுகந்தன்ஸ்
13A, மன்னார் வீதி, வவுனியா.
சண்முகா ஏஜென்ஸி,
159, திருமலை வீதி,
மட்டக்களப்பு.
தொடர்புகளுக்கு :
021 222 4135, 021 222 9165
பரிமளா ஸ்டோர்ஸ்
இல. 26A, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

CAVADI

வெந்தணல் கற்பூரச் சட்டி ஏந்தி வர அம்மா
பாற்குடம் தலை சுக்க தங்கையர்
முருகா! முருகா!! என்று கூவியழைக்க தம்பிமார்
தூக்கில் ஏறி காவடி ஆடிவந்தார் அண்ணா
போர் ஒழிந்து மக்கள் நலம் மலர்ந்திட
தங்கரதம் பவனி வா ஆறுமுகா

## 50 ஆண்டு கால உங்கள் நன்மதிப்பு பெற்ற

# காவடி மார்க் கற்பூரம்




## கற்பூரம் என்று கேட்காதீர்
## ‘காவடி’ என்று கேட்டு வாங்குங்கள்

Sons Group of Company
Praba Trading Company
31, Gabos lane
Colombo - 11
Tel : 329426, 636818

Group of Company
S.V. Murugesu
Hospital Road,
Jaffna

ஏக விநியோகஸ்தர்கள் :
பிரபா டிரேடிங் கம்பனி
31, கபேஸ் லேன்
கொழும்பு - 11
தொ.பேசி இல. - 329426,
- 636818

விநியோகஸ்தர் :
S.V. முருகேசு
வைத்தியசாலை வீதி,
யாழ்ப்பாணம்

# நல்லையை பாடிய இலக்கியங்கள்

**துணவியூர் கேசவன்**

“பக்தியின் மொழி தமிழ்“ என்பர். ஏனைய மொழிகளை விட அளவிலும் ஆழத்திலும் அதிகளவான பக்தி இலக்கியங்கள் தமிழில் தோன்றிய மையே அதற்கான காரணமாகும். தமிழ்ப் பக்தியிலக்கி யப் பரப்பில் ஈழத்தவர்களின் பங்கும் கணிசமானது. ஈழத்தின் ஆலயங்கள் சார்ந்து ஏராளமான இலக்கியங் கள் படைக்கப்பட்டுள்ளன - படைக்கப்பட்டு



வருகின்றன. சம்பந்தர், சுந்தரர் ஆகிய தேவார முதலி களால் திருக்கோணேச்சரம், திருக்கேதீச்சரம் ஆகிய தலங்கள் பாடப்பெற்றுள்ளன.

அருணகிரிநாதர் ஈழத்து முருகன் ஆலயங்கள் மீதும் திருப்புகழ் பாடியுள்ளார். ஏராளமான ஈழத்தவர்கள் எமது ஆலயங்கள் மீது நிறையவே பாடியுள்ளார்கள்ளூா பாடி வருகிறார்கள். அவற்றுள் கணிசமானவை இலக்கி யச் சிறப்புடையவையாக அமைந்து சுவைதருகின்றன. அவ்வகையில் ஈழத்தின் புகழ்பெற்ற தலமான நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தை மையப்படுத்தியும் பல இலக்கியங்கள் படைக்கப்பட்டுள்ளன.

விஜய நகர நாயக்கர் காலத்தில் (15ஆம் நூற் றாண்டின் நடுப்பகுதியில்) வாழ்ந்தவராகக் கருதப்படும் அருணகிரிநாத சுவாமிகள் தமிழ் பக்தியிலக்கியப் பரப்பில் முக்கியமானவர். முருகப்பெருமான் மீது திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தரனுபூதி முதலிய வற்றைப் பாடியவர். அவரால் பாடப்பட்ட திருப்புகழ் களில் ஒன்று நல்லூரானைப் போற்றுகின்றது.

“பூத்தார் சூடுங் கொத்தலர் குழலியர்...“ எனத் தெடங்கும் அத்திருப்புகழ் “ஏற்போர் தாம் வந்து இச்சை யின் மகிழ்வொடு வாய்ப்பாய் வாழும் பொற்ப்ரபை நெடுமதில் யாழ்ப்பாணயன் பட்டினம் மருவிய பெரு மாளே“ என முடிகின்றது. இங்கு, ஏற்பவர்கள் வந்து விருப்பம்போல் மகிழ்வாய் வாழுகின்ற (யாசகர்கள் அவ்வாறு வாழ வேண்டுமாயின் அங்கு நிறைந்த கொடையாளிகள் இருக்க வேண்டும்) பொன்னொளி வீசுகின்ற நீண்ட மதில் சூழ்ந்துள்ள பட்டினமாக யாழ்ப்பாணாயன் பட்டினம் சிறப்பிக்கப்படுகிறது. யாழ்ப்பாணம் முற்காலத்தில் யாழ்ப்பாணாயன் பட்டினம் என அழைக்கப்பட்டதாகத் தெரிகின்றது. எனவே, அருணகிரிநாதர் “யாழ்ப்பாணாயன் பட்டினம் மருவிய பெருமாள்“ எனச்சுட்டியது யாழ்ப்பாண இராச்சியத்தின் முதன்மை வாய்ந்த தலமான நல்லூரின் முருகனையே என்பது தெளிவானது. திருப்புகழில் இடம்பெற்றுள்ள இந்தப் பாடலைத் தவிர்த்துப்பார்த் தால், கிடைக்கின்ற தகவல்களின்படி, ஒல்லாந்தர் காலத்தில் (18ஆம் நூற்றாண்டில்) வாழ்ந்த கூழங்கைத் தம்பிரான் பாடிய “நல்லைக் கலிவெண்பா“வே நல்லையைப் பாடிய பாசுரங்களுள் காலத்தால் முந்தியதாகக் கருதப்படுகிறது. அதனைத் தொடர்ந்து இன்றுவரை ஏராளமான பாமாலைகள் நல்லூரானுக்கு சூட்டப்பட்டுவருகின்றன.

ஈழத்துச் சித்தர்கள் வரிசையில் இடம்பெறும் யோகர் சுவாமிகள் (1872 - 1964) கடந்த நூற்றாண்டில் வாழ்ந்தவர். யோகர் சுவாமிகளுக்கு நல்லூர் முக்கியத்து வமுள்ள தலம். அவரது குருநாதர் வாழ்ந்து நடமாடிய இடம் என்பதனாலும் அவர் குருநாதரைச் சந்தித்த இடம் என்பதனாலும் ஞானோபதேசம் கிடைத்த தலம் என்பதனாலும் ஏனையவர்களுக்கு அமைவதனைவிட யோகர் சுவாமிகளுக்கு நல்லூர் முக்கியத்துவமுள்ள இடமாகிறது. யோகர் சுவாமிகளின் நல்லூர் தொடர் பான பாடல்களில் இதனை உணரலாம். யோகர் சுவாமி கள் எமக்காக விட்டுச் சென்ற அருட்பிரசாதம் “நற்சிந்தனை“. நற்சிந்தனையில் நல்லூர்த் திருத்தலத் தைப் போற்றும் பாடல்கள் பலவுண்டு. அத்தோடு ஏனைய பாடல்களிலும் நல்லூரைச் சிறப்பிக்கும் செய்திகளும் தாராளமாக உண்டு.

“தெளியுமே நின்சிந்தை செல்வனருள் பொங்கி
வழியுமே தானவர்கள் வானோர் - ஒழிவின்றி
வந்து வணங்கும் வளஞ்சேரும் நல்லூரிற்
கந்தவெனச் சொல்லிக் கருது“ - என்பதிலும்

“எந்நாளும் நல்லூரை வலம்வந்து வணங்கினால் இடர்கள் எல்லாம் போமே“ என்பதிலும் நல்லூரின் பெருமையைப் பேசுகிறார் யோகர் சுவாமிகள். மேலும் பின்வரும் பாடலில் அவர் வெளிப்படுத்தும் உறுதி எம்மை சிலிர்க்க வைக்கிறது.

“வேதாந்த சித்தாந்தம் கற்றதனா லென்ன
வேடிக்கைக் கதைகள் பேசினா லென்ன
வீதியில் வந்தொருக்கால் விழுந்து கும்பிட்டால்
வில்லங்கம் எல்லாம் இல்லாமற் போமே“.

“நல்லூரான் கிருபை வேண்டும், வேறென்ன வேண்டும் நம்மைப் பிரியானென நம்பிட வேண்டும்“ -

என நல்லூரான் மீதான நம்பிக்கையை வலியுறுத்தும் யோகர் சுவாமிகள் அந்த நம்பிக்கையின் விளைவாகவே “நல்லூரைக் கும்பிட்டுநீ பாடு, அதனாலே நாட்டிலுள்ள பிணிகள் ஓடும்“ எனத் திடமாக உபதேசிக்கிறார்.

“நல்லூரான் திருவடியை நான் நினைத்த மாத்திரத்தில், எல்லாம் மறப்பேனெடி  கிளியே, இரவு பகல் காணேனெடி“ எனத் தன்னை நல்லூரான் மெய்மறக்கச் செய்யும் அற்புதத்தையும் வெளிப்படுத்திச் செல்கிறார். அண்டங்களை ஆளும் இறைவன் நல்லூரில் எழுந்தருளினான் என்பதனை “எல்லாவுலகமுமான பரம்பொருள் நல்லூரில் வந்தானென்று உந்தீபற“ என்ற அடிகளில் சுட்டிக்காட்டிய சுவாமிகள், “நடந்து போவோம்“ எனத் தலைப்பிடப்பட்டு “நல்லைப் பதிக்கு நேராய் நடந்து போவோம் நாமெல்லாம் வாரீர் சீராய்“ என அடியாரை அழைக்கும் பாடலில் தொல்லையையும் துன்பத்தையும் தரும் ஊழ் அகன்று போகும் கல்லைப் போன்ற மனம் கணத்தில் கரைந்து போகும் அதனால் நல்லைப் பதிக்கு வாருங்கள் என அழைக்கிறார். “வறுமைப் பிணிக்கு மருந்தாக“ நல்லூரானைச் சுட்டும் சுவாமிகள் அம்மருந்தை அருந்தியோர் வாழ்வு பெற்றார்கள் என வெளிப்படுத்துகிறார். அவ்வாறே, “நல்ல மலரெடுத்து நல்லூரை நாடிப்போய் நல்ல மனத்தோடு நாம் பணிந்தால் - நல்லமயில் ஏறிவந்து காட்சி கொடுப்பான் எழில் முருகன் தேறிவிடும் சிந்தை தெளி“ என்றும்

“நல்லூர் எனும்பதியை நாடித் தெரிசித்தால் பல்லூழி வாழலாம் பார்“ என்றும் உரைப்பதில் யோகர்




சுவாமிகளின் தளராத உறுதியைப் பார்க்கிறோம். “நல்லைப் பதிக்கரசே நல்லைப் பதிக்கரசே நல்ல வழிகாட்டி நாயேனை ஆண்டிடடா“ என்பதில் நல்லூ ரானிடம் சரணாகதியடையும் அடியவரைத் தரிசிக்கிறோம். இவ்வாறாக யோகர் சுவாமிகளின் நற்சிந்தனையில் பரந்துகிடக்கும் நல்லூரானின் சிறப்புகள் ஏராளம்.

தமிழிலக்கியப் பரப்பில் பதினைந்தாம் நூற்றாண் டிற்குப் பின்னர் பக்தியைப் பாட பல்வகைச்

(VII ஆம் பக்கம் பார்க்க)





# நல்லையை பாடிய இலக்கியங்கள்...

(VI ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிற்றிலக்கியங்களும் அதிகளவில் பயன்பட்டுள்ளன. நல்லூர் முருகன் மீதும் சிற்றிலக்கிய வடிவங்களைப் பயன்படுத்தி அதிகளவான பாசுரங்கள் பாடப்பட்டிருப்பதனைக்காணலாம். இருபாலை சேனாதிராச முதலியார்(1750 - 1840) "நல்லைக் குறவஞ்சி" என்ற இலக்கியத்தை நல்லூரான் மீது பாடியுள்ளார்.

"கொடிவளரும் மணிமாடக் கோபுரம் சூழ்
நல்லூரில் குருமூர்த்தி
அடி அருள இருள் அகல அமரர் முகம் மலர வர
அணிமான் ஈன்ற
கொடியினொடும் பிடியினொடும் குலவுமுடம்
பிடியொடுங்க கோதண்டம் ஏந்தி
மிடியகல மயிலேறி விடியவந்த தினகரன்போல்
மேவினானே"

என நல்லூரானின் வரவை வர்ணிக்கிறார் அவர். சேனாதிராச முதலியாரின் சமகாலத்தவரான நல்லூர் கந்தப்பிள்ளை(1766 □ 1842) அவர்கள் "நல்லை நகர்க் குறவஞ்சி" என்ற இலக்கியத்தைத் தந்துள்ளார். நல்லையந்தாதி(இருபாலை சேனாதிராய முதலியார்), நல்லைக் கந்தரந்தாதி(வண்ணை மா. சிவராமலிங்கப் பிள்ளை), திருநல்லைத் திருப்புகழந்தாதி (வண்ணை மேற்கு வை. இராமநாதன்), நல்லையந்தாதி(நவாலியூர் சோமசுந்தரப் புலவர்) எனப் பல அந்தாதி இலக்கியங்கள் நல்லூரான் மீது எழுந்துள்ளன. நல்லூர் சந்திரசேகரப் பண்டிதர் 1785இல் "நல்லூர்க் கந்தசுவாமி கிள்ளைவிடு தூது" என்ற தூது இலக்கியத்தைப் பாடியுள்ளார். நல்லை நான்மணிமாலை(ச.சபாரத்தின முதலியார்), நல்லை நாயகர் நான்மணிமாலை (காரைதீவுச் சுப்பையர்), நல்லூர் இரட்டைமணிமாலை (இணுவில் முதுபெரும்புலவர் வை.க.சிற்றம்பலம்), நல்லூர் முருகன் இணைமணிமாலை (வை.க.சிற்றம் பலம்) என மணிமாலை நூல்கள் பாடப்பட்டுள்ளன. வை.க.சிற்றம்பலம் நல்லூரான் மீது கலம்பகம் (நல்லூர்க் கலம்பகம்) பாடியுள்ளார். நல்லூர் சரவணமுத்துப் புலவர் உலாப் பிரபந்தம் (நல்லை வேலவருலா) பாடித் தந்துள்ளார். நல்லூர் சுப்பிரமணியர் பிள்ளைத்தமிழ் (நல்லூர் அப்புக்குட்டி ஐயர்), நல்லைக் கந்தன் பிள்ளைத்

தமிழ் (ச.தங்கமயிலோன்) என்ற பிள்ளைத் தமிழ் இலக்கியங்களும் நல்லைக் கந்தசுவாமி ஊஞ்சல் (மட்டுவில் பிரம்மஸ்ரீ க. ஐயாத்துரை ஐயர்), நல்லை நகர்க் கந்தர் திருவூஞ்சல்(இருபாலை சேனாதிராய முதலியார்) முதலிய ஊஞ்சல் இலக்கியங்களும் நல்லைப் பதிகம் (ஆ.மு.சோமஸ்கந்தப்பிள்ளை), நல்லை சுப்பிரமணியக் கடவுள் பதிகம்(வடகோவை அ.சபாபதி நாவலர்), நல்லைப் பதிகம்(மயிலிட்டி.க.மயில்வாகனப்பிள்ளை), யாழ்ப்பாணத்துத் திருநல்லூர்ப் பதிகம்(தும்பைநகர் சிவ. சதாசிவஐயர்), நல்லூர்க் கந்தர் பதிகம்(நவாலி ஸ்ரீ.க.சோமசுந்தர உபாத்தியாயர்) முதலிய பதிகங்களும் நல்லூர்க் கந்தன் மீது எழுந்துள்ளன. நல்லைக் கலி வெண்பா(கூழங்கைத் தம்பிரான்), நல்லைக் கந்தர் கலி வெண்பா (திருநெல்வேலி சி. கதிரவேற்பிள்ளை) ஆகிய கலிவெண்பாக்கள் நல்லூரான் மீது பாடப்பட்டுள்ளன. இருபாலை சேனாதிராச முதலியார் நல்லை வெண்பா என்ற இலக்கியத்தைப் பாடியுள்ளார்.

"வேதவொலி வேள்வியொலி மிக்க விழாவொலியால்
ஓதவொலி நாணுமுயர் நல்லை - காதரவின்
மாற்கிழவனாகி வரைக்குறவர் முன்வள்ளிபாற்
கிழவனான் பதி"

என்பது சேனாதிராய முதலியாரது வெண்பாக்களுளொன்று.



இருபதாம் நூற்றாண்டில் நவாலியூர் க. சோமசுந்தரப் புலவர் (நல்லூர் முருகன் திருப்புகழ்), சொக்கன் எனப் படும் வித்துவான் க. சொக்கலிங்கம் (நல்லூர்க் கந்தன் திருப்புகழ்) ஆகியோர் நல்லூர் மீது திருப்புகழ் பாடியுள்ளனர்.

"பாரங்கொள்வாய் எனும்
பரிவாலே பாசங்கள் நாசஞ்செய்
அருளாலே - ஆரங்கொள்
மார்பதன் அழ காலே
அடியர்தம் நெஞ்சங்கள்
நிறைவாயே -
ஈரங்கொள்வார்கள் தம்
விழியாலே இனிதுனை வழிபட
வருவாயே ஃ சீர்தங்கு
நல்லையின் பெருவாழ்வே
செயக்கொடியாய் கந்தப்
பெருமானே"



என நல்லூரானைப் பாடிப் பரவுகிறார் சொக்கன். ஈழத்தின் பல்வேறு ஆலயங்கள் மீதும் அருட்புகழ் பாடியுள்ள அளவெட்டி அருட்கவி சீ.விநாசித்தம்பிப் புலவர் நல்லூரானை விடுவாரா என்ன ?

"கல்லொத்த மதியாளர் சிவநூலின் பழியாளர்
- கொடிதான
கண்ணொத்த கரவாளர் குரவோரை இகழ்வாளர்
- புகழ்தேடி
மல்லுக்கு மெலியாரை அடுமாளர் இவரோடு
- கலவாதே
வண்ணத்து மயிலேறும் இருபாத மலர்சூடும்
- கதிதாராய்
செல்லப்பர் சிவயோகர் இனையோர்கள் தவமேவும்
- தலநாதா
சிந்திக்கும் அறிவு ஆறுமுக நாவலரின்
ஞானகுருநாதா
நல்லக்கை திருநீறு புனைவோரின் அகமீதில்
உறைவோனே
நல்லைத் தண் பதிமீதில் நவசோதி ரதமேறும்
பெருமாளே"

எனப்பாடி மகிழ்கிறார் அருட்கவி. கோவை (திருநல்லைக் கோவை - செவ்வந்திநாத தேசிகர்), நாற்பது (நல்லூர் நாற்பது - கவிஞர் கந்தவனம்), விருத்தம் (நல்லைச் சுப்பிரமணியர் திருவிருத்தம் - வண்ணை நெ. வெ.செல்லையா), அகவல் (நல்லைக் கந்தரகவல் - பரமானந்தப் புலவர்), திருப்பள்ளியெழுச்சி (யாழ்ப்பாணத்துத் திருநல்லூர்த் திருப்பள்ளியெழுச்சி - வித்துவான் க. வேந்தனார்), கலித்துறை (நல்லைக் கலித்துறை - குமாரசுவாமி முதலியார்) முதலிய வடிவங்களிலும் நல்லை முருகன் போற்றப்பட்டுள்ளான். மேலும் நல்லைச் சண்முகமாலை(வண்ணை நெ.வெ.செல்லையா), நல்லைக் கந்தசுவாமி விஞ்சதி(உடுப்பிட்டி அ.சிவசம்புப் புலவர்), நல்லைக் கந்தரலங்காரம்(திருநெல்வேலி சி. கதிரைவேற்பிள்ளை) முதலிய பல இலக்கியங்களும் எழுந்துள்ளன.

இன்று பல ஆலயங்கள் மீதும் இசைப்பாடல்கள் பாடப்படுவது வழக்கமாகிவருகிறது. அத்தகைய இசைப்பாடல்களுள் பல இசைநாடாக்களாகவும் இறுவட்டுக்களாகவும் வெளிவந்துள்ளன. அவ்வகையில் நல்லூரான் மீதும் பல பாடலகள் எழுந்துள்ளமையைக் காணமுடிகிறது. அவற்றுள் பல வெறும் இசைக் கோவைகளாக இருந்தாலும் கணிசமானவை கவித்துவத்தோடு அமைந்திருப்பதனையும் மறுப்பதற்கில்லை. சில ஆண்டுகளுக்கு முன்னர் கவிஞர் செ. சுதர்சனின் வரிக ளில் உருவாகி இசைப்பாடலாகி இணையத்தில் வெளி யான தேரடித் தாண்டகம் தத்துவ உண்மையைத் தொடர்புபடுத்தி ஒலிக்கிறது.

"சிறுகுச்சி சிறுதும்பு
சிறுசருகு சேர்ப்பேனை
சிறுமரத்தின் சிறுகிளையில்
சிறுகூட்டை சமைப்பேனை
சிறுகூட்டில் சிறுபொழுது
சிறுவினைகள் புரிவேனை
சிறுவினையால் சிற்றுடலில்
பெருமூட்டை சுமப்பேனை
அறுமூட்டை எனவுரைக்க அறுமுகனாய் வருவோனை
அழகுநிறை நல்லைநகர் அருநடனமிடுவோனை
தருவாயில் திருவடியாய் தாங்கிடு வேற்பெம்மானை
தாங்கவரும் தாய்வயிறு தங்காமல் தேரடிநீ"

என்ற வரிகள் ஆழ்ந்த பொருளும் கவித்துவமும் நிறைந்தவை.

துன்பமும் துயரமும் மலிந்து அதுவே வாழ்வாகிப் போன எமது சூழலில் எழும் பாடல்கள் துயர் சுமந்தவையாயும் எதிர்பாப்புகள் நிறைந்தவையாயும் இருப்பதனைத் தவிர்க்கமுடியாது. தொண்ணூறுகளில் வெளிவந்த "நல்லை முருகன் பாடல்கள்" என்ற ஒலிநாடா கவிஞர் புதுவை இரத்தினதுரையின் பதினொரு பாடல்களைக் கொண்டுள்ளது. ஒருவித அவநம்பிக்கையும் கேலியும் இழையோடினாலும் அக்கால வாழ்வியலின் யதார்த்தத்தையும் துயரையும் விரக்தியையும் பிரதிபலித்து நல்லூரானிடத்திலான தமது எதிர்பார்ப்பையும் வேண்டுதல்களையும் சுமந்தவையாக அவை அமைந்திருப்பதனை உணரலாம். இசைவாணர் கண்ணனின் இசையும் வர்ணராமேஸ்வரனின் காந்தக்குரலும் கவித்துவம் நிறைந்த அந்த வரிகளோடு இணைந்து கேட்போரின் உள்ளத்தை உருகவைக்கின்றன. "ஏன்முருகா நீலமயில் ஏறிவரவில்லை, எங்கள் துயர் உன்விழியில் இன்னும்படவில்லை" என வினாவெழுப்பும் புதுவையின் ஒருபாடல்

"வேலெடுத்தும் வீதியிலே தேரெடுத்து வருவாய்
வேதனைகள் தீருமென்றோர் ஆறுதலைத் தருவாய்
காலெடுத்து நீ நடந்து கண்ணெதிரே வருவாய்
கண்டபகை போயெரிய வந்து அருள் புரிவாய்" -

என்ற கோரிக்கையை முன்வைக்கின்றது. அவ்வாறே பிறிதொரு பாடல்

"தேரிலேறினாய் தினமும் தீர்த்தமாடினாய் இன்று
தெய்வயானை தோளைப் பற்றி மாலை சூடினாய்
மாரியாகினாய் வண்ண மலர்களாகினாய் நீ
தமிழ் மக்கள் துன்பம் தீர என்று மயிலிலேறுவாய்"

- என வினா எழுப்பிநிற்கிறது. மேலும் அப்பாடல்,

"நான் அழுத கண்மழையில் வீதியெங்கும் வெள்ளம்
நாயகனே ஏன் இரங்கவில்லை உன்தன் உள்ளம்
வானமரர் குறைதீர்க்க வந்தமயில் எங்கே
வாமுருகா என்றழைத்தேன் வந்தெழுவாய் இங்கே"

- என உருக்கமாக தம்கோரிக்கையை முன்வைப்பதனைக் கண்டு சிலிர்க்கிறோம். இலக்கியங்கள் காலத்தின் கண்ணாடி என்பதனை இப்பாடல்கள் வெளிப்படுத்தி நிற்கின்றன.

நல்லூர்க் கந்தனைப் போற்றிப் பாடப்பட்டுள்ள ஏராளமான பாசுரங்கள் எம்மத்தியில் உள்ளன. அவை நல்லூரானை வர்ணிப்பவையாக, போற்றுபவையாக, தலச்சிறப்பைப் பேசுபவையாக, தத்துவ விசாரத்திலீடுபடுபவையாக, தமது கஷ்டங்களைத் துயரங்களைக் கந்தனிடம் முறையிடுபவையாக, கோரிக்கைகளையும் வேண்டுதல்களையும் முன்வைப்பவையாக இருப்பதனைக் காண்கிறோம். இப்பாசுரங்களுள் பல கவித்துவம் நிறைந்த இலக்கியங்களாக அமைந்திருப்பதனை மறுப்பதற்கில்லை. ஆனால் இவை தேடுவாரற்று இருப்பதுதான் வேதனையானது. இவற்றைத் தொகுத்து, பலரும் பாடிப்பரவ வழிவகை செய்தல் சிறப்பானது. இந்த இலக்கியங்கள் ஒவ்வொன்றும் தனித்தனியானதும் விரிவானதுமான ஆய்வுக்குரியன.

# முருகனின் 16 திருக்கோலங்கள்



முருகப் பெருமானின் திருக்கோலங்களில் 16 வடிவங்கள் பிரபலமானவை. அவை வருமாறு:-

**ஞானசக்திதரர்**

முருகப்பெருமானின் ஆறுபடை வீடுகளில் ஐந்தாம் வீடான திருத்தணியில் எழுந்தருளக்கூடிய முருகப்பெருமானின் வடிவத்திற்கு 'ஞானசக்திதரர்' என்று பெயர். இவரை வழிபடுவதால் நல்ல ஞானமும், நினைத்த காரியங்களுக்கு வெற்றியைத் தருவார்.

**கந்தசாமி**

பழனி மலை மீது நின்ற கோலத்தில் பாலதண்டாயுத பாணியின் திருவடிவத்தில் காட்சி தருவதை 'கந்தசாமி' வடிவமாகும். இந்த வடிவத்தை வழிபடுவதால் சகல காரியங்கள் சித்தியாகும்.

**ஆறுமுக தேவசேனாபதி**

'ஆறுமுக தேவசேனாபதி' என்ற வடிவத்தை வழிபடுவதால் மங்கலங்கள் உண்டாகும்.



**சுப்பிரமணியர்**

சுப்பிரமணியனை வணங்கினால் வினைகள் விலகி, ஆனந்தத்தை அருள்வார். நாகப்பட்டினம் திருவிடைகழியில் அருள்பவர் இவரே.

**கஜவாகனர்**

கஜவாகனரை வழிபட்டு வர துன்பங்கள் விலகி நற்பலன் கிடைக்கும். மேல்பாடி, திருமருகல், சிதம்பரம் நடராஜர் கோயில் ஆகிய கோயில் கோபுரத்தில் யானை மீது அருளக்கூடிய கஜவாகனர் முருகப் பெருமானை தரிசிக்க முடியும்.

**சரவணபவர்**

'சரவணபவர்' மங்கலங்களை அருள்வார். கொடை, ஒலி, சாத்வீகம், வீரம் உள்ளிட்ட நற்குணங்களை அருளக்கூடியவர்.

**கார்த்திகேயன்**

கார்த்திகேயரை வழிபடுவதால் சகல சௌபாக்கியங்கள் பெறலாம். குறிப்பாக கார்த்திகை நட்சத்திரத்தில் வழிபட்டால் மேலும் விசேஷமானது.

**குமாரசாமி**

குமாரசாமி முருகனை வழிபடுவதால் ஒருவரின் ஆணவம் பொடிபடும். கங்கை கொண்ட சோழபுரம் சிவாலயத்தில் குமாரசாமி திரு உருவத்தை பஞ்சலோக விக்கிரகமாக தரிசிக்கலாம்.



**சண்முகர்**

திருச்செந்தூர்க் கோயிலில் சண்முகர் திருவுருவில் காட்சி தருகிறார். இவரை வழிபட சிவ பார்வதியை வணங்கிய பலன் கிடைக்கும்.

**தாரகாரி**

முருகனுக்கு ஹதாரகாசுரன்" என்னும் அசுரனை அழித்ததால் இந்த திருப்பெயர் வந்தது. இவரை வழிபட்டு வர உலக மாயைகளிலிருந்து விடுதலை தருவார்.

**சேனானி**

பகை, பகைவர்கள், பொறாமையை அழித்து நல்ல எண்ணத்தை அருளக்கூடியவர் முருகனின் 'சேனானி' திருவுருவம்.

**பிரம்மசாஸ்தா**

முருகனின் பிரம்மசாஸ்தா திருவுருவத்தை





வணங்கினால் கல்வி, கேள்வியில் சிறப்படையலாம்.

**வள்ளிகல்யாணசுந்தரர்**

திருமணத் தடைகளை அகற்றக்கூடிய வள்ளி கல்யாணசுந்தரர்.

**பாலசுவாமி**

இவரை தரிசித்தால் உடல் அங்கக் குறைபாடுகளை அகற்றுவார். அதே போல் தீராத நோய் விலகும்.

**சிரவுபஞ்சபேதனர்**

இந்த இறைவனை வழிபட்டால் துன்பங்கள் விலகும். மனச்சஞ்சலம் நீங்கும்.

**சிகிவாகனர்**

சிகி என்றால் மயில். மயில் வாகனத்தை கொண்ட தெய்வம் முருகன். மயில் மீது அமர்ந்து அழகாக காட்சி தருபவர் சிகிவாகனர். இவரை வணங்கி வந்தால் மகிழ்ச்சி நிறைந்த வாழ்வைத் தருவார்.

# நல்லூர் கந்தன் ஆலயமும் மாப்பாண முதலியார்களும்



நல்லூர் கந்தசுவாமி கோயிலை மீண்டும் நிறுவி பெருங்கோயிலாக மாற்றிய பெருமை மாப்பாண முதலியார்களுக்கு உண்டு.

இவர்கள் யாழ்ப்பாணத்து அரசர்களான ஆரிய சக்கரவர்த்திகளின் காலத்தில் நகரேஷூ காஞ்சியிலிருந்து குடியேறியவர்கள். அரச சபையில் முக்கிய பிரதானிகளாக இவர்கள் திகழ்ந்தனர் என்று கூறப்படுகின்ற போதும் இந்தத் தகவலை உறுதி செய்ய முடியவில்லை.

இவர்கள் வசம் பரம்பரை வேலும், கந்த புராண ஏடும் ஆத்மார்த்த பூசையில் வைத்து பாதுகாக்கப்படுகிறது என்று கூறப்படுகின்றது.

கோயிலை அமைத்தவர் தொட்டு இன்றுவரை மாப்பாண பரம்பரையினர் 11 பேர் ஆலயத்தை நிர்வகித்து வருகின்றனர் அவர்களின் விவரங்கள் வருமாறு,

**ஆலய நிர்மாணம்**

*முதலாம் இரகுநாத மாப்பாண முதலியார் (1734 - 1750)*

**செங்கல் கோயில் அமைப்பு**

*இரண்டாம் இரகுநாத மாப்பாண முதலியார் (1750 - 1800)*

**விநாயகர், வைரவர் சந்நதி அமைப்பு**

*முதலாம் ஆறுமுக மாப்பாண முதலியார் (1800 - 1839)*

**பெருந்திருவிழா ஆரம்பம்**

*மூன்றாம் இரகுநாத மாப்பாண முதலியார் (1839 - 1860)*

*கந்தையா மாப்பாண முதலியார் (1860 - 1890)*

*சங்கரப்பிள்ளை மாப்பாண முதலியார் (1890 - 1915)*

**சண்முகர் திருவுருவம் நிறுவியமை - உள்பிரகார திருப்பணி**

*இரண்டாம் ஆறுமுக மாப்பாண முதலியார் (1915 - 1821)*

**முத்துக்குமார சுவாமி திருவுருவம் நிறுவுதல், சண்முக புஷ்கரணி திருக்குளம் அமைத்தல்**

*நான்காம் இரகுநாத மாப்பாண முதலியார் (1921 - 1945)*

**இராஜகோபுர திருப்பணி, தற்போது உள்ள தேர் அமைக்கப்பட்டமை**

*சண்முகதாஸ மாப்பாண முதலியார் (1946 - 1964)*

**வடக்கு, தெற்கு இராஜ கோபுரங்கள் நிர்மாணம், தங்க விமானம்(கூரை), தங்க வாகனங்கள் உருவாக்கப்பட்டமை**

*குமாரதாஸ மாப்பாண முதலியார் (1965 - 2021)*

**குபேர திக்கு ஸ்ரீ குமார கோபுரம் நிர்மாணம்**

*சயந்தன மாப்பாண முதலியார் (2021 முதல்)*